www.padippakam.com

# சுரணை

ஜூலை, 1995.

விலை ரூ. 8.

படிப்பகம்

www.padippakam.com

# நிஷாவுக்கு நகுலன் கடிதம்

நண்பர்க்கு,

உங்கள் பொறுமையைச் சோதிக்க நான் விரும்பவில்லை. உங்கள் 'முகங்கள்: கவனம்' குறித்து சில வார்த்தைகள் – என் வழியில்- இரண்டாவது வாசிப்பில்.

இன்று விமர்சனத்தின் வளர்ச்சியில் அவரவர் வழி அவரவர்க்கு. என் சாயலில்தான் நான் இக்கவிதைகளைப் பார்க்க முடியும். உங்கள் கவிதைத் தொகுதி முழுவதையும் ஒவ்வொரு கவிதையையும் அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து, ஒரு முன்கூட்டித் தீர்மானித்த ஒரு கருத்துச் சட்டத்துள் உங்கள் கவிதைகளை அடைக்க விரும்பவில்லை. உங்கள் கவிதைகளில் எனக்குப் பிடித்த சிலவற்றைக் குறித்து விமர்சனக் குறிப்புகள்.

முதல் கவிதை ''அப்போதே' என்று தொடங்கி அவ்வாறே முடிகிறது. இப்போதும் அப்போதும் ஒன்றாக இன்றும் சென்று கொண்டுதானிருக்கிறது. ஏன்? எது உன்னை இப்படிப் பிடித்து நிறுத்துகிறது? அமைப்பை நோக்குகையில் சொல்லாமல் விட்டதில்தான் கவிதையின் சிறப்பு. மரபு வழியில் கவிதை என்பதிலேயே சில வரிகள் நம் பிரக்ஞையில் என்றென்றும் சுழன்று கொண்டிருக்கின்றன. இக்கவிதையிலும் அத்தகைய சில வரிகள்.

வலுக்கலாம் வலுக்கும்
மேலும் மேலும்
வலுத்துவிட்டது (எது?)
காத்திருப்புகளில்
நிமிஷங்கள்தான் நீடிக்கும்.

என்று சொல்கையில்? ஒரு சிறந்த கவிதை. கவிதைக்கு ''அர்த்தம்'' உண்டென்றால் அது

—பின் அட்டை உள் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# கவிதாசரன்

ஆண்டுச் சந்தா ரூ. 60.
ஆயுள் சந்தா ரூ. 600.
சந்தாவை M. O. செய்க.

படைப்பிலக்கிய மாத இதழ் ★ ஆசிரியர்: கவிதாசரன்

முகவரி:
ஆசிரியர், "கவிதாசரன்", 31, டி.கே.எஸ். நகர், சென்னை–600 019.
தொலை பேசி எண்: 54 44 99

மரத்தின் ஒரு கிளையை வெட்டினால் வெட்டுவாயைச் சுற்றி நூறு கிளைகளுக்கான மொக்குகள் துளிர்க்கும். மரமே விழுந்தால்? புதிய கன்றுகள் வேர் பிடித்தாலன்றி பொட்டல் வெளிக்கான வெற்றிடம்தான் மிஞ்சும். தமிழை முன்னெடுத்து, தமிழனை நேசித்து வாழப் பயின்ற

**குன்றக்குடி அடிகளார், பெருஞ்சித்திரனார்**

மண்ணுக்கு உரமாயினர். இருவரும் அவரவர் தளத்தில் புதிய எல்லைகளைத் தொட்டவர்கள். அவர்தம் கல்லறை விளக்குகள் நம்மைச் சுட்டால் தேவலை. நம் சுரணையை நன்றாய்த் தொட்டால் தேவலை.

அவர்கள் அரசியல் என்னவாகட்டும். நம் சுரணைக்கும் சிந்தனைக்கும் "புதிய கலாச்சாரம்" சாணைக்கல்லாகலாம். தேடிப் படிக்கலாமே.

இதழுக்குத் தாமதம் அணியல்லதான். நிதானப்படத் தேவையாயிற்று.

"மனித நேயப் பார்வையோடு, தமிழின்
கலாச்சார - பண்பாட்டு மதிப்பீடுகளை
இலக்கியத் தேடலாக்கும் இதழியக்கப்
பயணம். தமிழுக்கான பரிமாணங்கள்
யாவும் இதழுக்கான திசைகளாகும்.

ஜூன் - ஜூலை, 1995. இதழ் விலை ரூ. 8.

படிப்பகம்

www.padippakam.com


## கல்யாண்ஜி

வரிசை குலையும் நிகழ்ச்சி நிரல்களால்
சுவாரசியம் அடையும் அன்றாடம் நம்முடையது.
விடுமுறைக்கு ஊருக்குப்போன பிள்ளைகளின்
கடைசி தினக் கேள்வித்தாள்
படபடக்கிறது
'பரீட்சை அட்டை' க்ளிப்பில் இருந்து.
என் பெயர் சொல்லிக் கூப்பிட்டபடி
என்றைக்கோ வருகிற சிநேகிதன் நீ.
இந்த அகாலம் ஒரு பொருட்டல்ல.
கலவிக்குத் தளர்த்திய உடைகளைச்
சரி செய்து கொள்ளும் அவகாசம் மட்டும்
எங்களுக்குத் தேவையாக இருந்தது
கதவு திறக்கு முன்.
இங்கொன்று அங்கொன்றாக
இடம் பெயர்த்தின நாற்களிகளில் முதலில்
அமர்வோம். அப்புறம் தரையில்.
தலையணை முதுகுக்கு இட்டு.
மிஞ்சின பாலை உரை ஊற்றியாயிற்று.
நாம் இன்று கருப்புத் தேநீர் குடிப்போம்.
கூர்காக்கள் விசிலூதிச் செல்லும்போது
பக்கத்துப் பட்டறைகளின் 'வெல்டிங்' மத்தாப்புத்
தெறிக்கிறது உன் நரை முகத்தில்.
'பாடத் தெரிந்தவள் போலிருக்கிறாள் உன் மனைவி'
என்று நீ சொல்லும்படி இருந்தது
நம் பேச்சைக் கேட்டுக் கொண்டே அவள்
தூங்கிவிட்ட அந்தப் பின்னிரவு.
சிறுநீர் கழிக்கத் தகரக் கதவு திறந்து
சென்றபோது பார்த்த நட்சத்திரம்
குளிர்ந்த காற்று அனுப்பியது.
கிணற்றை நோக்கிக் குனிந்திருந்தாய்.
'எங்கள் வீட்டு கிணறு தெரிகிறது
வேப்பிலை மிதக்க' என்று நீ குரல் கம்மச்
சொல்கையில் நான் ஆழ்ந்து புகைக்கிறேன்.
நம்மில் யாரேனும் ஒருவர் வயலின் வாசிக்கத்

படிப்பகம்

www.padippakam.com



தெரிந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்
என்று தோன்றிற்று ஒருவித துயரத்தில்.
வீட்டுக்குள் திரும்ப வருகையில்
விடிகிற பொழுது ஆகிவிட்டதுதான்.
ஆனாலும், அவ்வளவு பொறுப்பாக
நீ தேதியைக் கிழித்திருக்க வேண்டாம்.

மலையாள மூலம்: தமிழில்:
**சச்சிதானந்தன் சிவமணி**

## வழிகாட்டி

எங்களுடைய வழிகாட்டிக்கு
புத்தியில்லாமல் இல்லை.
நெருக்கடி நேரங்களில்
பேச்சு வராது என்பது மட்டுமே.
அவரின் பின்னால் அணிசேர்ந்து
நாங்கள் ஒரு நாற்சந்தியை அடைந்தபோது
அவர் வலது கையை நீட்டினார்.
நாங்கள் வலப்பக்கம் திரும்பினோம்.
சில நிமிடங்கள் சென்றபின்,
ஒரு பெரிய மலையின் முன் சேர்ந்தபோது
நிழலில் இருந்துகொண்டு அவர் கேட்டார்:
'நீங்கள் ஏன் இடப்பக்கம் போகவில்லை?'

போருக்கிடையே அவர்
ஒரு காலை பின்னே வைத்து
கையை மேலே உயர்த்தித் தாழ்த்தினார்.
நாங்கள் துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு
திரும்பி ஓடி வீட்டுக்குள் புகுந்ததும்
மின்விசிறியின் கீழிருந்துகொண்டு அவர் கேட்டார்.
"ஏன் நீங்கள் சுடவில்லை?"

நாங்கள் ஆற்றைத்தேடி
அவரின் பின்னே போனோம்.
பாலைவனத்தை அடைந்தபோது

படிப்பகம்

www.padippakam.com



அவர் வாதிட்டார்
அதுதான் ஆறு என்று:

அவருடைய ஆணையையேற்று
நாங்கள் கொன்றது எங்களின் வீரர்களை
என்பதை அறிந்த போது,
அவர் சொன்னார்,
அவர்கள்தான் எதிராளிகள் என்று.

இறுதியில் நாங்களாவே வழியைக் கண்டுபிடித்தோம்
உறவினர்களையும் பகைவர்களையும்
அடையாளம் கண்டு கொண்டோம்.
நாங்கள் வெல்வோம் என்பது உறுதியானபோது,
அவர் சொன்னார்
அவர் சொல்லிக் கொண்டிருந்தது
இப்போதாவது எங்களுக்குப்
புரிந்ததே என்று.
இருந்தாலும் அவர்
எங்களுடைய கொடியைப் பெற்றுக் கொண்டு
முன்னோக்கி நடந்தார்.

## மகுடேசுவரன்

நெருக்கியடிச்சு
வேத்துப்பூத்து
ஆப்பனவரா காத்துக்கிட்டிருக்கம்.
டிக்கிட்டு குடுங்கடா.

செய்தியாம்
காந்தியாம்
உயிரெடுக்கறானுங்கடா
படத்தப் போடுங்கடா

ஊய்... ஊய்... ஊய்... ஊய்... ஊய்...

படிப்பகம்

www.padippakam.com



ஜிஞ்சினாக்கிடி... ஜினுக்குனாக்கிடி...
ஊருக்கு ஒலைக்கிறது
எனக்குத் தெரியுண்டா —டேய்
நாலைக்கி நடக்கிறது
யாறுக்குத் தெரியுண்டா —டேய்
யாறுக்குத் தெரியுண்டா.

தேசத்தக் கெடுத்துக் குட்டிச்சொவுறாக்கி
அறாஜகம் பன்னி ஆட்டம் போட்டுக்கிட்டிருக்கிற
அவனுங்கல அளிக்காம வுடமாட்டேன்.
இது சிதயில எறிஞ்சிக்கிட்டிருக்கிர
எந்தாயி மேல ஆணை.

பூமேல கல்லத் தூக்கிப் போட்டாம்மா
பூ தாங்குமாம்மா...?
தாங்காதும்மா.
அப்படிப்பட்ட பூம்மா இந்த அன்னன் மனசு.

ஆண்: மானே உனக்கு மல்லி
கொண்டபந்து கொடுப்பேன்.
குழு: ஹோய்... கொண்டாந்து கொடுப்பான்.
பெண்: மாமா உன்கிட்ட மட்டும்
மல்லாந்து படுப்பேன்.
குழு: ஹோய்... மல்லாந்து படுப்பா.

ஊய்... ஊய்... ஊய்... ஊய்... ஊய்...

அஞ்சு பாட்டு
ஆறு பைட்டு
தொறந்து காட்டும் சூப்பர் சைட்டு
பதினார் ரீலு
போயிப் பாரு.

படிப்பகம்

www.padippakam.com



## நட்சத்ரன்

### 1.

எதிலும்
பற்றில்லாதது மாதிரி பேசினாலும்
உன் முகம் பார்க்கும் கணம்
வந்துவிடுகிறது வாழ்வாசை.
நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில்
நீ வந்தால்
குழறி நின்றுபோகிறது நாக்கு.
நீ ஊருக்குப் போகும் சமயந்தான்
புலம்புகிறேன் எல்லாரிடமும்
வாழ்வில் என்னயிருக்குதென்று.

### 2. ஒரு கேள்வி

எந்த உச்சியையும்
தொட்டுவிடலாம் முயன்றால்.
பிரச்னை ஒன்றுமில்லை...
என்ன ஒன்று—
தொடக் கிளம்புமுன்
ஏன் தொடவேண்டுமென்பதையும்
கேட்டுக்கொண்டால் நல்லது—
தனக்குத்தானே.

### 3. கற்பனைகள்

இந்த வேலையை
பாதியில் விட்டுவிட ஆசைதான்...
குடும்பமும் உறவென இருப்பதும்
அதிரும்.
அதிர்வதாய் நடிக்கும் தெரு.
சக ஊழியர்கள்
ஆதங்கப்படுவார்கள்—
கஷ்டப்படாமல் போயிட்டானே என்று.
இஷ்டத்துக்கு அலையலாம்

படிப்பகம்

www.padippakam.com



கண் காணா இடங்களில்...
என்றாலும்
இது மாதிரிக் கற்பனைகள்
ஒரு பேரதும் பலிப்பதில்லை என்பதுதான்
இதிலுள்ள சோகம்!

## 4. பலம்

பகல் முழுக்க
மண்ணைப் புரட்டிய புல்டோசர்
ஓல்வெடுக்கிறது
சாலையோர இருட்டில்.
இப்ப நினைத்தால்
ரெண்டு கையாலும் புரட்டிடலாம் அதை
என்றொரு நினைப்பு
மனதின் மூளையில்.

சூர்யா

## பெரும் பயணம்

சிதறிய பட்டாசின்
காகித சதைகள் மீது
ஊர்வலக் கால்கள்—
மன விளிம்பில் சப்பனமிட்டது
சப்த சந்தோஷம்.

தெருவின் தேய்மானங்களுக்கு
ஒத்தடம் கொடுத்தபடி...
உதிரிப் பூக்கள்

அந்த நாள் போரை
அடையாளம் காட்டியது—
ஐய்யனார் ஊதிய சங்கு.

படிப்பகம்

www.padippakam.com



இறைத்த சில்லரையைப் பொறுக்கும்
சிறார்களின் உள்ளங்கையில் பணவாடை.

இழுத்து கட்டிய எருதின் தோலில்,
ஒழுகிய பறையின் ஓசையில்,

பரபரத்த கால்களில்,
'டப்பாங்குத்து' ஆட்டத்தில்
பிரசன்னமானது 'ஓயோவின் டைனமிக்'.

"கொய்ந்தா... கோய்ந்தா!"
இங்காவது இருப்பானா?
இப்படியும் ஓர் இறைதேடல்—
காணாமல் போன பிள்ளையைத் தேடும்
தாயாரைப் போல.

மரணத்தைச் சுமந்தப்படி செல்லும்
பிணத்தின் உதட்டிலும்
ஈக்களின் முத்தம்.

எனக்கும் எதைப்பற்றியும்
கவலையில்லை— கால்களின்
கட்டவிழ்த்தால் போதும்.....
'பாடையில் தலை கீழாய்த்
தொங்கிக்கொண்டு வரும் கோழியின்...'

## தி. கமலி

### 1. ஆயுள் ரகசியம்

பேச்சு கேட்கும் வயதல்ல.
பேசுவது உயரதிகாரி என்கையில்
எப்படி நான் மறுத்துச் சொல்ல?
மனக்குமுறலை அகத்தடக்கி
ஆயிரத்தெட்டு டென்ஷன்களோடு

படிப்பகம்

www.padippakam.com



அலுவலகத்திலிருந்து வீடு வந்தால்
அங்கேயும் எதிர்கொள்ளும்
தீர்வற்ற சிக்கல்கள்.

அத்தனையோடும் போராடி
நாற்பதைத் தொட்டபோது
டயபடீஸ், ப்ரஷர்,
வீக்கான என்லார்ஜ்டு ஹார்ட்டில்
வந்த மைல்ட் அட்டாக்குடன்
அல்சரும் சேர்ந்து கொண்டதால்,
கவனம் வேண்டுமென்ற
எச்சரிக்கைக் குரல் எதிரொலிக்க
இயந்திர வாழ்வினின்று விலகி
மருத்துவ விடுப்பில், இல்லத்தில்
'பெட் ரெஸ்ட்டில்' இருப்பு கொள்ளாது,
சரிந்து கையூன்ற, சாளர வழி
பார்வை ஓடியது.

'கொண்டு வந்தது ஏதுமில்லை;
கொண்டு போவது ஒன்றுமில்லை;
படைத்தவன் படியளக்க மாட்டானா?
போடு பாரத்தைக் கடவுள் மேலே.'

தீர்மானக் குமிழ் சிரிப்போடு
பாக்குவெட்டியால் பாக்கை நறுக்கி,
சின்ன உரலில் வெற்றிலை குத்தி,
உள்ளங்கையில் தேய்த்துருட்டி,
பல்லில்லா பொக்கை வாய்க்குள்
லயிப்போடு செருகித் திணித்து
அசைபோடும் என் கொள்ளுப் பாட்டியின்
நோயணுகாத
ஆயுளின் ரகசியம்
அம்பலமாவதைப் போலிருந்தது
மௌடிக முடி தாங்கி.

படிப்பகம்

www.padippakam.com



## கொம்ப மாடசாமி

## குட்டக் குட்ட...

சாணி தெளித்த கடை முற்றத்தில்
குத்துக்காலிட்டுக் குடும்பத்துடன்
ஊதி ஊதி காப்பி குடிக்கும்
என் வயதொத்த அவனிடம்
பன்றியின் விதைப்பைகளில் புழுவகற்றும்
பாலச் சுவரில் தீட்டியெடுத்த
மின்னும் மடக்குக் கத்திகள்
எப்போதும் இருக்கும்.

நிலம் விழுந்து கும்பிட்டுக் கேட்கும்
அம்மையைக்
கூட்டிக்கொடுத்து பணம்தர
உபாயம் சொல்லும் காய்த்து
விரிந்த விரல்கள்
தழும்பேற முகத்தில் அறைந்து மீள
அவன் குப்புறச் சரிந்து விழுந்தபொழுது
குவளை சிதறித் தெறித்தோடியது.

விலக்குத் தீர்க்க ஆள் வேண்டி
'ஊர்த் தவப்பன்மார்தான்
பிள்ளயக் காப்பாத்தணும்' எனக்
குரல்வளை நெறியத் துடித்த அவன் பேச்சு
வாய் நிறைந்து வழியும் செங்குருதியைப்
பற்களில் படர்த்தியது.

அடி பொறுக்காது குனிந்து சரியும்
அவனது இடைவாரின் மடக்குக் கத்தி
பிரிக்கப்படாமலேயே இருக்கிறது
இன்னும்—

அடி தொடர்ந்து விழுகிறது.
நிற்பதாயில்லை.

படிப்பகம்

www.padippakam.com



# ஆசி

ஆப்பிரிக்காவில்
ஓர்
கருப்பின சிறுவனோடு
கட்டற்று திரிந்த போது
எங்கோ
காற்றின் கடைக்
கோடியிலிருந்து கேட்டது
இளையராஜாவின் பாடல்.
அங்கும்
தமிழர்கள்.

பிரான்சில்
பிரெஞ்சுக்காரியோடு
விழிபிதுங்கி நின்றபோது
எங்கிருந்தோ
காற்றின் மையத்தில்
உரக்க
உரைக்க ஒலித்தது
காசி ஆனந்தனின்
புரட்சிப் பாடல்.
அட
இங்கும் தமிழர்கள்.
ஆம்.
எங்கும் தமிழர்கள்.
தமிழர்களை
யார் யாரோ
நசுக்க நசுக்க
மூட்டைப் பூச்சிகளாய்ப்
பல்கிவிட்டார்கள்.

இப்போது
அவர்கள்
உலகமெங்கும்
பறவைகளாய்ப்
பாடிக்கொண்டு...

படிப்பகம்

www.padippakam.com

# கடிதங்கள்

## பூம் பூம் ஷக்கலக்க...

தமிழவனும் நாகார்ஜுனனும் எதையெதையோ தின்றுவிட்டு ஜீரணப்படாமல் இன்டெலக்சுவல் அமைப்பியல் டிசென்ட்ரியால் அவதிப்படுவதாக சாருநிவேதிதா சொல்கிறார். அது சரியோ தவறோ, ஆனால், இவர் எதைத் தின்றுவிட்டு, சாதாரண பொதுப் புத்தி கேள்விகளுக்கும்கூட தாக்குப் பிடிக்க முடியாத 'கருத்து' களை அமைப்பியல் பெயரால் வாந்தி எடுத்து வைத்திருக்கிறார் என்பதுதான் தெரியவில்லை.

சுஜாதா குரலில் vulgarity இருந்ததாம். அவர் எழுத்து இலக்கிய மாகவும் இல்லையாம். வெறும் pulp தானாம். ஆனாலும் அது ஒரு கால கட்ட crisisஇன் youthful protest voiceஆம்! என்ன புடலங்காய் protest? நாலு உதாரணம் எடுத்து விட்டிருக்க வேண் டியதுதானே சாருநிவேதிதா. பெரிய பத்திரிகைகளில் இடம் பிடிக் கும் மோகத்தில் செய்யும் சில்லறைத்தனங்களின் சில்லறைத்தன மான பால் மாற்றிக் கொள்ளும் உத்தியைக் கொஞ்சம்கூட வெட்க மற்றுக் கையாண்டு, உள்ளே நுழைந்த ஒரு கருத்துலகக் கோழை தனது 'இலக்கியமல்லாத' ஒரு pulp, vulgarity குரலில் எதனை எதிர்த்து என்ன நாணயமான protest செய்திருக்க முடியும்? வேண்டுமென்றால் ஆபத்தில்லையென்று தெரிந்து கொண்டு அந்த protestஐயும் ஒரு விற்பனைப் பொருளாக்கிக் காசு சேர்த்திருக்க லாம். அவ்வளவுதான்.

சாருநிவேதிதா சொல்கிறார்: "ஆக, சுஜாதாவின் எழுத்தை கழிசடை - மலம் என்று திட்டுவதைவிட, அதை ஒரு கலாச்சார அரசியல் சமூக தளத்தில் வைத்துப் பார்ப்பதே ஆய்வாளர்களின் வேலையாக இருக்க முடியும்."

அப்படியானால் இவர் அப்படியெல்லாம் பார்க்காமல்தான் vulgar, இலக்கியமற்றது, pulp என்றெல்லாம் சொல்லியிருக்கிறாரா?

என்ன இருந்தாலும், சாருநிவேதிதா தன்னை இவ்வளவு பெரிய கொம்பாக நினைத்துக் கொள்ளக்கூடாது. இவருக்கு பாட் டனெல்லாம் இங்கே உண்டு என்பதை இவர் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். எல்லாரும் இவர் சொல்கிற, இவருக்கு சொல் லத் தெரியாத தளங்களில் எல்லாம் வைத்துப் பார்த்துவிட்டுத்தான் சுஜாதாவைத் தூக்கி வெளியே போட்டிருக்கிறார்கள்.

மிகக் குறுகிய வட்டத்தில் இருந்த வாசிப்பு என்பதை விரிந்த அளவில் விஸ்தரித்தது என்ற முறையில் சுஜாதாவோடு கல்கி, தமிழ்வாணன் போன்றவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டு மாம். தினத்தந்தியும் இதே சாதனையைச் செய்திருக்கிறதாம். இவர் கேட்கிறார்: "கல்கியையும் சுஜாதாவையும் வாசிக்கிறவர்க ளிடமிருந்து அவர்கள் வாசிப்பைப் பிடுங்கிவிட்டால் அந்த வாசக

படிப்பகம்

www.padippakam.com



ஜனங்களுக்கு நம் அமைப்பியல் பிரதர்ஸ் என்ன கொடுக்கப் போகிறார்கள்? கடவுள் இல்லையென்று சொல்லி குழந்தைகளிட மிருந்து தீபாவளியைப் பிடுங்க முடியுமா? பிடுங்கினால் அவர்க ளுக்கு நாம் தரப்போவது என்ன?''

முதலில் கல்கி, சுஜாதா வாசகர்கள் குழந்தைகள் அல்லர். குழந்தைகளைப் படைக்கும் அளவுக்கு வளர்ந்தவர்கள். ஆகவே இது ஒரு தந்திரமான மொண்ணை உதாரணம் என்பதை நம் பங்கிற்கு சொல்லிவிட்டு, மீதிக்கு இவர் போற்றும் திராவிட இயக் கத்தின் முதலும் கடைசியுமான 'புத்திஜீவி' பெரியாரைக் கொண்டு வந்து நிறுத்தலாம்.

ஒரு முறை இப்படித்தான் அன்றைய இளைஞர் கா. ராஜாராம் பெரியாரிடம் மெல்ல, ''கடவுள் இல்லையென்று சொல்கிறீர்களே, அதற்கு மாற்று நாம் காட்ட வேண்டாமா?'' என்று கேட்டிருக்கி றார். அதற்குப் பெரியார் சொன்னாராம், ''அட என்னய்யா, வாசல்ல புள்ள அசிங்கம் பண்ணி வச்சிருக்கு, அத அள்ளி தூரப் போடுன்னு சொன்னா, நீ அத எடுத்துட்டு அந்த எடத்துல எத வைக்கிறதுன்னு கேக்கிறியே,'' என்று.

கடவுள் விஷயத்தில் இந்த பதில் எப்படியோ, ஆனால் இங்கு சாருநிவேதிதா குறிப்பிடும் பத்திரிகைகள், எழுத்தாளர்கள் விஷயத் தில் இதைவிட நெத்தியடி உதாரணம் வேறு என்ன இருக்க முடியும்?

இவர்களது எழுத்து இல்லாவிட்டால் நமது மாமிகள் பல்லாங் குழி விளையாடிக்கொண்டிருந்திருப்பார்கள். அத்திம்பேரெல்லாம் சீட்டு. அது எவ்வளவு உத்தமமான காரியமாக இருந்திருக்கும்!

ஒரு குறிப்பிட்ட காலம், ஒரு புதிய வாழ்க்கை சாதனத்தை (இங்கே பத்திரிகை) கொண்டு வந்து, தன்னைப் புதிய காலமாக நிறுவும்போது அதை மனுஷ மேன்மைக்குப் பயன் படுத்துவதற்குப் பதிலாக அவனை மேலும் கீழே தள்ளுவதற்குப் பயன்படுத்து வதை எப்படி அங்கீகரிக்க முடியும்?

மேலும் இவர் தினத்தந்தியையும் தொட்டிருப்பதால் வானம் பாடிக் கவிஞர் அக்கினிபுத்திரன் ஞாபகத்திற்கு வருகிறார்.

அவர்தான் ஒருமுறை ஒரு கருத்தரங்கில், 'ராணி' பத்திரி கையின் ஆசிரியர், 'ரிக்ஷாகாரனையெல்லாம் பேப்பர் படிக்க வைத் தவர் எங்கள் ஆதித்தனார்' என்று சொன்னபோது, இவர் எழுந்து 'இல்லை பேப்பர் படிக்கிறவனையெல்லாம் ரிக்ஷாக்காரனாக்கியவர் அவர்' என்று சொன்னார்.

'ஆனானப்பட்ட' பின்-அமைப்பியல்வாதியான சாருநிவேதி தாவுக்கு இதற்கு மேலும் உதாரணம் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

இதைத்தானே சுஜாதா செய்தார் - செய்கிறார்?

படிப்பகம்

www.padippakam.com



அதுசரி, அதென்ன இவருக்கு சுஜாதா மேல் திடீரென்று இவ்வளவு கரிசனம்?

'தினமலர்' கதை மலரில் வருகிற இவரது சிறுகதைகள் குமுதத்திலும் வரவேண்டுமா?

அப்படி விரும்பினால் நேராகப் போய் அறிமுகம் செய்து கொண்டு கதையைக் கொடுக்க வேண்டியதுதானே. அதுதான் சிங்கப்பூர் டிக்கட்டுக்கு எழுதி, டிக்கட் கிடைக்காவிட்டாலும் பிரசுர வாய்ப்பு கிடைத்திருக்கிறதே. தொடர்ந்து பிடித்துக் கொள்ள வேண்டியதுதானே. எதற்காக தமிழவன், நாகார்ஜுனன், ரோலான் பர்த் என்று எல்லாரையும் இழுத்துக் கொண்டு?

ஒரு சந்தோஷமான தகவலும் கூட உண்டு. இந்த மாதிரி popular பத்திரிகைகளுக்குப் போவதற்காக இவர் வெட்கம் எதுவும் ( Supposeதான் ) படத் தேவையில்லை. ஏனென்றால், இதில் இவர்தான் முதல் ஆள் என்றில்லை. எல்லாரும் போய்விட்டார்கள். கோவை ஞானி, இன்குலாப், அவரு இவரு, கடைசியாக 'பொழுது போக்கு, கேளிக்கை என்ற பெயரில் கீழ்த்தர உணர்ச்சிகளுக்கு தீனி போடும் வெகு ஜன தொடர்பு சாதனங்கள்' என்று வர்ணித்த தி. க. சி. என்று எல்லாரும் விழுந்தாச்சு. (தி. க. சி. மேற்படி தகவல் சாதனம் ஒன்றின் கொள்கை உருவாக்குநர் ஒருவர் கையால் சிரித்துக் கொண்டே பொன்னாடை போர்த்திக் கொள்வதைக் கண்டு களிக்க, பார்க்க: ஏப்ரல், 95 சுபமங்களா-கடைசிப் பக்கம்.)

அதுமட்டுமல்ல, இந்தியா டுடே - 93 ஆம் ஆண்டு இலக்கிய மலர் கண்டு, சீறி சினந்து, கூட்டம் கூட்டி விவாதித்து, அது குண்டி துடைக்கத்தான் லாயக்கு என்று தீர்மானம் போட்டு, அந்த இதழை ஆளுக்குக் கொஞ்சமாகக் கிழித்துக்கொண்டு போன புதுவை வட்டார தமிழ் தன்மான இலக்கிய சிங்கங்கள் எல்லாம் இப்போது அதே காகிதங்களோடு சென்னை, மயிலாப்பூர், 98, டாக்டர் ராதா கிருஷ்ணன் சாலைக்கு வந்துவிட்டன. (Well done வாசந்தி! உங்கள் அடுத்த நாவலின் தலைப்பு என்ன? 'எலும்புகள்' -ம்?)

ஆகவே சாருநிவேதிதா நோக்கத்தில் கேவலம் ஒன்றுமில்லை. இவரது இந்த அருமையான கட்டுரையை 14 பக்கம் ஒதுக்கி பிரசுரித்திருக்கும் கவிதாசரணே அவருக்கு வாழ்த்துச் சொல்லி அனுப்பி வைக்கலாம். ஒரு ஐந்தாறு மாதங்களுக்கு முன் இந்த கவிதாசரணில் சுஜாதாவுக்கு ஜெயந்தன் செய்த damageக்கு பரிகாரம் செய்த மாதிரியும் இருக்கும்.

மதுரை- 9 எஸ். வரதராஜன்

●

படிப்பகம்

www.padippakam.com



## மிகவும் வருந்துகிறேன்...

மேடையேற்றப்பட்ட ஒரு நாடகம் குறித்து எழுதும் போது நாடகத்தின் ஆசிரியர் பெயரைக் குறிப்பிட வேண்டியது ஓர் அடிப் படைக் கடமை. ஜெயந்தனின் 'மனுஷா மனுஷா' நாடகம் பற்றி எழுதிய போது அதைச் செய்யத் தவறிவிட்டேன் என்று இப்போது துதான் தெரிந்தது. நான் மிகவும் வருந்துகிறேன். என் இய லாமை, ஆற்றல்குறைவு என்பதைத் தவிர வேறு எந்த அர்த்தமோ நோக்கமோ கிடையாது. ஜெயந்தனிடம் நான் மன்னிப்பு கோரு கிறேன்.

ஜெயந்தன் என்னை அறியாதவரல்ல. என்னிடம் அப்போதே ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் அந்தப் பத்திரிகையின் அடுத்த இதழிலேயே பரிகாரம் செய்திருப்பேன். இவ்வளவு நாட்கள் அவர் என் மீது வருத்தம் கொண்டிருந்தது எனக்கு மிகுந்த வருத்தம் தருகிறது.

ஒரு படைப்பின் எந்த ஒரு மதிப்பீடும் இறுதியானதல்ல. அதி லும் சமகாலப் படைப்புகளை எவ்வளவு கவனமாக மதிப்பீடு செய் தாலும் அறிந்த / அறியாத பல இழைகளின் பாதிப்பு இயக்கவே செய்யும். நாமெல்லோரும் நம் அனுபவங்களின் கைப்பாவைகள். ஆனால் நம் கருத்துக்கள் நம் அனுபவத்தைச் சார்ந்திருப்பது அவசியம்.

மீண்டும் என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல் யாணச் சந்தடியில் தாலி கட்ட மறந்தது போல என்பார்கள். அது வெறும் பழமொழியல்ல என்று தெரிகிறது.

சென்னை-17 அசோகமித்திரன்

●

## அடித்துவிடுங்கள்

'கவிதாசரண்' இதழ் நேற்று கிடைத்தது. நன்றி. வாழ்க் கைச் செலவுகள் சகலமும் உயர்ந்து கொண்டே போகின்றன. நாலரை முழ கைத்தறி வேட்டி விலை ரூ. 75. முடி வெட்டிக் கொள்ள மீண்டும் கூலி உயத்தப்படுகிறது, ரூ.15 லிருந்து ரூ. 1/ ஆக. அரிசி விலை, எண்ணை விலை, காப்பிப்பொடி விலை- எது தான் கூடவில்லை? ஆகவே, சாதாரண மக்களின் அன்றாட வாழ்வே சிரமங்கள் நிறைந்ததாகிவிட்டது. காகிதம் விலை பயங்க ரமாக அதிகரித்துவிட்டது; தாள் கிடைப்பதுமில்லை என்று 'சிற் றிதழ்' நண்பர்கள் தெரிவிக்கிறார்கள். இந்நிலையிலும் நீங்கள் 'இரண்டரை மடங்கு இழப்பையும் தாங்கிக் கொண்டு இதழை விடாது நடத்துவேன்' என்று உறுதியாகக் கூறுவது உங்கள் மனோ திடத்தை, கொள்கைப் பிடிப்பை, எடுத்த காரியத்தை நடத்தும் அர்ப்பணிப்புத் திறனை, வைராக்கியத்தை காட்டுகிறது. வாழ்க.

படிப்பகம்

www.padippakam.com



வல்லிக்கண்ணனுக்கு இதழ் அனுப்புவது வீண் என்ற எண்ணம் உங்களுக்கு வரும். அடுத்த இதழில் கூட அது வரலாம். அது தவறான எண்ணமும் ஆகாது. அவன் பெயரை அடித்து விடுங்கள்.

**சென்னை–5** **வல்லிக்கண்ணன்**

●

## வட்டத்துக்குள் அடக்குவது தமிழின் வளர்ச்சியா?

பிப்ரவரி - மார்ச்சு, 1995 'கவிதாசரண்' மிக கனமாகவே வெளிவந்துள்ளது. சாருநிவேதிதாவின் அட்டைச் செய்திக் கட்டுரையும், ஜெயந்தனின் 'தலித் பிரச்சினையும் இரண்டு முற்போக்கு எழுத்தாளர்களும்' - இவற்றிற்கெல்லாம் மகுடமாய்த் தங்களின் (எப்போதும் போல) ஆசிரியவுரை. நானும் ஒரு தாழ்த்தப்பட்ட பறையன். சிற்றிதழ்களின் (பெரும்பாலும்) மூலமாகவே எங்கள் பிரச்சினைகளையும் எங்களின் மீது மற்றவர்கள் தொடுக்கும் விமர்சனங்களையும் மதிப்பீடுகளையும் அறிய முடிகிறது. எங்கள் பிரச்சினைகளையும் வாழ்வியல் மதிப்புகளையும் எங்களைக் காட்டிலும் மற்றவர்களே (மற்ற சாதியினர்) உரக்கப் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். எங்களைப் பற்றி நாங்கள் பேசாதது, எழுதாதது எங்களின் அறியாமையா? அக்கறையின்மையா? அல்லது எங்களைப் பற்றிப் பேச - எழுத என்ன இருக்கிறது என்ற கண் மூடித்தனமா? இதைப்பற்றி நிறைய சிந்திக்க வேண்டும். படிக்க வேண்டும். எங்களைப் பற்றிய எழுத்துகளை ஒரு வட்டத்துக்குள் அ(டை)டக்க நினைப்பது தமிழின் வளர்ச்சியா?

**கோலார் தங்கவயல்** **த. செ. தமிழ்ச்செல்வன்**

●

## இதுவென்ன நிற முடிச்சு?

படைப்பாளியாய் மட்டுமன்றி நான் ஒரு தலித்தாய் இருப்பதால் என் படைப்பில் தலித் பிரச்சினை தார்மீக ஆவேசத்தோடும் ஜீவனோடும் இருக்கும் என்பது உண்மை. அதற்காக காலங்காலமாய் சுமந்து வரும் ஆரிய ஆதிக்க தழும்புகள் மட்டுமன்றி பார்ப்பான் எழுத்தாளன், பறைய எழுத்தாளன் என்ற இனப்பிரிகையும் என் போன்றோரின் இலக்கிய பிரதிகளை தலித் இலக்கியம் என்று அழிக்கப்பட முடியாத முத்திரையிட்டு இலக்கிய ரீதியான தழும்புகளையும் பெறத்தான் வேண்டுமா? ஏன் இப்படியொரு எழுத்து தீண்டாமை? நாடார் இலக்கியம், முதலியார் இலக்கியம் என கூறு போட்டு எதை சாதிப்பது? வட்டத்துக்குள் வட்டமாய் சுருங்கி சுருங்கி சுருக்கு போட்டுக் கொள்வதா? தமிழ்த் தேசம் வேண்டுவோரைப்போல் நாளை தலித் தேசம் கேட்கும் நிலை வருமா?

படிப்பகம்

www.padippakam.com



ராஜ்கௌதமன் (பேராசிரியர்) தலித் பண்பாடு என்ற நூல் வெளியிட்டு இருக்கிறார் — மேல் அட்டை முழு நீல நிறத்தில். தலித் என்றாலே நீலம்தான்! தலித் படித்தால் மட்டும் போதுமா? இதுவென்ன நிறமுடிச்சு? தலித் தள சார்பாளராய் தோற்றம் காட்டும் உங்களிடம் என் ஐய, அச்ச உணர்வுக்கு விடை வேண்டுகிறேன்.

சென்னை–39 சூர்யா

●

## கருத்து மேடையாக—

'கண்ணதாசன்' இதழைப் போன்ற வடிவமைப்புடன் இலக்கிய வெளிப்பாடுகளோடு தொடங்கப்பட்ட இவ்விதழ் மிக வேகமாக வளர்ந்து, பலரையும் உள்ளிழுத்துக் கொண்டு இயங்கி, பல்வேறு இலக்கியவாதிகளோடு பேசி, விவாதித்து, கடிதங்களோடு உறவு கொண்டு, கடிதங்களுக்கு எதிராக எதிர்வாதமாகப் பேசுவது போல் எழுதி, பலராலும் அறியப்பட்டு, உணரப்பட்டு, படைப்பாளிகளின் மேல் தட்டு ரகங்களோடு பொருந்தி, விளக்கி, விவரித்து —கடித, விவாத, கருத்து மேடையாக கவிதாசரண் தற்பொழுது ஆகி, பவனி வந்து கொண்டிருக்கும் தங்களது இந்த இதழுக்கு என் அன்பையும் வணக்கத்தையும் உரித்தாக்குகிறேன்.

நான்கு ஆண்டுகளுக்குள் திங்களின் உழைப்பும், ஈடுபாடும் இதழின் பக்கங்களுக்கு வீரியத்தையும் விவேகத்தையும் தந்துள்ளன.

நடேசன் (என் பெயர்) என்று ஆரம்பிக்கும் தங்கள் உரை படித்தேன். பத்து பக்கங்களுக்கு விவரிக்கப்பட்டிருந்த அது தங்களோடு பேசுவது போல இருந்தது. தமிழவன், கோவைஞானி, மார்க்ஸ், பூமணி, சுப்ரபாரதிமணியன் என பலரோடு, சமகால நிகழ்வுகளை உரசிக் காட்டும் தன்மை சுவையான நாவல் படிப்பது போல இருக்கிறது. 'எந்தவித ரசாயணத்திலும் கரைந்து விடாமல் எந்த எதிர்பார்ப்புகளுக்கும் ஏங்காமல் நடந்து கொண்டிருக்கும் ஒரு வழிப்பயணி'— இதுதான் தங்களை உயர்த்துகிற அடிப்படை. எதிர்பார்ப்புகளிலும் ஏக்கங்களிலும் சிக்கித்தவித்து வார்த்தைகளில் வடிப்பதை(சாருநிவேதிதா கட்டுரையில் குறிப்பிடுவது போல்) இன்றைய தமிழ் இலக்கிய உலகில் வெகுவாகக் காணப்படுகிறது. சாதி இன, மொழி, அரசு அலுவல் என ரகம் பிரித்து, பாராட்டும் கைகொடுத்து தூக்குதலும் தூண்டுதலும் கிடைக்கிற இந்த சூழலில் பணி ஓய்வு பெற்று, பணத்தை அச்சகத்தில் முடக்கி, தமிழ் இலக்கியத்திற்காக அனைத்து நேரங்களையும் செலவிட்டு வரும் தங்களது பணி, கட்டாயம் பாராட்டுப் பெறும்.

பொள்ளாச்சி நசன்

●

படிப்பகம்

www.padippakam.com



## கோவை ஞானி எழுதுகிறார்:

**கடிதம் 1:**

என் கடிதத்தை வெளியிட்டதோடு, சில திறனாய்வு குறிப்புகளையும் தந்திருக்கிறீர்கள். நன்றி. உங்கள் தர்க்கத் திறனையும் தமிழ் நடையையும் இரசிக்கிறேன். உங்கள் பாணியில் பதில் தருவது தேவையில்லை என்பதால் என் சார்பிலான சில விளக்கங்களை மட்டும் தருகிறேன்.

1. பெரியாரியத்திற்கும் மார்க்சியத்திற்கும் இடையில் தமிழகச் சூழலில் எழுந்த தீவிரமான எதிர்நிலை காரணமாக தமிழக வரலாற்றில் பின்னடைவு நேர்ந்தது. இதற்கான காரணங்கள் விரிவானவை. இன்றும் கூட இந்த எதிர்நிலைப் படுத்தலில் சிலர் காட்டும் தீவிர ஈடுபாடு தமிழ் மக்களின் வாழ்விற்கும் வளர்சிக்கும் நன்மை செய்வதாக இராது.

2. பெரியாரியத்திற்கும் மார்க்சியத்திற்கும் இடையிலான உறவுக்கான ஆதார தளமாக சமதர்மம் என்ற கருத்தை நான் வற்புறுத்துகின்றேன். இந்த ஆதார தளத்தை ஒதுக்கிவிட்டால் பெரியாரியத்திற்கும் மார்க்சியத்திற்கும் இடையிலான முரண்பாடுகளே பெரிதாகத் தெரியவரும். சமதர்மத்திற்கு அழுத்தம் தரும் பொழுது பெரியாரியத்தின் சாதிய வெறுப்பு, மத எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, பெண் அடிமைத்தன எதிர்ப்பு ஆகியவற்றையும் உடன்பாட்டு முறையில் மார்க்சியர் புரிந்துகொள்ள முடியும்.

3. வரலாற்றில் வேலை பிரிவினை, வேலை பிரிவினைகளுக்கு இடையில் ஏற்றத்தாழ்வு, தனியுடைமை, அரசு ஆகியவற்றின் தோற்றம் மற்றும் வளர்ச்சி சூழலில் வைத்துத்தான் மதம், சாதி முதலியவற்றைப் புரிந்துகொள்ள முடியும். இப்படி பொருளியல் சூழலில் வைத்து சாதி, மதம், பார்ப்பனியம் ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி முதலியவற்றை ஆய்வது மார்க்சிய அணுகுமுறை. சாதியோ மதமோ, பார்ப்பனியமோ, தனியுடைமை, அரசு ஆகியவற்றைத் தோற்றுவிக்கவில்லை. தனியுடைமையும் அரசு ஆதிக்கமும் நெடுங்காலத்திற்கு முன்பே கைகோத்துக் கொண்டன. இவை மூலசக்திகள். இவற்றோடு ஒத்து இருப்பதின் மூலம் மதத்தைப் போலவே பார்ப்பனியமும் தன்னை வாழ்வித்துக் கொண்டது. இவ்வகையில் மதமும் பார்ப்பனியமும் துணை சக்திகள். தனியுடைமையோடும் அரசு அதிகாரத்தோடும் ஒத்துழைத்ததன் விளைவாக அவற்றின் பங்காளிகளாகவும் இவை மாறி இருக்கின்றன.

4. வர்ணங்களுகிக்டையில் தடைச் சுவர் இல்லாத காலம் ஒன்றும் இருந்தது. வர்ணங்களுக்கும் சாதிகளுக்கும் இடையிலான உறவு எத்தகையதாக இருந்த போதிலும் வர்ணங்களையும் சாதிகளையும் தம் மனத்தளவிலும், சமூகச் சூழலிலும் ஒப்புக்கொள்ளாத மனிதர்கள் அன்றும் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர். இத்தகையவருள் பார்ப்பனர்களும் இருக்க முடியும். வர்ணத்தையும், சாதி

படிப்பகம்

www.padippakam.com



யையும் இறுகப் பற்றிக் கொண்டதன் மூலம் இத்தகைய மனிதர்கள் இறுதியில் தங்கள் உடைமையையும் அதிகாரத்தையுமே பற்றிக் கொள்கிறார்கள். இதன் காரணமாக இவர்கள் உடைமை மற்றும் அதிகாரத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள். இவர்களுக்கு விடுதலை இல்லை. உடைமைகளையும் அதிகாரத்தையும் மக்களுக்கு உரியதாக மாற்றும் சமதர்ம சூழலில்தான் மக்கள் விடுதலையடைய முடியும். தனியுடைமை மற்றும் அரசு அதிகார ஒழிப்பு பற்றி அக்கறை இல்லாமல் பார்ப்பனியம் பற்றி உரக்கப் பேசுவது இன்று நமக்குப் பயன்படாது.

5. சாதி, மதம் மற்றும் பார்ப்பனிய எதிர்ப்பு என்ற முனைகளில் பெரியாரியத்தை முடக்கும் ஆவேசப் பேச்சுக்களின் விளைவாக, மக்கள் மத்தியில் இந்துத்துவத்திற்குத்தான் இன்று ஆக்கம் கிடைக்கிறது. சாதி, மதம், பார்ப்பனியம் ஆகியவற்றைத் தக்க வைக்கும் பொருளியல் சக்திகளுக்கு எதிரான போராட்டங்களில் முனைப்பு இல்லாத நிலையில், இத்தகையவர் இந்துத்துவத்தின் ஆக்கத்திற்கே தம்மை அறியாமல் கை கொடுக்கிறார்கள். இந்துத்துவம் என்பது வெறும் மதவாதம் மட்டுமல்ல. சமதர்மத்திற்கு எதிரான அரசியல் ஆக்கத்திற்காக இந்துக்களின் மத உணர்வுகளை இந்துத்துவம் தனக்குள் திரட்டிக் கொள்கிறது.

6. இன்று சந்தைப் பொருளாதாரம், தனியார் மயப்படுத்தல், தாராள மயமாக்கல், உலக மயப்படுத்துதல் ஆகிய உரத்த குரல்களுக்கிடையே அரசு அதிகாரத்தில் முழு ஆதரவோடு முதலாளியம் ஏகாதிபத்தியத்தோடு தன்னை இணைத்துக் கொண்டு, உச்ச அளவில் தன்னை வளர்த்துக் கொண்டு இருக்கிறது. நவீன அறிவியல் தொழில்நுட்பம் என்ற பெயரில் தொழில் துறையும், வேளாண்மையும் உச்ச அளவில் மக்கள் மீது சுரண்டலையும் ஒடுக்கு முறையையும் நடத்துகின்றன. கல்வி, மருத்துவம் முதலிய அனைத்து களங்களும் ஆதிக்க சக்திகளின் களங்கள் ஆகிவிட்டன. சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் உச்ச அளவு மக்கள் மீது திணிக்கும் இந்த அதிகார பீடங்களோடு கட்சிகளும் நிறுவனங்களும் ஒத்து செயல்படுகின்றன. சனநாயகம், கூட்டாட்சி முதலியன அழிக்கப் படுகின்றன. இத்தகைய போக்குகளுடன் கருத்தியல் தளத்தில் ஒத்துழைக்கும் சக்திகள் பல. இவற்றில் ஒரு முக்கியமான சக்தி பார்ப்பனியம். முதலாளியத்தையோ, அரசு அதிகாரத்தையோ, ஏகாதிபத்தியத்தையோ தோற்றுவித்த மூலசக்தியல்ல பார்ப்பனியம் இவற்றோடு ஒத்துழைக்கும் துணை சக்தியே பார்ப்பனியம். இந்த மூலசக்திகளை ஒழிக்காமல் பார்ப்பனியத்தை ஒழிக்க முடியாது.

7. இத்தகைய பார்வையை முன் வைப்பது மார்க்சியம். மார்க்சியம் தொடர்ந்து தன் ஆதாரத் தளத்தை தொடர்ந்து விரிவுபடுத்துவதன் மூலம் பெரியாரியம், பெண்ணியம், தலித்தியம் தமிழியம் முதலியவற்றோடு கைகோர்த்துக் கொள்ளமுடியும். சமதர்மம் என்ற தளம்தான் இவற்றிற்கு இடையில் மையம். தனியுடைமை, அரசு அதிகாரம் ஆகியவற்றிற்கு எதிரான பார்வை கொண்ட மார்க்

படிப்பகம்

www.padippakam.com



சியத்தை ஒதுக்கிய நிலையில் பெரியாரியம் முதலியவற்றிற்கு மிஞ்சியிருக்கும் திசைவழி என்ன? இந்தியாவில் எத்தகைய பொருளியல் சூழல், சாதி, மதம், பார்ப்பனியம் ஆகியவை தங்கி செயல்படுகின்றன, நிலைபெறுகின்றன என்பது பற்றிய- கூடியவரை சரியான பார்வையைத் தருவது மார்க்சியம்தான். சாதி முறையின் தோற்றம், ஆக்கம், அழிவு ஆகியவற்றைப் பொருளியல் சூழலில் வைத்து ஆய்வதைத் தவிர வேறு எந்த முறையில் புரிந்துகொள்ள முடியும். இந்திய சமுதாயம் சாதிய சமுதாயம்தான் என்று உரக்கச் சொல்லி, இதற்கான பொருளியல் சூழலைத் தவிர்க்க முடியுமா? தனியுடைமை, அரசு ஆகியவற்றின் தோற்றத்திற்கு முற்காலத்தில் சாதியை வைத்துப் பார்க்க முடியுமா? பொருளியலைக் காட்டிலும் முதன்மை ஆற்றல் பெற்ற மூலசக்தியா சாதி? ஆசிய சமூகம் என்ற மார்க்சின் ஆய்வைச் சரியாகத் தொடர்ந்திருந்தால் சாதியின் இயக்கத்தை மார்க்சியர் கண்டிருக்க முடியும். அந்த நிலையிலும் பொருளியல் சூழலிலிருந்து சாதியைப் பிரித்து பொருளியலின் மூலசக்தியாக ஆக்கமுடியாது. இந்தியாவில் மார்க்சியம் நாம் விரும்புகிற அளவுக்கு முன் செல்ல இயலாமைக்குக் காரணங்கள் பல. அவற்றில் ஒன்றுதான் சாதிபற்றிய பார்வையின்மை. மார்க்சியத்தின் ஆக்கத் திறன்கள் பற்றி நம்பிக்கை இல்லாதவர்கள்தான் இன்று மார்க்சியத்தை புறக்கணித்து பெரியாரியத்நதயோ தலித்தியத்தையோ முதன்மைப் படுத்துகின்றனர். மார்க்சியத்தின் தளத்தை இன்று விரிவு படுத்துவதன் மூலம் பெரியாரியத்தோடும் பெண்ணியத்தோடும், தலித்தியத்தோடும் உறவு கொள்ள முடியும். மார்க்சியத்தை ஒதுக்கிய நிலையில் பெரியாரியத்திலோ, பெண்ணியத்திலோ தலித்தியத்திலோ தங்குவதன் மூலம் வரலாற்று இயக்கத்தை நெடுந் தொலைவிற்குச் செலுத்த முடியாது. பெரியாரியம் முதலியவற்றின் தனித்தன்மைகளை மார்க்சியத்தின் மையத்தோடு இணைக்க முடியும். இணைக்கும் தளம் சமதர்மத்தை விட வேறு இல்லை.

கடிதம் 2:

சென்ற கடிதத்தில் என் கருத்துகளைத் தொகுத்து எழுதினேன். கருத்துகளுக்கிடையில் இடைவெளி இருப்பதை உணர்கிறேன். ஒரு விரிவான விவாதத்தின்போதுதான் அவற்றை நிரப்ப முடியும். என் கருத்துகளின் அடிப்படையில் என்னைப் பற்றிய திறனாய்வுக் குறிப்புகளுக்கு என் எதிர்வினையைத் தருவதற்காக இந்தக் கடிதம். ஒரு நண்பனைக் காயப்படுத்தும் அளவுக்கு உங்கள் குத்தல்கள் இருக்கின்றன. ஒரு ஆரோக்கியமான விவாதத்திற்கு உங்கள் அணுகுமுறை உதவாது போலத் தோன்றுகிறது. தமிழ்- தமிழர் அரசியலில் உங்களைப் போலவே எனக்கும் ஈடுபாடு உண்டு. நமக்கிடையில் முரண்பாடுகளுக்கு அழுத்தம் தந்து ஒருவரை மற்றவர் ஒதுக்குவதன் மூலம் நமக்கு வளர்ச்சி ஏற்படாது. தமிழ் அரசியலின் பின்னடைவிற்கே இந்த அணுகல் முறை வழிவகுக்கும். இனி உங்கள் கருத்துகள் பற்றி:—

படிப்பகம்

www.padippakam.com



பெரியாரியத்தோடு நீங்கள் இல்லை. பெண்ணியத்திற்கும் தலித்தியத்திற்கும் உங்களைப் பார்வையாளர் எனச் சொல்கி றீர்கள். இந்நிலையில் உங்கள் சார்பு எது என எனக்குத் தெரிய வில்லை. எனினும் உங்கள் சாய்வு தெரிகிறது.

பெரியாரியம் உங்களுக்குள் பதிந்திருக்கிற அளவுக்குத்தான் மார்க்சியம் பற்றிய புரிதல் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என் பதை நான் முன்பே குறிப்பிட்டிருக்க வேண்டும். இப்போது நான் திருத்திக் கொள்கிறேன். தமிழகச் சூழலில் பெரியாரியத்திற்கு எதிர்நிலை எடுப்பதை நான் தவிர்த்து வந்திருக்கிறேன். பெரி பெரியாரியம் பற்றி, மார்க்சிய அணுகுமுறையில் சுருக்கமான மதிப் பீடுகளை நண்பர் கேசவன் முதல் பலரும் செய்திருக்கிறார்கள். இவர்களின் அணுகுமுறையிலுள்ள எதிர்மறைப் போக்கை நான் தொடர்ந்து மறுத்து வருகிறேன்.

பெரியாரின் சமதர்ம பார்வையைக்கூட கற்பனை சோசலிச மென்று குறைசொல்ல இடமிருக்கிறது. மதம் பற்றிய பார்வையில் பெரியாரியமும் மார்க்சியமும் பெருமளவிற்கு மாறுபடுகின்றன. இதைப்போலவே வரலாறு பற்றிய பார்வையிலும் பெருத்த வேறு பாடு இருக்கிறது. இன்றைய தமிழகச் சூழலில் பெரியாரியரும் மார்க்சியரும் (உண்மையான என்ற அடைமொழியை இரண்டு சொற்களோடும் சேர்த்துக் கொள்ள வேண்டும்) இணைந்து செயல் படுவதற்கான தேவை இருக்கிறது. குறிப்பாக இந்துத்துவத்திற்கு எதிர்நிலை எடுக்க வேண்டிய சூழல். அன்றியும் பெரியாரின் கருத்துகளுக்கிடையில் தொடர்ந்து பயணம் செய்யும்போது, மதம், வரறாறு, சமதர்மம் பற்றிய மார்க்சிய புரிதலுக்கான தடயங்கள் மற்றும் ஆதாரங்கள் அங்கங்கே கிடைக்கின்றன. 'தமிழகத்தில் பண்பாட்டு நெருக்கடிகள்' என்ற நூலில் கூடியவரை இத்தகைய மதிப்பீட்டை செய்திருக்கிறேன். பெரியார் பற்றிய எனது பார் வையை சனாதனம் என்று நீங்கள் குறிப்பிடுவதற்கு ஆதாரம் இல்லை.

பார்ப்பனியம் பற்றிய என் மன உணர்வை ஒவ்வாமை என்று குறிப்பிடுகிறீர்கள். நான் இதை மறுக்கவில்லை. காரணங்களைச் சுருக்கமாக சொல்கிறேன். பார்ப்பனியம் பற்றி நம் நண்பர்களில் சிலர் கடுமையாகப் பேசுகிறார்கள். பார்ப்பனர்களைக் கேவலப் படுத்துவதன் மூலம் அவர்களை அழித்துவிடமுடியும் என்பதுபோலப் பேசுகிறார்கள். இப்படிப் பேசுவதால் அவர்களை அழித்துவிட முடி யாது என்ற உண்மை அனைவருக்கும் தெரியும். சுமார் 60 ஆண் டுகளுக்கு மேலாக அவர்களைத் திட்டித் தீர்த்திருக்கிறோம். இதன் விளைவுகளில் ஒன்று தமிழ் மக்களுக்கு எதிரான மிக மோசமான மனநிலை அவர்களுக்குள் வளர்ந்திருக்கிறது. இதன் தொடர்ச்சி யாக அவர்கள் ஆர். எஸ். எஸ். இயக்கத்தோடு சேர்ந்திருக்கிறார் கள். திட்டிப் பேசியதற்கான நியாயங்கள் இருந்தன என்பதை நான் மறுக்கமாட்டேன். 'ஐந்தெழுத்தால் ஒரு பாடை'' என்றெல் லாம் தமிழ்மொழியை அவர்கள் இகழ்ந்துரைத்தார்கள். தமிழியத்

படிப்பகம்

www.padippakam.com



திற்கும் ஆரியத்திற்கும் இடையிலான எதிர்நிலைக்கு பல நூற்றாண்டு வரலாறு உண்டு. காட்வெல்லும் மனோன்மணியம் சுந்தரனாரும் தமிழ் விழிப்புணர்வை நமக்குத் தந்தார்கள். பாரதி முதல் பரிதிமார்க் கலைஞர்வரை தமிழராய்த்தான் வாழ்ந்தார்கள். எதிர் எதிர்நிலைகள் இறுகி பகைமை சிற்சில காலங்களில் கடுமையாக ஏற்பட்டது. இன்று நிலவும் பகைமை காரணமாக பாரதியார் முதல் பலரையும் புரட்டிப்போட்டு கூரிய தர்க்க முனையால் குத்திப்பார்த்து அவர்களுக்குள்ளும் ஓடியது பார்ப்பனியக் குருதிதான் என்று சிலர் சாதிக்கிறார்கள். இத்தகைய ஆய்வுகளும் வசை மொழிகளும் அருவருப்பாய் இருக்கின்றன. இப்படி வரலாற்றை நாம் அழிக்க வேண்டியதில்லை. இறுதியில் இந்தப் போக்கு நம்மை நாமே அழித்துக் கொள்வதாய் முடியும். இந்த அழிவின் அடையாளங்கள் சில ஏற்கனவே தெரிகின்றன. எனது ஒவ்வாமை உணர்விற்கு இப்படியொரு காரணம்.

இதைவிட இன்னொரு காரணம் பற்றியும் குறிப்பிட வேண்டும். பார்ப்பனியம் பற்றிய வரையறை நம்மிடம் இல்லை. பார்ப்பனர் என்றாலே சதி, வஞ்சகம், பொய், சூழ்ச்சி என நண்பர்கள் அடுக்குகிறார்கள். இத்தகைய குணங்களிலிருந்து நம்மவர் விடுபட்டு நிற்கவில்லை. இத்தகைய குணங்கள் பார்ப்பனரால்தான் நமக்குள் புகுத்தப்பட்டன என விளக்கம் சொல்கிறார்கள். தொடர்ந்து தாங்களும் வஞ்சகம் முதலியவற்றில் நிலை பெறுவதை நியாயப்படுத்துகிறார்கள். வரலாற்றுப் போக்கை சதிச்செயலால் மாற்ற முடியாது என்பது மார்க்சியம். அரண்மனைப் புரட்சிகள், சதிகள்- வரலாற்றின் திசைவழியில் மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை. ஆரியர்- பாப்பனர் செல்வாக்கு பெற்றார்கள் என்றால், தமிழ் மன்னர்கள் தங்கள் உடைமையையும் அதிகாரத்தையும் பெருக்கிக் கொள்ளும் வகையில் பார்ப்பனர்களுக்கு இடம் கொடுத்தார்கள் என்றுதான் சொல்லமுடியும். உடைமையும் அதிகாரமும் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்கு கருத்தியலின் துணை தேவைப்படுகிறது. தமிழ் மன்னர்களின் வடநாட்டுப் படையெடுப்பை இளமைப் பருவத்தில் நாம் எந்த மனநிலையில் ரசித்தோம்? உடைமையும் அதிகாரமும் செயல் படுத்துவோர் எவராயினும் அவர் உழைக்கும் மக்களின் தன்மானம், படைப்புத் திறன் முதலியவற்றை அழிப்பவர்கள். நமக்குள் இன்றுவரை உடைமைக்கும் அதிகாரத்திற்கும் எதிரான மனநிலை உறுதிப்படவில்லை. கிடைக்கும் குறைந்த அளவு வாய்ப்புகளைக்கூட இவற்றின் சேர்க்கைக்காக நாம் பயன்படுத்திக் கொள்கிறோம். இந்த வரிசையில் தன்முனைப்பையும் சேர்த்துச் சொல்ல வேண்டும். சாதி எதிர்ப்பு, மத எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு முதலியவற்றில் முடங்கிவிடும் பெரியாரியம் முதலாளிய எல்லையைக் கடந்து செல்ல உதவாது. பெரியாரியத்தை இப்படி முடக்குவதன் மூலம், பெரியாரியத்திற்கு நம்மவர் தீங்கு செய்கின்றனர். முதலாளிய எல்லைக்குள் பெரியாரியத்தை முடக்கி வைக்கும் தந்திரம் தெரிந்தவர்கள்தாம் பார்ப்பனிய எதிர்ப்பில் தீவிரம் காட்டுகிறார்கள். பெரியாரியத்தின்

படிப்பகம்

www.padippakam.com



எல்லைக்குள் இருந்து, அன்று முதல் இன்றுவரை மார்க்சியத்தை தீவிரமாக எதிர்த்தவர்கள் யாவர் என்று இன்று சிந்திக்கலாம். தமக்குள் தனியுடமைப் பற்றும் அதிகார வெறியும் கொண்டவர்கள் பார்ப்பனிய எதிர்ப்பில் தீவிரம் காட்டுவதன் மூலம் தம்மை மறைத்துக் கொள்கிறார்கள். இன்றைய நிலையில் முதலாளியத்தை எந்த வடிவில் ஒப்புக்கொண்டாலும் எதிர்காலத்தில் நமக்கு விடுதலை இல்லை. உடைமைப் பற்றை உள் வைத்து பார்ப்பனியம் பற்றிக் கடுப்பாகவும் வெறுப்புணர்வைத் தூண்டும் முறையிலும் பேசுகின்றவர்கள் எனக்குள் அருவருப்பை ஊட்டுகிறார்கள். எனது ஒவ்வாமைக்கு இதுவும் ஒரு காரணம்.

'காட்' உடன்படிக்கை பற்றி உங்கள் பார்வை என்ன என்பது எனக்குத் தெரியாது. இதுபற்றி கவிதாசரணில் இதுவரை எழுதவில்லை என்றே கருதுகிறேன். 'காட்' உடன்படிக்கை செயல்படுவதன் விளைவாக இந்தியாவில் சுரண்டல் பல மடங்கு அதிகரிக்கும். இதற்கு ஒத்தமுறையில் ஒடுக்குமுறை அதிகரிக்கும். இதன் காரணமாக மக்கள் மீது மாநில அரசு, மைய அரசு ஆதிக்கம் அதிகரிக்கும். தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் அடிமைத்தனம் அதிகரிக்கும். இதன் தொடர் விளைவாக பெண்களின் மீதும் கூடுதலான அடக்குமுறை அதிகரிக்கும். தன்னுரிமை / விடுதலைக்கான இயக்கங்கள் கூடுதலான இழப்புகளை எதிர்கொள்ள நேரும். இப்படி நமக்கொரு இருண்ட எதிர்காலம் இருக்கிறது. 21 ஆம் நூற்றாண்டு நம்மைப் பொறுத்தவரை இருண்ட நூற்றாண்டாகத்தான் தொடங்கும். ஏகாதிபத்தியம், முதலாளியம், அரசு அதிகாரம் ஆகிய மூல சக்திகளைக் கண்டு கொள்ளாமல், கண்டுகொள்ளத் தெரியாமல், பார்ப்பனியம் என்ற துணை சக்தியை மட்டும் முன்நிறுத்தினோம் என்றால், வரலாற்றுச் சூழலை தகர்த்து நாம் முன் செல்ல முடியாது. திருச்சி மாநாட்டில் நான் என்ன பேசினேன்? "காலையில் இன்குலாப் தொடங்கி வைத்தார்; மாலையில் ஞானி முடித்து வைத்தார்" என்று மயிலாடுதுறை இராமதாஸ் பேசினார். மறந்திருக்க மாட்டீர்கள். துணை சக்தியையே மூல சக்தியாகக் கருதி இருக்கும் பலர் மத்தியில் மூலசக்திகளைத்தான் முன்னிருத்திப் பேச முடியும். ஏகாதிபத்தியம் என்பதை நான் மிகைப்படுத்திப் பார்க்கிறேன் என்றும் சுற்றுச் சூழல் பற்றிப் பேசுவதே பார்ப்பனியம் என்றும், இந்தியா / தமிழகத்தைப் பொறுத்தவரை ஏகாதிபத்தியம், முதலாளியம், அரசு அதிகாரம், ஆகியவைதான் பார்ப்பனியம் என்றும் கருத்துக் கொண்டு இருப்பவர் மத்தியில் மூலசக்திகள் பற்றித்தான் நான் பேச முடியும்.

என் கடிதத்தின் இறுதிப் பகுதிக்கு வருகிறேன். பார்ப்பனியம் என்பதைத் தொடர்ந்து நான் புரிந்துகொள்ள முயற்சி செய்கிறேன். நவீன அறிவியல், தொழில் நுட்பம், குறிப்பாக கணக்கியல் கணிப்பொறி, உயிரி தொழில் நுட்பம் ஆகியவற்றோடு, ஆங்கிலத்திற்கும் முதலிடம் தருவது இன்று பார்ப்பனர்களுக்கு சாதகமான போக்கு. வெறுக்கத்தக்கவர்கள் என்றாலும், புரோகிதர்கள்

படிப்பகம்

www.padippakam.com



மதவாதிகள் முதலியவர்கள் பார்ப்பன சாதியில் மட்டுமல்லாமல் பிற சாதிகளிலும் இருக்கின்றனர். உயர் சாதியினருக்கு சாதி என்பது ஒரு ஆதாயம்; வலிமை. இன்றைய் தேர்தல் முறை, இட ஒதுக்கீடு, முதலாளிய தொழில்முறை ஆகியவை சாதியுணர்வைத் தக்க வைப்பதோடு வளர்த்தும் வருகின்றன. (இட ஒதுக்கீட்டை நான் மறுக்கவில்லை.) பார்ப்பனரை கீழிறக்க வேண்டும் என்றால் நம்மவர்கள் நம் மாணவர்களின் கல்வித் தரம், மேம்பாடு முதலிய வற்றிற்காக தன்னலம் கருதாமல் கடுமையாக உழைக்க வேண்டும். 'அக்கினி' பரிசுகளை நாம் மறுக்கும் அதே சமயம் நம் பொருளி யல் வசதிகளைத் திரட்டி நம்மவரின் இலக்கியத் திறன், மேம்பாடு முதலியவற்றிற்காகத் திட்டமிட வேண்டும். கணையாழியைக் காய் வதற்கு மாறாக நம்மவர் இணைந்து இலக்கிய ஆக்கத்திற்கான ஒரு செயல்பாட்டை மேற்கொள்ள முடியாதா? இந்து பத்திரிகைக்கு நிக ரான முறையில் தமிழ் இனத்தின் சிக்கல்களை உலகிற்கு எடுத் துச் செல்ல ஒரு ஆங்கில இதழை உருவாக்க முடியாதா?

காய்ச்சலைத்தவிர நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? ஒருவரை மற்றவர் காயப்படுத்தி நண்பர்களை நாமே அழித்துக் கொண்டு இருக்கிறோம். தர்க்கத் திறன்களை வாள் வீச்சுக்களாக / வாய் வீச்சுகளாக மாற்றிக் களிக்கிறோம். 'உன்னை விட எனக்கு தமிழ் இனப் பற்று கூடுதல்' என்று கருதி நண்பர்களை அவமதித்து ஓர் ஆரோக்கியமான விவாதத்திற்கான சூழலை அழிக்கிறோம். தமிழகத்தில் இன்று இத்தகைய புகைச்சல் தொடர்ந்து அதிகரிக்கிறது. தமிழ் மக்களின் வரலாற்றை அழிப் பதற்கென ஆதிக்க சக்திகள் திரண்டிருக்கும் இன்றைய நிலையில் அவற்றை எதிர்க்கத் திராணியற்று, சந்து பொந்துகளில் நுழைந்து நம்மவரோடு சச்சரவு செய்வதில் தீவிரம் காட்டி, ஏதோ வரலாற் றுக் கடமையைச் செய்து கொண்டிருப்பதாக நாம் திணவு கொள் கிறோம். இத்தகையவர்கள் ஈனத் தமிழர்கள்.

நீண்ட கடிதத்திற்காக என்னை அருள் கூர்ந்து மன்னிக்க வேண்டும். தமிழ் இன அறிவாளர் வட்டத்திலிருந்து என்னை வெளியேற்றும் முயற்சி வேண்டாம். பார்ப்பனருள்ளும் நல்லவர் / நம்மவர் இருக்கின்றனர். அவர்களையும் நாம் நம் அணியில் திரட்ட வேண்டும். சாதி, மதம் பார்ப்பனியம் முதலியவை எவ் வாறு தோன்றின, நிலை பெற்றன என்ற ஆய்வை நாம் சுருக்கி விட வேண்டும். தமிழ் அறிவாளர்கள், படைப்பாளர்கள் அடிக்கடி ஒன்று கூடி ஆரோக்கியமான விவாதங்களில் ஈடுபட வேண்டும். இதற்கு கவிதாசரண் முயற்சி செய்ய வேண்டும். நன்றி.

கோவை

ஞானி

படிப்பகம்

www.padippakam.com



# ஊராகாலி

இரத்தின.கரிகாலன்

“கும்புடுறேனுங்க சாமி. முன்ன பின்ன என்ன ஒங்களுக்கு தெரிஞ்சிருக்க ஞாயமில்லிங்க. ஏதோ கேக்குறீங்கன்னு சொல்றேன். இப்படி நான் சொல்றதால பலங் கெடய்க்கும்னு நான் நம்பல சாமி. ஒரு ஈன பிறவி இப்படியெல்லாம் இந்த ஒலகத்துல பொறந்து அவதிப் பட்டுருக்குன்னு புரிஞ்சிக்கிங்க. புரிஞ்சிகிட்டு நீங்கதா என்னா பண்ண போறிங்க.

யெப்பாரு பேரு மண்டையங்க. அதுக்கு எங்க தாத்தா வேற ஏதும் பேரு வச்சிருக்கும்னு தோணலங்க. ஆளு சும்மா கன் னங்கறேல்னு பனமரத்துக்கு வெளக்கெண்ண தேச்சு உட்ட மாதிரி இருக்கும்.

ஊராகாலி மாடு மேய்க்கிறதுதான் அதுக்கு பொழப்பு. தெனய்க் கும் நானும் தங்கச்சி பவுனம்மாவும் அது கூடவே போவோம்.

அஞ்சு தெருவு படையாச்சி ஆடு மாடுவளையும் மேய்க்கிற துங்குறது அவளோ சுளுவு கெடயாதுங்க. “ஊராகாலி வர்ரேன். மாடுவள அவுத்து உடுங்க சாமியோவ்”ன்னு கத்திகிட்டே வரும். ஆண்டமாரு ஊட்டு அம்மாளுவ மாடுவ பூட்ட தெரிச்சு உடுவாங்க. அடங்காம ஆட்டங்காட்டுற மாடுவொளுக்கு கழுத்து கவுத்தால முன்னங்கால எணச்சி குதியல் போட்டுடும்.

வெய்ய நாளாயிருந்தா தெருவுல நெல்லு, உளுந்து, மல்லாட் டன்னு காய வச்சிருப்பாங்க. “ஊராகாலி மாடு வருது. நெல்லுகிட்ட நில்லுங்கோ. நெல்லுகிட்ட நில்லுங்கோ”ன்னு கூப்பாடு போடும். முடியாதன்னய்க்கு என்ன சத்தம் போடச் சொல்லும். தப்பித்தவறி மாடு வாய வச்சிட்டுதுன்னா ஆண்ட சாதிவ உடுற பாட்டு நாறிப் போயிடும். ‘கடிச்சவன... குடிச்சவன’ன்னுதான் வாயில வரும்.

என்ன சாமி நாங்க செய்ய முடியும். பறசாதி சாமி. எதுத்து பேசமுடியுமா சாமி. ‘ஊரு சோறு வாங்கி திங்கிற ஊராகாலி நாய்க்கு நாக்கு தடிச்சிட்டுதா. இழுத்து வச்சி அறுக்கணும்’பாங்க. எங்களுக்கெல்லாம் எதுக்கு சாமி இந்த ஆண்டவன் வாயப் படைக் கணும். ஆண்டமாரு ஊட்டு கேவ்ரு கூழ் குடிக்கிறதுக்கு மட்டுந் தானுங்கள இந்த வாயி வவுரு யெல்லாம்.

எனக்கு வெவரம் தெரிஞ்சி யெப்பஞ் சட்ட போட்டு பாத்ததில் லிங்க. தீவாளி, பொங்க, ஆண்டைவ வூட்டு கல்யாணங் கருமாதி... இப்படி நாளு கெழமயில யாரும் மனசு வச்சி காட்டா பீசுல நாலு மொழம் கிழிச்சி போடுவாங்க. அதுதான் அதுக்கு வேட்டி, கீழ்

படிப்பகம்

www.padippakam.com



பாச்சி, மழைக்கு தலைல போட்டுக்குற துண்டு, குளுருக்கு போத்திக்கிற போர்வை எல்லாம்.

கையில யெப்பவும் ஒரு முழுங்கி தடிக்கம்பு வச்சிருக்கும், மாடு வளய்க்க. தெருவுல போறப்ப, செருப்ப எடுத்து தடி மொனயில சொருவிக்கும். அப்படியே தடிய தோள்ல சாச்சி வச்சிக்கும். ஒரு நா கூட மாடுவள அந்த தடியால அடிச்சி நாம் பாத்ததே யில்ல. மாடுவன்னா அதுக்கு அவ்ளோ உசுரு.

அஞ்சு தெருவு மாட்டையும் ரோட்டோரமாயிருக்குற ஆல மரத்துக்கிட்ட ஒண்ணு சேக்க பத்து பதினோரு மணி ஆயிடும்.

இந்த மாடுவ போடுற சாணிய பொறுக்குறதுக்குன்னு பறத் தெருவிலேர்ந்து குள்ள வெட்டியான் மொவ ராசாயா, பாலூரா மொவ கனகம், கொடிபவுனு, அம்சாயாவெல்லாம் கூடவே வரும். அதுவளுக்குள்ளே போட்டியே வந்துடும். 'மயில பொட்ட போடு றது என்னுது,' 'கருப்பு காள போடுறது என்னுதேய்,' 'சென மாடு போடுறது என்து,' 'மணியாரு ஊட்டு கெடேரி போடுறது என் னுது'... இப்டி ஒவ்வொன்னும் சத்தம் போடும்.

இதுக்காகவே அதுவ கண்ணு முழுசும் மாடுவ ஆசன வாயி லேயேயிருக்கும். கருப்பா சுருங்கியிருக்கும் தோலு விரிஞ்சி சாணிய வெளியே தள்ள ஆரம்பிச்ச ஒடனே சத்தம் போட ஆரம்பிச்சிடும்.

அப்புடி அதுவ சொன்ன மாடுவ போடுற சாணிய வேற யாரும் எடுக்கக் கூடாது. இந்த மாதிரி எடுத்துட்டு போற சாணிய சேத்து வச்சி, ராட்டி தட்டி, படையாச்சி ஊடுவொள்ள வித்துட்டு போவும். இப்டி சேத்த காசிக்கி பதினெட்டாம்பேரு, தீவாளி, பொங்கலுக்கு வள்ய எடுத்து போட்டுக்கும். காசி அதிகம் சேந்துதுன்னா மூட்ட காரங்கிட்ட லவுக்க துணி எடுத்துக்கும்.

மாடுவல்லாம் ஆலமரத்துகிட்ட ஒண்ணா சேந்த பெறவு, கொரய்தாயி கோயிலுகிட்டயிருக்கிற ஏரிக்கு போய் தண்ணி காட் டிட்டு, பெரியேரி காட்டுக்கு மேய்க்க ஓட்டிக்கிட்டு போவோம்.

எந்தங்கச்சி பவுனம்மா யெப்பனாட்டமும் என்னாட்டமும் கருப்பு கெடயாதுங்க. செக்கச் செவேல்னு ஏரியில பூத்திருக்கிற தாமர பூவாட்டம் இருக்கும். யெப்பனுக்கும் எனக்கும் அதுதாங்க உசுரு.

பெரியேரில அல்லி கெழங்கு நோண்டிகிட்டு வந்து அதுக்கு தருவேன். கம்மங் கருதுன்னா தங்கச்சிக்கு ரொம்ப ஆச. காட் டுக்கு பக்கத்துல இருக்குற கொல்லைவொள்ள காவ காப்பவங் கண் ணுல மண்ண தூவிட்டு கருத ஒடிச்சிட்டு வந்து வாட்டி தருவேன். களிமண்ண நோண்டி, ஏரி மதவுல தட்டி தட்டி, ரேடியோ பெட்டி, டிரக்கு வண்டியெல்லாம் செஞ்சு தருவேன். வெளயாட்டு அசதியில அது தூங்கிடும். வெயிலுக்கு அப்பனும் வந்து மொடங்கிக்கும். அப் பறமேலுக்கு நாந்தான் மாடு வளய்க்கணும்.

படிப்பகம்

www.padippakam.com



இந்த மாடுவளோட பிராணம் போயிடும். காயடிக்காத காளைவ சும்மாவே நிக்காது. பெல மடங்காத கெடேரிவொள மோப்பம் புடிச்சிகிட்டு தொரத்த ஆரம்பிச்சிடும். சமயத்துல பக் கத்தூர்லேர்ந்து மேய வந்திருக்குற கெடேரிவ பின்னாலேயே போயி டுறதும் உண்டு. காளைய காணாத ஆண்டமாருவ உடுற பாட்டு சொல்லி மாளாது. யெப்பன் ஒடம்புல யென்னா ரத்தமா ஓடுது சாமி. பாட்டு வாங்கி பாட்டு வாங்கி எங்க கறியெல்லாம் சங்கிட்டு துங்க. இந்த ஒடம்புவொளுக்கு எதுக்கு சூடு சொரனையெல்லாம். யெப்பனாச்சும் சொரண பத்திகிட்டு வந்தா அத யெப்பன் சாராயத்த ஊத்தி அணைச்சிடும். அப்புடி எதுக்குதாஞ் சாமி அது கூட்டுல உசுர வச்சிக்கிட்டிருந்தது. எல்லாம் என்ன வளத்து ஆளாக் குறதுக்கும் தங்கச்சிய ஒத்தவங் கையில புடுச்சி கொடுக்குவுந்தாஞ் சாமி. எங்கள பெத்த மவராசி எந்தங்கச்சி பொறந்த மூணா நாளே மூச்சடங்கிட்டா. யெப்பந்தான் தாயிக்கு தாயா தவப்பனுக்கு தவப்பனா எல்லாமாயிட்டுது.

எங்களுக்கடுத்ததா அது ஆச வச்சிருந்ததுன்னா மாடு கன்னுவளுக்கிட்ட தானிருக்கும். ஆண்டமாருவ செய்யுற கொடுமய்வளுக்கு பாவம் வாயில்லாத சீவனுவ என்னா சாமி பண்ணும். இன்னும் சொல்லப் போனா எங்களாட்டம்தான் அதுவளும்.

சமயங்கள்ல சில மாடுவளுக்கு காட்டுலயே பனிக்கொடம் வெளியே வந்துடும். யெப்பந்தான் பதமா கன்னு தலைய புடிச்சி வெளியில இழுத்து போடும்; கொளம்ப கிள்ளிவிடும். இதுக்குன்னே வச்சிருக்கிற பானையில கல்ல கூட்டிவச்சி, கருவமெலார பத்த வச்சி, சுடுதண்ணி வய்க்கும்.'

மாட்டு குறிய சுத்தீலும் வடிஞ்சு கெடக்கற ரத்தத்தையும் நெணத்தையும் சுடுதண்ணிய ஊத்தி வைக்கலால ஒராஞ்சி தேச்சி சுத்தம் பண்ணும். கன்னு போட்ட மாட்டுக்கு இது ஒணக்கை யாயிருக்கும். சீம்பால பீச்சிவிடும்.

இப்டில்லாம் மேச்சி என்னா மிஞ்சிச்சி. சொணன்னு பாக் காம, காங்கன்னு பாக்காம, காட்டுல ஓடிஓடி மாடு வளச்சி காலுல தச்ச கருவ முள்ளுவள எடுக்க முடியாம ஆணிதான் உழுந்துச்சு. மொரட்டு மாடுவ மிதிச்சதுல காலு புண்ணானததாங் கண்டோம். அம்மாம் மாடு மேச்சமே, எந்த ஆண்ட சாதியாவது ஒரு தம்ளரு காப்பி ஊத்தி குடுத்திருக்குமா, இல்ல தவிச்ச வாயிக்கு கொஞ்சம் மோரு தண்ணிதா குடுத்திருக்குமா.

பொய்சாய மாட்ட திருப்பிகிட்டு கட்டுதறிவொள்ள உட்டுட்டு, எங்கள ஊட்டுல கொண்டுட்டு வந்துவிடும். திரும்பியும் குண்டான எடுத்துட்டு ஊரு தெருவுக்கு வரும். ஒவ்வொரு ஊட்டா ஏறி, 'ஊராகாலி வந்திருக்கேன். சோறு போடுங்க தாயி'ங்கும். பாதி ஊட்டுல அப்பதாஞ் சோறு வடிச்சிருக்கும். போயும் போயும் சோத்துப் பானையிலேர்ந்து மொத சோத்த அள்ளி, இந்த ஊரா

படிப்பகம்

www.padippakam.com



காலிக்கா போடுறதன்னுட்டு 'இன்னய்க்கு சோறாக்க கொஞ்சம் நேரமாயிட்டுது. நாளைக்கு வா மண்டையா'ன்னுடுவாங்க.

ஒரே குண்டான்ல நெல்லு சோறு, கேவுரு களி, கம்மங் கூழுன்னு விழும். கொழம்பு வாங்கறதுக்குன்னு ஒரு கிண்ணி எடுத்துட்டு போவும். கொழம்பு ரசமெல்லாம் அதுல கலந்து எடுத் துட்டு வரும். நல்ல நாளு பெரிய நாளுன்னா சோறெடுக்கப் போறப்ப வட பலாரம் போடுவாங்க. சர்க்காரு வெட்டியான், ஊரு வெட்டியான், பண்ணக்காரன், பாதிகாரன், தலையாறி, வண்ணான் பரியேறி இவங்களுக்கு போடுறதுக்குன்னே ஆண்ட வூட்டு அம்மா ளுவ சின்ன சின்ன வடயா சுட்டு வச்சிருப்பாங்க.

எனக்குந் தங்கச்சிக்கும் நெல்லு சோத்த போட்டுட்டு, கேவ்ரு கம்மங் களிய கரச்சி யெப்பஙு குடிக்கும். குடிச்சிட்டு மொடங்குச் சுன்னா, தலையாரியூட்டு சேவ கூவுறப்ப எழுந்திரிச்சி, ஊர் தெரு வுலயிருக்குற டீக்கடைக்கு போய் டீ வாங்கிட்டு வந்து எங்களுக்கு குடுக்கும். ராத்திரி வாங்கிட்டு வந்ததுல மீதியிருக்குறத தண்ணி ஊத்தி வெச்சுருப்போம். வெளிய வாசல போயிட்டு வந்து, அத எடுத்து குடிச்சிட்டு பழயபடி மாடோட்ட வேண்டியதுதான்.

மழ நாள்ல பொழப்பு நாறிடும். பறத்தெருவுலேர்ந்து ஒழுங்கி வழியாத்தான் ஊருக்குள்ள போவணும்.

பாதயெல்லாம் ஒரே நொதநொதன்னு ஆயிடும். சேரி சனங்க பாதி, ஊரு சனங்க பாதின்னு ரெண்டு பக்கத்துலயும் ஒக்காந் துடும். மழ தண்ணியில கரஞ்சி வந்து குட்டகுட்டயா பாதயில தேங்கி நிக்கும். இப்படியேதான் பண்ண வேல செய்ய போறவங்க, நாத்து நட போறவங்க எல்லாம் போயி ஆகணும். காலுல்லாம் அரிக்கும். சேத்து புண்ணு வந்து உசுர வாங்கும். புண்ணுல பாத்து ராத்திரியில சுள்ளாம் புடுங்கி எடுக்கும். காலுல்லாம் குட் டங் கொண்டதாட்டம் வெள்ளயா கொழகொழன்னு ஆயிடும்.

இப்டிதா வளந்தோம். தங்கச்சி தளுக்கு புளுக்குன்னு வெள்ள வெளேர்ன்னு வளந்துட்டுது. பதினெட்டு வயசாயியும் நாந் தேஞ்ச வெளக்கமாத்து காட்டயாட்டம் இருந்தேன்.

எங் காது படுறாப்லியே 'இது மண்டையனுக்கு பொறந்த தில்ல. செல்லுதாயி நம்ம நாட்டாருகிட்ட படுத்து பெத்துகிட் டாடா'ன்னு ஊரு பசங்க சொல்லுவானுவ. என்னால என்ன முடிஞ்சிது. கேட்டு, கூசி குருகிதாம் போவ முடிஞ்சுது. காலில போடுற செருப்ப கையில எடுத்துகிட்டு தெருவுல நடந்து போற எங் கலால இப்டி அடங்கி ஒடுங்கிதான் போவமுடியும்.

ஊராகாலி மவ பாப்பார பொண்ணாட்டம் இருக்கான்னு ஊரு கண்ணே உழுந்துது தங்கச்சி மேல. அத ஒருத்தங்கிட்ட புடிச்சு தந்தாதாம் போற உசுரு நல்ல கெதி போய் சேரும்னு யெப்பம் பொலம்ப ஆரம்பிச்சிட்டுது. வரவர அதால ஊராகாலி மேய்க்க முடியாம போயிட்டுது. பன மர ஒடம்பு கூனு போட்டு, சுருக்கம் வுழுந்து பாதியாயிட்டுது.

படிப்பகம்

www.padippakam.com



ஊருல படிப்படியா ஆண்டமாருவ மாடுவள கொறச்சிக்கிட்டாங்க. ஏரு ஓட்ட டிரக்கு வந்துட்டுது. கறவைக்கு மட்டும் ஒண்ணு ரெண்டு பசு மாடுவள வச்சிக்கிட்டாங்க. அதுவள மேய்க்கவும் சின்ன பசங்களா பாத்து மாட்டுகாரனுவ அமத்திகிட்டாங்க. ஊராகாலி பொழப்பும் நின்னு போயிட்டுது.

யெப்பனுக்கு நடஒட மட்டு பட்டு போயிட்டுது. சீவிக்கணுமே. நாட்டாரு ஊட்ல பண்ணைக்கு சேத்து உட்டுது. ஆயிர ரூபா முன் பணமும் வருஷத்துக்கு பத்து மூட்ட படின்னும் பேச்சி.

பகல் முழுதும் அண்ட வெட்றது, வாய்க்கா செத்துறது, கள வெட்றதுன்னு வேல. ராத்திரியில மோட்ரு ஒட்டனும். மழ நாள். மோட்ரு கெணத்துவொள்ள வெச வாயு இருக்குன்னு ஊரெல்லாம் பேச்சி. கெணத்துல பம்புக்கு நூல் வைக்க, பேரிங்கி ஒடஞ்சிச் சின்னா மோட்ரு கயிட்ட எறங்கி ஆவணும். செல பண்ணயத்துல கேணிக்குள்ள முன்னாடி கோழிய கட்டி வுடுவாங்க. இல்லாட்டி லாந்தர கட்டி உடுவாங்க. எங்க ஆண்ட ஊட்டுல என்னயே கட்டி வுட்டாங்க. மூச்சி தெணருச்சுன்னா கவுத்த ஆட்டுன்னு சொன்னாங்க. நாங்கல்லாம் கோழியவிடவும் கேவலமான சென்மங்களா சாமி.

பண்ண வேல செய்றவன் ஊட்டு பொம்பள சனந்தான் காடு களம் பாக்கிறது வழக்கம். எந்தங்கச்சியும் ஆண்ட ஊட்டுக்கு வரப்போவ இருந்தது. ஊடு மொழுவ, களத்துக்கு சாணி தெளிச்சு போட, போரடிச்ச களத்துல கல்லுகருக்கா சுத்தம் பண்ண அது தேவ பட்டுது.

இப்டி போன எங்க பொழப்புல இடி விழுந்திச்சிங்க. தீவாளிக்கு மொத வாரம் ஒரே மழ. அட மழயா புடிச்சிக்கிட்டுது. பறயங் குட்ட யெல்லாம் ரொம்பி வழிஞ்சுது. ஊரு தெருவுக்குள்ள போவ முடியாது.

வடிச்ச நொய் கஞ்ச ஊத்திக்கிட்டு குடிக்கப் போன தங்கச்சி ஓமட்டிக்கிட்டு ஒக்காரிச்சிது. அடிவயித்திலேர்ந்து புடுங்கிகிட்டு வராப்ல வாசலுக்கு ஓடி வாந்தி எடுத்திச்சி. கொஞ்ச நாளாவே அது சரியில்ல. என்னான்னு அப்ப யெனக்கு ஒண்ணும் புரியில. யெப்பம் மட்டும் வவுத்துல நெருப்ப கட்டிக்கிட்டாப்ல பொலம்பும்.

வேட்டிய இழுத்து போத்தி படுத்திருந்த யெப்பாவ அந்த சத்தம் எழுப்பி வுட்டுது.

''என்ன பவுனம்மா... எங்கண்ணு என்னம்மா செய்யுது''ன்னுட்டு எழுந்திரிச்சு வந்தது. தங்கச்சி மலங்க மலங்க முழிச்சுது. நானும் யெப்பனும் உசுரா வளத்த தங்கச்சிக்கு என்ன ஆச்சி. ஒண்ணும் புரியுல. யெப்பனுக்கு மட்டும் என்னமோ வெளங்குன மாதிரி இருந்துச்சி.

'போய் வண்ணாத்திய இட்டுகிட்டு வாடா'ன்னாரு.

வண்ணாத்தி வந்து நாடிய புடுச்சு பாத்தா. யெப்பங் காதுக்குள்ளே என்னமோ சொன்னா.

படிப்பகம்

www.padippakam.com



"நீதாம் புள்ள இவ அம்மாவுக்கு கலச்சி பாத்த. முடியாம போயிட்டுது. அவ ஆசப்பட்டு படுத்தாளோ இல்ல பயத்துல படுத்தாளோ, ஊருக்காரங் குடுத்த புள்ளய வவுத்துல சொமக்க புடிக்காம ஒங்கிட்ட வந்தா. எனக்கு தெரியாம ரெண்டு பேரும் மறச்சிட்டீங்க. இவ பொறந்தா. எனக்கு பொறந்ததாட்டமே கண்ணுக்கு கண்ணா வளத்தேன். எம் மொவனும் இது மேல உசுர வெச்சிருந்தான். இன்னக்கி இவ எவங்கிட்ட ஏமாந்தாளோ. நம்ம சாதிக்காரனாயிருந்தா நெசத்த சொல்லியிருப்பா. அம்மாகாரியாட்டமே ஊரு பயகிட்ட போயிருப்பா. ஊருகார பயலுவ படுக்க வருவானுவ. கட்டிப்பானுவளா. அண்ணங்காரங்கிட்ட சொன்னா ஊரு விரோதம்னு நெனய்க்குறா. எப்படியோ போவட்டும். இன்னொரு தரம் ஊருகாரங் கொடுத்த புள்ள இந்த ஊட்ல பொறக்க கூடாது. நீ என்ன செய்வியோ ஏது செய்வியோ. எனக்கு தெரியாது. கலச்சுடு."

என்னோட ஆச யெப்பாருக்கு என்ன வந்துச்சு. அதுக்கு இம்புட்டு ஆவேசம் வந்து பாத்ததில்லை. அதுமேல ஒடக்கர கருப்பு வந்து பேசராப்ல இல்ல இருக்கு.

வண்ணாத்தி சாராயம் வாங்கிட்டு வரச் சொன்னா.

'சாமி, இதயெல்லாம் வயிசுக்கு வந்த ஆம்பள புள்ள பாக்க கூடாது ராசா. என் கண்ணு வெளிய போயிடுடா'ன்னு கெஞ்சினா வண்ணாத்தி.

வெளிய அடமழ வலுத்துகிட்டிருந்திச்சி. நா ஏஞ் சாமி வெளிய போவணும். எந்தங்கச்சி கொழந்தயா இருந்தப்ப கால்ல புடிச்சு வெளிக்கு போவ வச்சது யாரு சாமி? அருகுறுப்பு பாக்காம கழுவி உட்டது யாரு' சாமி? இந்த அண்ணங்காரந்தானே? எனக்கு தெரியாம என்னா ரகசியம் எந்தங்கச்சிக்கிட்ட. நான் எதுக்கு வெளியே போவணும். உள்ளியேதான் இருந்தேன். யெப்பன் இந்த கண்ராவிய பாக்காம சாராய கடைக்கு போயிட்டுது.

எவ்ளோ கெஞ்சிப் பாத்தும் முடியாம என்ன உள்ளார வச்சி கதவ சாத்திட்டு வந்தா. வாங்கிட்டு வந்த சாரயத்துல வண்ணாத்தி பாதிய குடிச்சா. தங்கச்சியையும் குடிக்கச் சொன்னா. அது ஒத்துக்கல. என்ன கைய கால புடிக்க சொல்லிட்டு' வாயில ஊத்துனா. பாதி உள்ளயும் பாதி வெளியயும் போயிட்டுது.

தங்கச்சி ஒடம்பெல்லாம் அந்த அட மழையிலயும் வேர்த்து ஒழுவிச்சி. போதையில ஒளறிச்சி.

தென்னங்குச்சியில மெலிசு வெள்ளத் துணிய சுத்தினா. அத கொட்டாஞ்சியில வச்சிருந்த எருக்கம்பாலுல நனைச்சா.

தங்கச்சி பெனாத்திச்சு.

ரெண்டு காலயும் அகட்டி பிடிக்கச் சொன்னா. திமிறிச்சி. 'ஆயிதாயி செத்த இருடா'ன்னுட்டு விரிச்சு புடிச்சேன். வண்ணாத்தி பாவாடய தூக்குனா. பச்ச நரப்பு படந்த தங்கச்சி தொடய இந்த படுபாவி பாத்தப்ப எம் மனசி எப்டி பதறுச்சின்னு ஒங்களுக்குத்

படிப்பகம்

www.padippakam.com



தெரியுமா சாமி. நனைச்ச சீவுகுச்சிய உள்ளார, கருப்பைய தொடுற மாதிரி சொருவுனா வண்ணாத்தி.

தங்கச்சி துடிச்சது. செத்த நாழி கழிச்சு குச்சிய எடுத்துட்டு ஏதோ உள்ளுக்கு பச்சல குடுத்தா. நாளைக்கு வந்து பாக்குறேன் னுட்டு போயிட்டா.

கிழிச்சி போட்ட கீரதண்டாட்டம் கெடந்தது எந்தங்கச்சி. ராத்திரியில ஒடம்பு கெடந்து தூக்கிதூக்கி போட்டது.

ஒரே அலறல். பாவாடயெல்லாம் கட்டி கட்டியா ரத்தம். கீழ போட்டுருந்த சாக்குல்லாம் ரத்தம் நனஞ்சி கவுச்சி அடிக்க ஆரம் பிச்சிட்டுது. எறும்பும் ஈயும் மிய்ச்சது.

சாமி, எந்தங்கச்சிக்கு சன்னி கண்டுட்டுது. 'உட்ருய்யா... எனக்கு பயமாயிருக்கய்யா'ன்னு தங்கச்சி சன்னியில உளறிச்சு. நாழியாவ நாழியாவ அதோட கத்தல் பறதெருவயும் தாண்டி வடக்கு வெளி முழுசும் கேக்கும்படியிருந்திச்சி.

எந்தங்கச்சி, தோள்லியும் இடுப்பிலியும் நாந் தூக்கி வளத்த தங்கச்சி எங்கண்ணு முன்னாலியே சித்ரவத பட்டு செத்தது சாமி. யேன் உசுரு யென்னா கல்லா சாமி. நா உசுருக்கு உசுரா வளத்த எந்தங்கச்சி செத்தும், கல்லாட்டம் கையாலாதவனா பித்தங்கலங்கி நின்னஞ் சாமி.

கூட வுழுந்து சாவறதுன்னா என்னான்னு அன்னக்கிதாஞ் சாமி தெரிஞ்சுது. தங்கச்சி கூடவே யெப்பனும் செத்தது. ஒரே நாளுள கூட சீவுச்சி கெடந்த ரெண்டு பேர பறிகொடுத்துட்டு நாமட்டும் எதுக்கு சாமி யிருக்கணும்.

ஊரு மாட மேச்சோம். அது எர எடுக்காம இருந்தா நாக்குல படந்துருக்குற நாவுரிஞ்சிய வாயால கடிச்சி சுத்தம் பண்ணும் யெப்பன். வவுத்துல கோளாறுன்னா பெரண்டய இடிச்சு உள் ளுக்கு போடும். இப்டில்லாம் ஊருமாடு மேய்ச்ச குடும்பத்த ஊரு மேயுறது என்னா சாமி ஞாயம். இந்த பாவத்தையெல்லாம் ஒடக் கர கருப்பு பாத்துக்கிட்டு சும்மாதான் நிக்குது. அதுக்கு முன் னால நிக்குற வேல் கம்பு எலுமிச்சம் பழம் சொருவுறதுக்கும் கோழி குத்துறதுக்கும் தானா?

விசுரு கன்னு போட்டாலே ஒப்பாரி வச்சு அழும் ஆண்ட சாதிவொ ஏம் பவுனம்மாவும் யெப்பனும் செத்தப்ப என்ன பண் ணுனாங்க? தங்க மாட்டோ மாடா காடே கெதின்னு கெடந்தவங்க செத்தப்ப நீதி ஞாயம் சொல்லும் ஊரு பஞ்சாயத்து என்ன சாமி செஞ்சது?

ராத்திரி ஒழுங்கி வழியா மோட்ரு ஓட்டபோற ஆண்டமாருவ பண்டாரத்துக்கிட்ட மந்திரிச்சு தாயத்து போட்டுகிட்டதுதான் மிச்சம்.

சாமி... சாமி... இன்னும் ஒங்கள 'சாமி'ன்னுதான் ஞாயம் கேக்கணுமா... ●

www.padippakam.com

# புதுமைப்பித்தன் பிரதிகளில்
## தலித்துகள், மறவர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும்
# இதர மாமிச பட்சிணிகள்

அ. மார்க்ஸ்

புதுமைப் பித்தனின் 'எப்போதும் முடிவிலே இன்பம்' சிறு கதையைப் படித்திருக்கிறீர்களா? படிக்காதவர்களுக்கும் படித்து மறந்து போனவர்களுக்கும் ஒரு சுருக்கமான அறிமுகம். (வெள்ளைக்கார) கலெக்டர் துரையின் பங்களாவில் ஒரு முயல் வசிக்கிறது. சாதாரண முயல் இல்லை; வேதம் படித்த முயல். முயலை விரட்ட கலெக்டர் ஒரு நாயை அமர்த்துகிறார். அதுவும் சாதாரண நாய் அல்ல. கறுப்புப் பறை நாய். மாமிச வேட்கை கொண்ட, கேட்பார் பேச்சுக் கேட்கும் அசட்டு முட்டாள் நாய். வேதம் படித்த புத்திசாலி முயல் தன்னையும் காப்பாற்றிக் கொண்டு, பறை நாய்க்கும் அதன் வேலை போய்விடாமலிருக்க ஆலோசனை தருவதாய்ச் சொல்லி தனது எடுபிடியாய் வைத்துக் கொள்கிறது. அப்போது இவர்களுக்கிடையில் ஒரு நரி குறுக்கிடுகிறது. அதுவும் சாதாரண நரி அல்ல; அர்த்தசாஸ்திரம் - அதாவது பொருளியல் நூல் கற்ற, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது பற்றி பேசுகிற நரி. கருப்பு நாய்க்குச் சபலம். தன்னை ராஜாவாக ஆக்க வாக்களிக்கும் நரிக்கும் புத்திசாலி முயலுக்கும் ஒரே சமயத்தில் விசுவாசமாக இருக்க முயற்சி செய்கிறது. நரி சதியைத் தொடங்குகிறது. சிக்கல் ஏற்பட்டு, அசட்டு நாய் சங்கிலியால் கட்டப்பட்டு பங்களாவைவிட்டே வெளியேற்றப்படுகிறது. நரியைக் கலெக்டர் சுட்டுத் தள்ளுகிறார். பஞ்சவடி மாதிரி அமைதியாய் இருந்த இடம் இப்படி ஆனதைக் கண்டு வருத்தமுற்ற முயல் தன் முயலினியுடன் சர்க்கார் தோட்டத்திற்கு இடம் பெயர்கிறது. எப்போதும் முடிவிலே இன்பம். கதை இதுதான்.

புதுமைப்பித்தனின் கதைகளில் வருகிற திருநெல்வேலி கிராம வருணனைகள் பெரும்பாலும் இப்படித்தான் அமையும்: கோயில், அக்ரகாரம், பிள்ளைமார் வீதி; தேங்காய் எண்ணெய் வாசனை பரிமளிக்கும் இவ்வீதிகளைக் கடந்தால் ஊர்ப் பொட்டல். காவல் தெய்வம் சுடலைமாடன் பீடத்தைச் சுற்றி ஐந்தாறு மறவர் குடிசைகள். இத்துடன் ஊர் முடிந்து விடுகிறது. மானாமாரிக் குளத்தையும் தாண்டி அக்கரைக்குப் போனீர்களானால் பறைக் குடிசைகள். ஊரின் பொது நியதியே சோம்பலும் வறுமையுந்தானென்றாலும் முதலாமவர்கள் 'சேஷப்படாது பட்டினி' கிடந்தால், மற்றவர்கள் அசுத்தமாய்ப் பட்டினி கிடக்கிறார்கள். சோம்பலும் பட்டினியும் நிலவிய போதும், இம் மூன்று பிரிவினருமே தத்தம் நிலைமைக

படிப்பகம்

www.padippakam.com



களில் திருப்தியுற்று மகிழ்ச்சியுடன் இருக்கின்றனர். ஊரில் 'சாந்தி' நிலவுகிறது— ஆலய நுழைவு, சுயமரியாதை, புரட்சி கிரட்சி, மத மாற்றம் என யாரும் அந்நியர்கள் ஊருக்குள் நுழையாத வரை.

ஆக, புதுமைப்பித்தனின் 'கிராமத்து மாந்தர்களை' இம் மூப் பிரிவுகளுக்குள் அடக்கிவிட முடியும். (1) பார்ப்பன - வேளாளர், (2) மறவர், (3)பறையர். இம்மூவரும் சம அளவில் பிரதியில் இடம் பெறுவதில்லை. இதனை விரிவாய்ப் பின்னர் பார்ப்போம். இம் மூன்று பிரிவுகளையும் இரு பிரிவுகளாகவும் சுருக்க முடியும். (1) பார்ப்பன - வேளாளர். (2) மறவர் - பறையர். மற்றவர்கள் இந்த அமைதியில், ஒழுங்கில் குறுக்கிடும் அந்நியர்கள்.

இன்னொரு கோணத்தில் பார்த்தீர்களானால் பார்ப்பன - வேளாளருக்கு மறவரும் பறையரும் அந்நியர். பார்ப்பனர் - வேளாளர் - மறவர் - பறையர் ஆகியோருக்கு ஊர் அமைதியில் குறுக்கிடுபவர் அந்நியர்.

இப்போது கலெக்டர் - முயல் - நாய் - நரி கதைக்குத் திரும்புவோம். கலெக்டருக்கும் முயலுக்குமிடையே பிரச்சினைகள். இருந்தபோதிலும் இந்த இருவரும் கலெக்டர் தோட்டத்தின் இயல்பான குடிமக்கள். பறை நாய் தோட்டத்தில் புகும் முதல் அந்நியன். எனினும் முயலுக்கும் நாய்க்கும் இடையில் ஒரு 'செட்டில் மென்ட்' ஏற்படுகிறது. அது ஒரு ஏற்றத்தாழ்வான ஒப்பந்தம் என்பதும், முயலுக்கும் நாய்க்குமிடையேயான உறவு சுரண்டல் உறவு என்பதும் வேறு விஷயம். என்ன இருந்தாலும் முயல் வேதம் படித்தது; புத்திசாலி. மாமிச வெறி தவிர வேறொன்றும் அறியாத முட்டாள் பறைநாய்க்கும் முயலுக்குமான உறவு அப்படித் தான் இருக்க முடியும். உறவு ஏற்றத் தாழ்வாக இருந்தபோதிலும் இருவருக்குமே ஒரு பாதுகாப்பு கிடைக்கிறது. அமைதி நிலவுகிறது. அந்த அமைதியைக் குலைக்கும் அந்நியனாக நரி நுழைகிறது. நரி நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல் சாதாரண நரி அல்ல. பொருளியல் அறிவுடைய, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது பற்றிப் பேசி, இருக்கும் அமைதியைக் குலைக்கும் நரி. பறை நாய் வேதம் கற்ற முயலின் பேச்சை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தால், பிரச்சினை இருந்திருக்கப் போவதில்லை. நரி பேச்சைக் கேட்க முனைந்ததால் எல்லோருக்கும் சிக்கல். பஞ்சவடி ரணகளமாகிறது. இங்கே அவ்வளவு எளிதாக யாரும் அதிகார மாற்றத்தைக் கொண்டு வந்துவிட முடியாது. ஆட்சி மாற்றம் பற்றிப் பேசுபவர்கள் அழிய வேண்டியதுதான். அவர்கள் பேச்சைக் கேட்டுப் பின்னால் போகிறவர்கள் சங்கிலியால் கட்டப்பட்டு பங்களாவை விட்டு வெளியேற்றப்பட்ட நாய் போன்று 'உள்ளதும் போச்சுடா நொள்ளக் கண்ணா' என வெளியேற வேண்டியதுதான். எனவே கறுப்புப் பறை நாய்களே, வேதம் படித்த முயலின் பேச்சைக் கேளுங்கள்.—

படிப்பகம்

www.padippakam.com



இப்படியான ஒரு வாசிப்பை நான் வலிந்து செய்வதாக நீங்கள் கருதிவிடக்கூடாது. பித்தனின் மற்ற கதைகள் இவ்வாசிப்பை உறுதி செய்வதை நம்மால் நிறுவ முடியும். நமது சமூகத்தின் தேக்கநிலை குறித்து அவருக்கு ஒரு தெளிவான பார்வை இருந்திருக்கிறது. ஏகாதிபத்தியம், பொருளைக் கொண்டு வந்து குவித்து, நமது பொருளாதாரத்தை நாசமாக்குகிறது. இதற்கு இணையாக வெள்ளைப் பாதிரிமார்கள் ஆயிரக் கணக்கில் ஞான ஸ்நானம் கொடுத்து ஹிந்து சமூகத்தைக் கெடுத்தனர் (புதிய கூண்டு). கிராமங்கள் சோம்பலில் சுகித்தன. மறவர்களும் பறையர்களும் குடித்துக் கும்மாளமிட்டு ஊதாரித்தனத்தில் மிதந்தனர் 'கடவுளின் பிரதிநிதி' என்கிற கதையில் 'சிற்றூர்' பற்றிய புதுமைப்பித்தனின் விவரிப்பைப் பாருங்களேன்:

"ஊருக்கு வெகு தொலைவில், அதாவது, ஊருக்குப் பக்கத்திலிருக்கும் வாய்க்காலையும் வயல்காடுகளையும் தாண்டி ஊரின் சேரி. இந்த அக்கிரகாரத்துப் பிச்சைக்காரர்களுக்கு அடிமைப் பிச்சைக்காரர்கள். இரு ஜாதியாரின் நிலைமையும் ஒன்றுதான். ஒருவர் சேஷப்படாது பட்டினியிருந்தால், இன்னொருவன் அசுத்தத்துடன் பட்டினி கிடக்கிறான். சேரிப் பட்டினிகளுக்கு அக்கிரகாரத்துப் பட்டினிகள் மீது பரமபக்தி... ஊரில் நல்ல மனிதன் என்றால் சுப்பு சாஸ்திரிகள்... இம்மாதிரி சாந்தி குடி கொண்ட வாழ்க்கையிலே சூரைக் காற்று போல் புகுந்தது ஹரிஜன இயக்கம். அது ஊரையே ஒரு குலுக்கு குலுக்கியது." பானைச் சோற்றுக்கு ஓரரசி பதமாக இதனைக் குறிப்பிடுகிறேன். இதனையொத்த பல எடுத்துக்காட்டுகளை புதுமைப்பித்தனின் கதைகளிலிருந்து தொகுக்க முடியும்.

தங்களது இழிநிலை குறித்துப் பறையருக்குச் சற்றேனும் உணர்வு இல்லை என்பது பித்தனின் திட்டவட்டமான முடிவு. இந்த அவல வாழ்வில் பறையர்கள் திருப்தி அடைந்திருந்தனர். சாதிப் படிநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்கிற எண்ணம் மேலிருந்துதான் உருவாகிறது. முற்போக்கு மனம் படைத்த உயர்சாதி சீர்திருத்தவாதிகளே அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளுகின்றனர். இதற்கு முதல் எதிர்ப்பு- அதுவும் மூர்க்கத்தனமான எதிர்ப்பு பறையர்களிடமிருந்தே வருகிறது! 'கடவுளின் பிரதிநிதி' கதையில் ஆலயப் பிரவேசத்திற்குத் தூண்டும் சங்கர், 'புதிய நந்தன்' கதையில் பறைச்சி ஒருவரைத் திருமணம் செய்து கொள்ள விழையும் ராமநாதன் முதலியோர் "ஜாதியில் பிராமணர். தியாகம், சிறை என்ற அக்னிகளால் புனிதமாக்கப்பட்டவர். சலியாது உழைப்பவர்." "கடவுளற்ற, லட்சியமற்ற, இருளில் தடுமாறும்" பறையர்களுக்கு இவர்கள் உரிமை வேட்கையை ஊட்ட முனையும் போது அவர்களாலேயே தாக்குறுகின்றனர். சங்கரைக் கல்லால் அடித்துத் தாக்குகின்றனர். கோயில் பூசகர் சுப்பு சாஸ்திரிகள் தான் அவரைக் காப்பாற்றுகிறார். தான் உடலுறவு கொண்ட பறைச்சியை ராமநாதன் திருமணம் செய்து கொள்ள முயன்ற

படிப்பகம்

www.padippakam.com



போது எதிர்ப்பு அந்தப் பெண்ணிடமிருந்தும் அவள் அப்பனிடமிருந்தும் எழும்புகிறது.

புதுமைப் பித்தனின் காலத்தில் படித்த பார்ப்பன இளைஞர்கள் ஒரு சிலர் மத்தியில் இத்தகைய சீர்திருத்த உணர்வுகள் காந்தியின் தலைமையிலான அரிசன இயக்கத்தின் விளைவாக ஏற்பட்டது என்பது மிகைக் கூற்றல்ல. ஆனால் எல்லா பார்ப்பனர்கள் மத்தியிலும் இத்தகைய சிந்தனை ஏற்பட்டது எனச் சொல்ல இயலாது. சங்கரும் ராமநாதனும் பொதுப் போக்கின் பிரதிநிதிகள் என்பதைக் காட்டிலும் விதி விலக்குகள் எனச் சொல்வதே பொருத்தம். பார்ப்பனர் - வேளாளர் மத்தியில் விதி விலக்குகளைத் தேடிப் பிடித்து அறிமுகம் செய்யும் புதுமைப் பித்தனுக்கு அதே கால கட்டத்திலும் அதற்கு வெகுகாலம் முன்பிருந்தும், மேலிருந்து ஊட்டப்படுகிற தேவையில்லாமல், அடித்தட்டு மக்கள் மத்தியிலேயே கிடைத்தளத்தில் விழிப்புணர்வும், விடுதலை வேட்கையும் கிளைத்து பரவியது கண்ணில் படாது போனதை நாம் புறக்கணித்துவிட முடியாது. அயோத்திதாஸ் பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன், எம்.ஏ. ராஜா போன்ற தலைவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலிருந்து உருவானவர்கள் தான். ஆலயப் பிரவேசத்திற்காக நடத்தப்பட்ட புகழ் பெற்ற வைக்கம் போராட்டம் கூட தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் தன்னெழுச்சியாகத் தோன்றிய உரிமைப் போராட்டம்தான். அதன் இறுதிக் கட்டத்திலேயே பெரியார் அவர்கள் அப்போராட்டத்திற்குத் தலைமை ஏற்றார். அடித்தட்டு மக்கள் மத்தியில் ஏற்படும் இத்தகைய இயக்கத்தை மேட்டிமைப் பார்வைகள் ( Elitist ) கண்டு கொள்வதில்லை என்கிற குற்றச் சாட்டை அடித்தட்டு நோக்கில் வரலாற்றை ஆராய்கிறவர்கள் முன் வைப்பது குறிப்பிடத் தக்கது.

அசுத்தமானவர்களாகவும், குடியர்களாகவும், ஊதாரிகளாகவும் மேலிருந்து கீழாக இயக்கப்பட வேண்டியவர்களாகவும் கருதும் மேட்டிமை அணுகல் முறையை அடித்தட்டு மக்கள் நோக்கு ஆய்வாளர்கள் மறுக்கின்றனர். குடியாகவும் ஊதாரிச் செலவாகவும் மேலோட்டமாகப் பார்க்கும் போது தெரிபவை, ஆழமாகப் பார்க்கும் போது ஒரு வகையிலான எதிர்ப்பு வடிவங்களாகத் தோன்றுகின்றன என இவர்கள் கூறுகின்றனர். புதுமைப் பித்தன் சொல்வார்: ‘‘எங்களூர் மறவர்களுக்கு ‘பிசினஸ் டல் சீஸனில்’ (அதாவது திருட்டுத் தொழில் சாத்தியமில்லாத போது —அ. மா.) சுடலை மாடன் பாடு கொண்டாட்டம்தான். தினம் திருவிழா. நாலு பணத்தைக் கண்டால் சுடலைக்குப் படைப்பு என்ற சம்பிரதாயத்தை வைத்துக்கொண்டு குடித்துக் களிப்பார்கள்’’ - (‘தனி ஒருவனுக்கு’). அடித் தட்டு மக்கள் குறித்த மேட்டிமைப் பார்வைக்கு இது ஒரு சரியான எடுத்துக்காட்டு. நாலு பணத்தைக் கண்டதும் அதனைச் செவழிக்காமல் சேமித்து வைக்கிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம். என்ன ஆகும்? அவர்களின் வாழ்க்கைச் சூழலில் அது வட்டியாகவும் திரையாகவும் மீண்டும் உயர் சாதியினரின்

படிப்பகம்

www.padippakam.com



கைகளிலேயே போய்க் குவியும். எனவேதான் 'சேமிப்பதே பாவம்' என்பது போன்ற மதிப்பீடுகள் பழங்குடியினரிடம் உள்ளன என் கின்றனர் ஆய்வாளர்கள்.

புதுமைப்பித்தனிடமிருந்த இந்த மேட்டிமைத் தன்மை மிக்க மேற்சாதி மனப்பான்மையின் விளைவாகத்தான் கிறிஸ்தவ மத மாற்றத்தின் ஊழல்களை அவர் பூதாகாரப்படுத்திப் பார்க்க நேரிடு கிறது. திருநெல்வேலி - பாளையங்கோட்டைப் பகுதியில், கல்வித் துறையில் கிறிஸ்தவ நிறுவனங்களின் ஆதிக்கம் பிரசித்தம். மத மாற்றத்தால் பயனடைந்த கிறிஸ்தவர்கள் இந்த இரட்டை நகர்க ளில் கணிசமான அளவிற்கு ஆதிக்க சக்திகளாக இருந்து வந்திருக் கின்றனர். இந்த நிறுவனங்களில் நடைபெறும் ஊழல்களும் மத மாற்றத்திற்கு அவர்கள் பயன்படுத்தும் வழிமுறைகளும் எல்லா பிள்ளைமார்களையும் போலவே புதுமைப்பித்தனையும் பெரிதும் பாதித்திருக்கின்றன. பித்தனின் பார்வையில் கிறிஸ்தவ பாதிரிமார் கள் (அர்ச். ஞானானந்த சாமியார் —'அவதாரம்', ஞானப்பிரகாச அடிகளார் —'புதிய நந்தன்') தவிர, தேவ இறக்கம் நாடார்('நியா யம்'), ஜான் டென்வர், சுவாமிதாஸ் ஐயர் ('கொடுக்காப்புளி மரம்') போன்ற எல்லாக் கிறிஸ்தவர்களும் மூட மத வெறியர்கள், அற்பர் கள், சின்னப்புத்தி உடையவர்கள். லில்லி அற்புதம் ஜயலக்ஷ்மி ஒரு பார்ப்பனனைத் திருமணம் செய்து கொண்டு, அவனுக்காக மாமிச உணவு உட்பட எல்லா பழக்க வழக்கங்களையும் மாற்றிக் கொண்டு வாழ்ந்ததை "ஐயா, கிறிஸ்தவ மதத்தினளானாலும் ஒரு பெண்" என்பார் ('புதிய கூண்டு'- அழுத்தம் நம்முடையது) பித்தன்.

கிறிஸ்தவப் பாதிரிகளின் இழிவுகளில் முக்கியமானதாகப் பித் தன் கருதுவது அவர்கள் சிலரிடத்தில் உள்ள ஓரினச்சேர்க்கை (புதியநந்தன்', 'அவதாரம்'). அவரைப் பொறுத்த மட்டில் ஒரு வன் - ஒருத்தி, கணவனுக்குப் பணிவிடை செய்யும் தர்க்க அறிவற்ற மனைவியின் சுகம்— என்பதே இலட்சிய வாழ்க்கை. ஓரினச் சேர்க்கை போன்ற 'அருவெறுப்பு'களையும் 'மன விகாரங்களை' யும் இயற்கைக்கு விரோதமான இச்சைகளையும் அவரால் சகித்துக் கொள்ள இயலாது. இட்லர் ஒரு கொடிய பாசிஸ்டாக இருந்தபோதி லும், அவன் ஒரு ஓரினச் சேர்க்கையாளன் இல்லை என்பதில் பித் தனுக்குப் பரம திருப்தி (கப்சிப் தர்பார்). பிரமச்சரிய வாழ்க்கை என்பதுகூட அவரைப் பொறுத்த மட்டில் இயற்கைக்கு முரணான ஒன்றுதான் ('அவதாரம்', 'வாடாமல்லி').

பாதிரிமார்களிடம் மக்கள் மரியாதையாய் இருப்பதைப் பித்த னால் சகித்துக் கொள்ள முடியாது ('அவதாரம்'). புண்ணைக் காட்டிப் பிச்சை வாங்குவதும், கிறிஸ்துவின் புண்ணைக் காட்டி மோட்ச சாம்ராஜ்ய நம்பிக்கை ஊட்டுவதும் ஒன்றுதான் என்பார் ('அவதாரம்'). 'புதிய கூண்டில்' வருகிற கிட்டுவைப் போன்ற உணர்ச்சி வசப்படக் கூடிய பலவீனர்களுக்கே மதம் மாறுகிற சபல புத்தி இருக்கும் என்பார். 'திட சித்தமும், எதையும் தனது அறிவுத் தராசில் போட்டு நிறுக்கும் உறுதியும் உடைய' அம்பி

படிப்பகம்

www.padippakam.com



போன்றவர்களை மத மாற்றத்திற்குப் பலியாகாது, "மடிந்தாலும் ஹிந்து தர்மத்திற்காக மடிவோம்" என முழங்கும் உறுதி படைத்தவர்களாகச் சித்தரிப்பார். அம்பி மன உறுதி மிக்கவன் மட்டுமல்ல, ஒரே குத்தில் அண்ணனை வீழ்த்தும் உடலுறுதி படைத்தவனாகவும் சித்தரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

தாழ்த்தப்பட்டவர்கள், மீனவர்கள், தீண்டாமைக் கொடுமைக்குள்ளாகியிருந்த நாடார்கள் ஆகியோர் மத்தியில் சென்ற நூற்றாண்டில் கல்விப் பரவல், சனநாயக வேட்கை (எ. டு: தோள் சீலை போராட்டம்), மேல் நோக்கிய நகர்வு போன்ற இயக்கங்கள் ஏற்பட்டதில் கிறிஸ்தவத்தின் பங்கு முக்கியமானது. கிறிஸ்தவமும் ஆங்கில ஆட்சியும் கொண்டு வந்த மாற்றங்கள் மேற்குறிப்பிட்ட ஒடுக்கப்பட்ட பிரிவினர் மத்தியில் உரிமை வேட்கை கிளறப்படுவதற்கு பின்புலமாக அமைந்தன. கிறிஸ்தவத்தை இந்நோக்கில் புதுமைப்பித்தனால் அணுக இயலவில்லை. தாழ்ந்த சாதியினருக்கு கிறிஸ்தவத்தில் பிடிப்பு ஏற்படுவதற்கு பித்தன் கண்டுபிடித்துச் சொல்லும் காரணம் ரசமானது. ஒரு திருநெல்வேலிப் பிள்ளைமாருக்கு மட்டுமே தோன்றக் கூடியது. சொல்வார்: "மேலும் ஹிந்து தர்மம் -தாழ்ந்த வகுப்புகள் (எனப்) 'பொட்டுக்கட்டி' தன் விசேஷ பரிவைக் காட்டிவரும் சில வகுப்பின் ஆசாரங்கள் மாமிச உணவை விலக்கி வைக்காதிருப்பதால், இவ் வகுப்பிலிருந்து பிற மதங்களுக்குப் போகிறவர்களுக்கும் அவர்களுக்கு மிடையில் தொடர்பு அவ்வளவாக அறுந்துவிடுவதில்லை" ('அவதாரம்').

ஒரினப் புணர்ச்சியைப் போலவே மாமிச உணவு விருப்பையும் புதுமைப்பித்தன் இழிவாகவே மதித்தார். கோபாலய்யங்காரைப் பற்றிச் சொல்ல வரும்போது "குடிகாரர்தான். ஆனால் மாமிச பட்சிணி அல்ல" என்பார் ('கோபாலய்யங்காரின் மனைவி'). புதுமைப்பித்தனின் பிரதிகளில் காணப்படும் கலப்புத் திருமணங்களில் மாமிச உணவு ஒரு பிரச்சினையாகிவிடுகிறது. அவர்கள் உறவு நீடிக்க வேண்டுமானால் ஒன்று ஜயாவைப் போல (கவனியுங்கள்: பித்தன், மாறிய மனைவியை 'வில்லி' எனச் சொல்வதில்லை; ஜயா என்றுதான் சொல்வார்.) மாமிச உணவை விட்டுவிட்டு இந்துப் பெண்ணாக மாற வேண்டும் ('புதிய கூண்டு'). அல்லது கோபாலய்யங்காரைப் போல குடியோடு மாமிசத்தையும் பழகிக் கொள்ள வேண்டும். மாமிசம் = குடி = டிரியோ டிரியோ பாட்டு ரசனை = ஏ பார்ப்பான், என்னடி இடைச்சி போன்ற கணவன் - மனைவி உரையாடல்கள் என்பதான ஒரு சமன்பாடு — இவை அனைத்தும் இழிவு என்கிற சாய்வுடன் —பிரதியில் கட்டமைக்கப்படுகிறது ('கோபாலய்யங்காரின் மனைவி'). [சொந்த வாழ்க்கையிலும் கூட காச நோயிலிருந்து தப்புவதற்காகக் கூட முட்டை போன்ற அசைவ உணவை உண்ண பித்தன் தயாராக இல்லை என்பதை ரகுநாதன், க. நா. சு ஆகியோரின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம்.]

படிப்பகம்

www.padippakam.com



இந்து மரபைக் கேள்விக்குள்ளாக்கும் சில பிரதிகளைக் கட்டமைத்த புதுமைப்பித்தன், இந்து மரபு×மேலை மரபு என்கிற முரணை எழுப்பும் போதெல்லாம் இந்து மரபின் பக்கமே சாய்கிறார். 'உபதேசம்', 'நாசகாரக் கும்பல்' போன்ற கதைகளில் இந்திய மருத்துவம் மற்றும் மரபுடன் ஒப்பிட்டு நவீன மேலைச் சிந்தனை சற்றே கீழிறக்கப்படுவதைக் காணலாம்.

புதுமைப்பித்தனின் சினிமா முயற்சிகள் அனைத்தும் மூன்றாம் தர புராணக் குப்பையின் அடிப்படையிலேயே அமைந்தன ('அவ்வையார்', 'காமவல்லி' 'சரஸ்வதி விஜயம்') என்பதும், அவ்வையாரின் சரித்திரத்தை எழுத நேர்ந்ததில் அவருக்கு ரொம்ப திருப்தி என்பதும் (பார்க்க: ரகுநாதனின் 'புதுமைப்பித்தன் வரலாறு') இங்கே குறிப்பிடத்தக்கது. கிட்டத்தட்ட இதே காலகட்டத்திலும் அதற்குப் பின்னும் திராவிட இயக்கத்தினர் எடுத்த திரைப்படங்கள் இவற்றுடன் ஒப்பு நோக்கத் தக்கன.

இறுதியாக புதுமைப்பித்தனின் கதைமாந்தர் பற்றிச் சொல்வது முக்கியம். புராணக் கதைகளையும் 'துன்பக்கேணி' போன்ற அடித்தட்டு மக்களின் அவலங்களைச் சொல்ல வந்த வெகு சில கதைகளையும் தவிர, மற்றெல்லாவற்றிலும் பிரதான கதை மாந்தர்களில் தொண்ணூறு சதம் பேர் சைவப் பிள்ளைமார்கள் அல்லது பார்ப்பனர்கள். பிரதான கதை மாந்தர் தவிர தற்செயலாகக் கதையில் வருபவர்கள் கூட பிள்ளைமார்களாகவே உள்ளனர். ஏட்டுப்பிள்ளை, ஹோட்டல் பிள்ளை, கடைப்பிள்ளை, காஷியர் பிள்ளை, திருக்குறள் பிள்ளை எனப் பிள்ளைமாரின் பெரிய உலகம் பிரதியில் விரிகிறது. மறவர்களும் பறையர்களும் விளிம்பிலேயே நிறுத்தப்படுகின்றனர். தாசில்தார் பிள்ளை மகனாகிய விருத்தாசலம் பிள்ளை புதுமைப் பித்தன் எனப் பெயர் சூட்டிக் கொண்டதுகூட இந்து மரபு தாக்கத்தின் விளைவுதான் எனக் கருத இடமுண்டு. கவிதைக்காக அவர் இன்னொரு புனை பெயரைத் தேர்வு செய்த போது வேளூர் வெ. கந்தசாமிப் பிள்ளை என்கிற பெயரையே தேர்வு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கடவுளைக்கூட அவர் பிள்ளைமாரின் (பழைய பரமசிவன் பிள்ளை) அடையாளங்களுடனேயே சித்திரிக்கிறார்.

'பாப்லின் ஷர்ட்டும் ஷெல் பிரேம் கண்ணாடியும்' போட்டவர்களை நோக்கி எழுதிக் குவித்('கவந்தனும் காமனும்')தவர் புதுமைப்பித்தன். அவர் காலத்தில் இவர்களே பெரும்பான்மையான வாசகர்களாக இருந்தனர். இந்து சனாதனக் கறை படிந்த ஒரு மொழியின் விளையாட்டில் பிரக்ஞையின்றி அகப்பட்டுச் சுழன்றவர் புதுமைப்பித்தன். சமகால சனரஞ்சக எழுத்தாளர்களிடமிருந்தும் சிறுபத்திரிகை எழுத்தாளர்களிடமிருந்தும் பல்வேறு அம்சங்களில் வியக்கத்தக்க அளவில் வேறுபட்டு நிற்கக் கூடியவராக அவர் விளங்கினார் என்பதையும், பல குரல் ஒலிக்கத்தக்க திறந்த பிரதிகள் சிலவற்றை அவர் உருவாக்கினவர் என்பதையும் சொல்லும்போதே, அவரது பெரும்பான்மையான பிரதிகள் வாசகனை அன்றைய

படிப்பகம்

www.padippakam.com



ஆளும் கருத்தியலின் விருப்பிற்கு ஆட்படுத்தக் கூடியதாகவே இருந்தன என்பதை நாமாவது சொல்லியாக வேண்டியிருக்கிறது. இன்று வாசகப் பரப்பு விரிந்திருக்கிறது. இதுகாறும் இலக்கியச் செயற்பாடுகளின் விளிம்புக்குத் தள்ளப்பட்டவர்கள், இன்று அவற்றில் தங்களுக்குரிய இடத்தை நிலைநாட்டக் களத்தில் இறங்கியுள்ள ஒரு சூழலில், ஒரு தலித்தாக, ஒடுக்கப்பட்டவனாக, பெண்ணாக, இசுலாமியனாக, குற்றப் பரம்பரையினனாக, தோட்டியாக, மலம் அள்ளுபவனாக இருந்து பிரதிகளை அணுக வேண்டியிருக்கிறது. இந்த நோக்கில் புதுமைப்பித்தனின் பிரதிகளில் மறைந்தும் வெளிப்படையாகவும் கிடக்கிற இந்த ஆபத்தான கூறுகளை நாம் சுட்டிக்காட்டுவது தவிர்க்க இயலாததாகிறது. ●

நூல் நலம்

# கடந்து போக முடியாத கதைகள்

## பெருமாள் முருகன்

அடிமட்டத்து மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பேசுகிற கதைகள் தமிழில் நிறையவே உண்டு. அவை ஞாயிற்றுக் கிழமைகளில் பலகாரம் கொறித்துக் கொண்டே 'அடடா...எத்தனை கஷ்டம்' என்று மூக்கைச் சிந்தி மேஜைக்கு அடியில் துடைத்துக் கொள்ளும் மனிதர்களுக்கானவை; அந்த மனிதர்கள் இரங்கத் தக்கவர்கள் என்னும் பிம்பத்தையும் மற்றவர்கள் இரக்கம் மிகுந்தவர்கள் என்கிற மாயையையும் உருவாக்கும் 'பரிதாபக்' கதைகள்;

**மிச்சமிருப்பவன்**
—இரா. நடராசன்
காவ்யா வெளியீடு, பெங்களூர்-560 038.
பக்கங்கள்: 137, விலை ரூ. 20.

'இப்படியும் ஒரு வாழ்க்கை இருக்கிறது பாரேன்' என்று இலக்கிய 'ரசிகர்கள்' நாலுபேரிடம் உச்சுக் கொட்டிக் கொண்டு பரிமாறிக் கொள்ளும் விதமாக அமைந்தவை.

படிப்பகம்

www.padippakam.com



இரா. நடராசனின் கதைகளும் அடிமட்டத்து மக்களின் வாழ்க்கையைப் பேசுபவைதான். ஆனால் படிக்கிறவர்களின் நெஞ்சை நோக்கி 'நீதான், நீதான்' என்று விரல் நீட்டிக் குற்றம் சாட்டுபவை. படிப்பவர் எந்த மட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, அடிமட்டத்து மனிதர்களாகவோ அவர்களை உறிஞ்சுகிறவனாகவோ தன்னை அடையாளம் கண்டு குறுக வைக்கிறது. இரா. நடராசனின் வெளிப்பாட்டின் தீவிற் தொனி, வெறும் பரிதாபச் சொற்களை உதிர்த்தெறிந்துவிட்டு நடக்க அனுமதிப்பதில்லை.

அவர் மலம் அள்ளுகிற பெண்ணின் கதையைச் சொன்னால், 'அவள் உன் மலத்தை அள்ளுகிற பெண்' என்று குறிவைக்கிறார். 'ரெண்டு ரூபா தீர்ற வரைக்கும் இந்த உடம்பு என்னுதுரா' என்று உயரும் குரல் எல்லாரைப் பார்த்தும்தான் பேசுகிறது. நாள் முழுக்க உழைத்தவனைப் பார்த்து, 'வாய்யா... கெள்டு. வந்து குடி... அப்படியே உழைச்சு ஒஞ்சுபுட்டீக பாரு... வா...வாய்யா...' என்று அழைக்கும் கிண்டல் குரல் நமக்குள் இருந்துதான் கேட்கிறது. 'சோமாசி' பேசும் 'நீ' யாரோடு? படிக்கிற எல்லாரோடும்தான். ஏதாவது ஒரு வரியில் ஆண்கள் தலை குனிய வேண்டியிருக்கிறது. சோமாசியாகப் பெண்கள் தங்களைக் கண்டுக் கொள்ள நேர்கிறது. அதே போலத்தான் சுசியும் சுசி கணவனும். இவ்விதம் நடராசனின் ஒவ்வொரு கதை பற்றியும் நாம் சொல்ல முடியும். வாசகன் தன்னைப் பரிசீலித்துக்கொள்ள வைக்கும் கதைகள் இவை.

அவ்விதமே தங்களிடம் இருக்கிற எல்லாத் தீர்த்தங்களையும் தெளித்து அம்மக்களைப் புனிதமாக்குகிற கதைகளுக்கு நடுவே, புனிதங்களை அனாயசமாக விலக்கி எறிந்துவிட்டு, 'இதுதான் இவர்கள்' என்று நடராசன் மனிதர்களை உள்ளபடியே காட்டுகிறார். அடிமட்டத்து மக்கள் மீது பரிதாபச் சந்தனக் கரைசலைத் தெளிக்காமல், 'வறுமையிலும் செம்மை' என்கிற மாதிரி புனிதக் கவசத்தை மாட்டாமல் இயல்பாக உலவவிடுகிறார். அதோடு படிக்கிறவர் தான் என்னவாக இருக்கிறோம் என்பதை உணரும் விதமாக நாசுக்கு இல்லாமல் நேரடியாகக் குற்றம் சாட்டுகிறார் நடராசன். இவ்விரண்டும்தான் நடராசன் கதைகளின் புதுமைக்கும் வெற்றிக்கும் காரணங்கள்.

மேலும் வெளிப்பாட்டுத் திறன் கூடி, சொல்லும் விசயத்திற்கு இத்தனை பொருத்தமாக உருவமும், உக்கிரமும் வேகமும் கொண்ட நடையுடன் அமைந்துவிட்டிருப்பது அவ்வளவு சாதாரணமாகக் கடந்து போக முடியாத கதைகளாக இவைகளைச் செய்திருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com

தொடர்: 5

# நானும் நாடகமும்

ஜெயந்தன்

— ஒரு சந்தேகம். நீங்கள் சொன்ன பாஞ்சாலி சபதத்திலும் மனுஷா மனுஷாவிலும் நடிகர்கள் நடிப்பதற்கான சாத்யங்கள் மிகப் பிரமாதமான அளவிலிருந்தன. குறிப்பாக மனுஷா மனுஷாவில் இல்லாத பொருட்களை இருப்பதாக பாவனை செய்ய வேண்டிய அவசியத்தில் நடிகர்களுக்கான சவாலே இருந்தது. ஆனால் இப்படி நடிப்புக்கான பிரமாதமான வாய்ப்புகள், ஒரு வசதிக்காக சொன்னால், 100 விழுக்காடு வாய்ப்புகள் எல்லா நாடகங்களிலும் அமையுமா? சாத்தியமா? அப்படி அமையாத நாடகங்களை என்ன வகையில் சேர்ப்பது?

—ஆங்! பேச வேண்டிய விஷயந்தான். நீங்கள் சொன்னபடியே ஒரு வசதிக்காக இந்த விழுக்காடு கணக்கையே எடுத்துக் கொள்வோம்.

ஒரு நாடகத்தில் நடிப்புக்கு 100 புள்ளிகள் எதிர்பார்ப்பு என்றும் நான் சொன்ன 'இணைப்பிற்கு' (உள்ளடக்கத்திற்கு) 100 புள்ளிகள் எதிர்பார்ப்பு என்றும் வைத்துக்கொள்வோம். சில சமயம் 'இணைப்பு' மிகப் பிரமாதமாக இருந்து, அதை இழக்கக்கூடாது என்று நாம் விரும்புகிற பட்சத்தில் நடிப்புக்கான எதிர்பார்ப்பு கொஞ்சம் கீழே இறங்குவதில் தவறில்லை. உதாரணமாக, நடிப்பு சாத்தியம் 75 அல்லது 60 வரை கூட இருக்கலாம். ஆனால் எந்தக் காரணத்தைக் கொண்டும் அதற்குக் கீழே இறங்கி விடக்கூடாது. ஏனென்றால் நாடகம் என்பது நடிப்புக் கலைக்காகத்தான் ஏற்பட்டது. அது தன் மூலக்கூறை இழந்துவிட்டு, இணைப்பான இலக்கியத்தையோ அல்லது ஏதாவது ஒரு உள்ளடக்கத்தையோ, தான் தான் அது என்று கூறிக்கொண்டு நிற்க முடியாது.

சமீபத்தில் நான் ஒரு நாடகம் பார்த்தேன். மேடையில் ஒரு மேஜை. மேஜையின் முன்பாகவும், பக்கவாட்டிலும் இரண்டு கதாபாத்திரங்கள். ஒரு கதாபாத்திரம் ஒரு நாட்குறிப்பை எடுத்துப் படிக்கிறது. இன்னொன்று ஆடாமல் அசையாமல் உட்கார்ந்து அதைக் கேட்டுக் கொண்டிருந்தது. முன்னது படிக்கிறது... படிக்கிறது... படித்துக்கொண்டே இருக்கிறது. பின்னது கேட்கிறது... கேட்கிறது... ரசிகர்கள் பயங்கர எரிச்சல் அடைகிற வகையில்.

அது எப்படியொரு நாடகமாகுமென்று அந்த நாடகக் குழு நினைத்ததோ தெரியவில்லை. ஒருவேளை அதன் உள்ளடக்கம் ஒரு நல்ல சிறுகதைக்கு ஏற்றதாக இருந்திருக்கலாம். அப்படியானால் அது தவறான கதை வடிவத்திற்குள் திணிக்கப்பட்டு அழிந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



எனக்கு ஞாபகம் வருகிறது. மதுரையில் ஒரு நாடகக் குழு. மேடையில் இரண்டு கதாபாத்திரங்கள் நாற்காலிகளில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கின்றன. (அந்த இரண்டு ஆண் நடிகர்களின் முகமெல்லாம் அரிதாரம், உதட்டுச்சாயம்.)ஆனால் நாற்காலிகள் ஒன்றையொன்று பார்த்தல்ல. இரண்டும் ரசிகர்களைப் பார்த்து. இரண்டு கதாபாத்திரங்களுக்கும் 'என்னா மாமா - என்னா மச்சான்' என்று வசனம். இரண்டு நாற்காலிகளும் ரசிகர்களைப் பார்த்துப் போடப்பட்டதால் இரண்டு பாத்திரர்களும் ஒருவரையொருவர் பார்த்துப் பேசுவதற்குப் பதிலாக ரசிகர்களைப் பார்த்து 'என்னா மாமா, என்னா மச்சான்' என்று பேசிக்கொண்டிருந்தனர். இதில் அரசியல் தத்துவங்கள் வேறு.

நான் மறுநாள் —அவர்கள் என் தோழர்கள் என்பதால் கேட்டேன், 'ஏன் அப்படிச் செய்தீர்கள்? இரண்டு மனிதர்கள் பேசும்போது ஒருவரையொருவர் பார்த்துப் பேசுவார்களா; Aline ஆக நின்று கொண்டு முன்னால் இருக்கிற வெற்று வெளியைப் பார்த்து பேசுவார்களா' என்று. அவர்களில், பெரியவர் சொன்னார், "இதப் பாருங்க, ஒங்க நாடக இலக்கணமெல்லாம் எங்களுக்கு வேணாம். எங்களுக்கு வேண்டியது, மேடையில ரெண்டு மைக். அங்க ஒண்ணு இங்க ஒண்ணு. மைக் முன்னால ரெண்டு பேரு. ரெண்டு பேரும் மாத்தி மாத்திப் பேசணும். அது போதும். எங்களுக்கு வேண்டியது கொள்கைப் பிரச்சாரம். அவ்வளவுதான்."

நாடகம் குறித்த இந்தப் பாமரத்தனம்தான் இங்கே சென்னையில் மேற்படி 'நாட்குறிப்பு' நாடகத்தில் நளினமாக அரங்கேறியிருந்தது என்று நினைக்கிறேன். அங்கே 'பச்சையாக' கொள்கைப் பிரச்சாரம்; இங்கே 'உயர் தளத்தில்' மரணம் — மரணமில்லாமை — இடைவெளி — வாழ்வு — குறுக்குவெட்டு வகையறா, வகையறா.

— சரி, நாடகத்தில் நடிப்பின் புள்ளி அறுபதுக்கும் கீழே இறங்கக் கூடாது என்று சொன்னீர்கள். அதே போல் உள்ளடக்கத்தின் புள்ளியும் அறுபதுக்குக் கீழே இறங்கக் கூடாதல்லவா?

— இல்லை. இது குதிரைக்கு குர்ரம் என்றால், ஆனைக்கு அர்ரம் என்ற கதை. நாடகத்தில் நடிப்புக்குள்ள சலுகையும் கண்டிப்பும் உள்ளடக்கத்திற்கு இல்லை. உள்ளடக்கம் சும்மா ஒப்புக்கு பத்து புள்ளி இருபது புள்ளி இருக்கும் நிலையிலே கூட, நல்ல நாடகம் போகமுடியும். ஒரு உதாரணம் சொல்கிறேன்:

சுமார் ஏழெட்டு வருஷங்களுக்கு முன், மதுரையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த நாடகப் பயிற்று விழாவில், பழம்பெரும் நடிகர் எம். என். கண்ணப்பா, 'அரிச்சந்திரா' நாடகத்தை 'ஒற்றை நடிகன்' நாடகமாக (Mono- acting) நிகழ்த்திக் காட்டினார்.

படிப்பகம்

www.padippakam.com



சரியாக ஒரு மணி நேரம் அவர் ஒருவராகவே அரிச்சந்திரன் கதை முழுவதையும் நடித்துக் காட்டினார். உண்மையில் அங்கே 'அரிச்சந்திரன் கதை' அவரது நடிப்பாற்றலை வெளிப்படுத்துவதற்கான ஒரு கருவியாக இருந்ததே தவிர, உள்ளடக்கம் தரும் எந்த செய்திக்காகவும் இருக்கவில்லை. இதை இப்படிக்கூடச் சொல்லலாம்: அந்த நாடகத்தை மகாத்மா காந்தி பார்த்திருந்தால்கூட எம். என். கண்ணப்பாவின் நடிப்பாற்லைத்தான் ரசித்திருப்பாரே தவிர அரிச்சந்திரனின் 'சத்திய வேட்கையை' அவர் கவனித்திருக்க மாட்டார்.

அந்த நாடகத்தில் கண்ணப்பா புலையன் வேஷத்தில் வருவார். கடைசிவரை அந்த ஆடைதான். ஆனால் புலையனாகிவிட்ட அரிச்சந்திரன் சொல்லி வருவதோ தான் ஆரம்பத்தில் அரசனாக இருந்ததிலிருந்து ஆரம்பித்து. ஆகவே அவர் அந்தப் புலையன் ஒப்பனையிலேயே, அரசன்—அரிச்சந்திரனாகவும், உடன் வரும் பாத்திரங்களான விசுவாமித்திரர், காலகண்டன், சந்திரமதி, லோகிதாசன் என்று எல்லாப் பாத்திரங்களாகவும் நடித்துக் கொள்வார். 'இல்லாத பிணத்தை முதுகில்' சுமந்து தள்ளாடித்தள்ளாடி நடப்பார்; இல்லாத மனைவியோடு பேசுவார்; கண் கலங்குவார்; இல்லாத மகனை கட்டியணைத்து அழுவார்; கையிலிருக்கும் தடியோடு அப்படியே தரையில் பாய்ந்து விழுந்து, கரணமடித்து எழுவார். உண்மையில் அது ஒரு கண்கொள்ளாக் காட்சி.

நடிப்புக்கலை மட்டுமே தனியாக நின்று சவால்விட்டு வெற்றி கொள்ளும் காட்சி.

ஆனாலும், இதுமாதிரியெல்லாம், விதிவிலக்காக, எங்காவது எப்போதாவதுதான் நிகழ முடியும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

— இது விதிவிலக்காக இல்லாமல், உங்கள் பேச்சில் மயங்கி எல்லாரும் இதுமாதிரி அரிச்சந்திரா, கோவலன், ஒத்தெல்லோ, கடோத்கஜன் என்று ஆரம்பித்து விட்டால் நீங்களே அதிர்ந்துபோய் 'உள்ளடக்கத்திற்குத் திரும்புங்கள்' என்று குரல் எழுப்ப ஆரம்பித்துவிடுவீர்கள், இல்லையா?

—நீங்கள் மட்டையை சரியாகத்தான் பிடிக்கிறீர்கள்.

— சரி. நான் மீண்டும் விட்ட இடத்தைப் பிடிக்கிறேன். நாடக இலக்கணங்களுக்கு விளக்கமாக பாஞ்சாலி சபதம் மனுஷா மனுஷாவை உதாரணப்படுத்தினீர்கள். நாடகத்திற்காக எழுதப்பட்ட நாடகப் பிரதியில் நிதர்சன வடிவத்திற்கு எடுத்துக்காட்டு பாக்கியிருக்கிறது.

—ம். இங்கே ஒரு சிக்கல். காவியத்திலிருந்து நாடகமாக்கம் குறித்தும், நாட்டார் வகை கதை மரபிலிருந்து செய்யப்படும் நாட

படிப்பகம்

www.padippakam.com



கம் குறித்தும் சுலபமாகவே என்னால் உதாரணம் காட்ட முடிந்து விட்டது. ஆனால், நிதர்சன வடிவ நாடகத்திலிருந்து ஒரு ஒற்றை நாடகத்தைத் தேர்வு செய்து பேசுவது அவ்வளவு சுலபமா யில்லை. ஏனென்றால் இந்த வகை நாடகப் பிரதிகள் அனந்தம். இதுவரை பெரும் சாதனைகள் எல்லாம் இந்த வகையில்தான் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவைகளின் உள்ளடக்க உயரங்களும் அப்படி; கலை மேன்மையும் அப்படி. அவை பரந்துபட்டவை. ஒன்றையொன்று மிஞ்சுபவை. ஒன்றில் இல்லாதது இன்னொன் றில் இருக்கும். இதில் இல்லாதது முந்தயதில் இருக்கும். இதில் ஒரு பிரதியை மட்டும் தேர்வு செய்து காட்டுவது கஷ்டம். அதோடு உங்களுக்கு நஷ்டமாகவும் போகலாம்.

ஷேக்ஸ்பியர்— செகாவ்— இப்ஸன்— காளிதாசன்— தாகூர்— பாஸன் என்று எல்லாரும் இதில்தான் விளையாடி இருக்கிறார்கள்.

அரசுக் கட்டிலில் ஏறி, அது தரும் சகல மமதைகளோடு - சகல வேண்டாதவைகளோடு வலம் வரும் ஒரு மன்னன் அவனைப் பொறுத்து, எல்லாம் சரியாகப் போய்க் கொண்டிருக்கும் வரை தன் உயிரின் விலைபற்றி எந்தக் கட்டத்தில் சிந்தித்துப் பார்த் திருக்க முடியும்? ஆனால், பீடம் பறிபோய், தலைக்குக் கத்தி வந்துவிட்ட தருணத்தில் தப்பித்தால் போதுமென்று ஒரு குதிரை தேடி A horse! A horse! A kingdom for a horse! என்று ஓடும்போது ஷேக்ஸ்பியர் நமக்கு அளிப்பது மனித சிந்த னையின் ஒரு சிகரம் மட்டுமா? மேடையில் ஒரு நடிகனும் அதே உயரத்திற்கு நடிப்புக் கலையும் தாவிச் செல்லும் சாத்தியமும் அல் லவா? இந்தக் கட்டத்தில் எந்த நடிகனும், சும்மா சாவி கொடுத்த பொம்மை மாதிரி A horse,A horse என்று மேடையில் ஓடிவிட முடியுமா?

மேக்பத்தில், மேக்பத், அரசன் டங்கனைக் கொலை செய்கிற கட்டம். ஆனால், அந்தக் காட்சியில் ஷேக்ஸ்பியர் மேக்பத் தையோ, 'டங்கனையோ, கொலைக் காட்சியையோ காட்டவில்லை. மாறாக, கணவனை கொலை செய்ய அனுப்பிவிட்டு, தன் அறையில் காத்திருக்கும் லேடி மேக்பத்தையே காட்டுகிறான்.

அவள் தனக்குத்தானே தைரியம் ஊட்டிக் கொள்கிறாள்.

That which (drugged wine) hath made them (servants) drunk
Hath made me bold.
What hath quenched them hath given me fire.

உள்ளே பயம், படபடப்பு, மூச்சு வாங்கும் எதிர்பார்ப்பு. எல் லாவற்றையும் அடாவடியாக நிராகரித்துப் பார்ப்பது—இவைகளுக் கிடையேதான் கொலை செய்யப்படுபவனின் அலறலுக்குப் பதிலாக கொலை செய்யப் போன கணவனின் குரல் கேட்கிறது.

Who's there? What? Ho!

இந்தக் கணத்தின் நில நடுக்கத்தை ஒரு நடிகை மூலமாக பார்வையாளன் கண்ணில் எறிவதுதான் ஷேக்ஸ்பியரின் நோக்கம்.

படிப்பகம்

www.padippakam.com



அதுதான் ஷேக்ஸ்பியர் என்னும் Human Estimation இல் தலை சிறந்த மேதையை ஒரு தலைசிறந்த அரங்க மேதையாகவும் ஆக்குவது.

பெட்ரோல்ட் பிரக்டின் The life of Galileo வில் ஒரு காட்சி. கலிலியோ மீது மதவாதிகள் கடுமையான போர் தொடுத்திருக்கி றார்கள். போப்பாண்டவர் அதன் மேல் ஒரு முடிவுக்கு வரவேண் டிய கட்டம்.

போப்பின் அறையில் வைத்து Cardinal Inquisitor கலிலியோ மீது நடவடிக்கைக்கு உத்தரவிட வேண்டுமென்று வாதாடுகிறார். ஆனால், போப் முதலில் அதற்கு மறுப்பு தெரிவிக்கிறார். அறிவி யல் அதன் போக்கில் போகட்டும் என்கிறார். ஆனால் Cardinal பேசப் பேச போப் தனது நிலையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக இறங்கி வருகிறார். கடைசியில்தான் Instrument உத்தரவிட ஒப் புக் கொள்கிறார்.

இந்தக் காட்சியில் பிரக்ட் ஓர் அற்புதமான குறியீட்டு உத்தி யைப் பயன்படுத்துகிறார்.

காட்சியின் ஆரம்பத்தில் போப் குளித்துவிட்டு வந்து எளிய உள்ளாடையோடு நின்றுகொண்டிருக்கிறார். அவருக்கு, போப் பாண்டவருக்கான ஆடைகள் அணிவிக்கப்பட உள்ளன.

ஆரம்பத்தில் எளிய உள்ளாடையோடு மட்டும் இருக்கும் போப் கார்டினல் பேச்சைக் கடுமையாக மறுக்கிறார். 'I will not have the mathematical tables destroyed. No!

அப்போது இரண்டு ஊழியர்கள் வந்து அந்த உள்ளாடை மேல் இன்னொரு ஆடையை அணிவிக்கின்றனர்.

கார்டினல் தொடர்ந்து பேசுகிறார்.

அடுத்த ஆடை.

கார்டினல் பேசுகிறார்.

போப்பின் பேச்சில் கொஞ்சம் இறக்கம்.

அடுத்த ஆடை.

கார்டினல் பேசுகிறார்.

இப்போது நீள அங்கி.

இப்படியே இந்தச் சுற்றிலேயே, போப்பிற்கான முழு ஆடைக ளும் அணிவிக்கப்பட்டு தலையணியும் அணிவிக்கப்பட்ட பிறகு தான் போப் சொல்கிறார்: The very most that may be done is to show him the Instrument.

Instrument என்பது அரசோ மத பீடமோ 'குற்றவாளிகளை' துன்புறுத்தி(Torture) 'உண்மைகளை' வரவழைக்கும் முறையாகும்.

இந்த நாடகத்தில் இந்த 'ஆடை அணிவிப்பு' உத்தி எதற் காக என்பது உங்களுக்குப் புரிகிறதா?

— சொல்லுங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



—போப்பின் ஆடைகள் என்பது ஒரு 'மதச்சின்னம்.' அதை அணிந்திருக்கும்போது அம்மனிதர் அந்த மதமே ஆகிவிடுகிறார். அவர் அந்த மதத்தின் 'காவலர்'; அதன் சட்டங்களின் ஊழியர். அவரால் அந்த சட்டங்களை மீறி எந்தவிதத்திலும் செயல்பட்டு விட முடியாது, —தனி மனிதன் என்கிற முறையில் அவருக்கு என்னதான் தனிப்பட்ட கருத்துகள் இருந்தபோதும்.

ஆகவேதான் அவர் 'போப்'பிற்கான எதுவுமில்லாமல் நிற்கிற போது அறிவியலுக்கு ஆதரவாகப் பேசமுடிகிறது. முன்பும் அவரது செயற்பாடுகள் அந்தவிதமாகவே இருந்ததால்தான் ஒரு கட்டத்தில் கலிலியோவையேகூட 'Besides, the Pope himself would counter any attempt to entrap me with a forceful no! என்று சொல்ல வைக்கிறது.

ஆனால் இப்போது 'போப்பின் முழு ஆடைகள்' அவர் மீது ஏறி அமர்ந்துவிட்ட பிறகு அவரால் Instrumentக்குத்தான் ஒப்புதல் கொடுக்க முடியும்.

ஆன்டன் செகாவின் 'செர்ரி ஆர்ச்சார்ட்' நாடகத்தில் அவர் நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதாலாளித்துவத்திற்கு மாறிய முழு ரஷ்யாவையும் அப்படியே படம் பிடித்துவிட்டதாகச் சொல்வார்கள். அதிலும் இந்த மாற்றத்தால் கைவிடப்பட்ட பண்ணைத் தொழிலாளி வர்க்கத்தை ஒரு 'கிழச் செவிட்டு பண்ணைத்தொழிலாளியாக ( Feers ) காட்டி, அந்தப் பிரபு குடும்பம் தங்கள் நில புலங்களை மில் வியாபாரிக்கு விற்றுவிட்டு மாஸ்கோ கிளம்பும் போது அந்த செவிட்டுக் கிழவனை என்ன செய்வதென்று தெரியாமல், ஒன்றும் சொல்லாமல், அவன் பண்ணை வேலைக்குப் போயிருக்கும் நேரம் பார்த்து கிளம்பிப் போய்விட, அவன் மாலை திரும்பி வந்து, வீடு பூட்டிக் கிடப்பதைக் கண்டு திகைத்து, அதன் வாசலிலேயே உட்காருவதோடு நாடகம் முடிவதைக் கண்டு, உண்மையில் நான் ஒரு அதிர்ச்சியுடனே செகாவின் ஆளுமையைத் தரிசித்தேன்.

அதே பரிமாணத்தில் ஒருவன் தனிமனிதனாக இருப்பதற்கும் ஒரு நிறுவனத்தின் அங்கமாகிவிடுவதற்கும் இடையில் உள்ள வெளியை (முன்பே இதே விஷயமாக அன்னை தெரசாவைப் பற்றிக்கூட சொல்லியிருக்கிறேன்.) யாரும் பிரக்ட்டைப் போல இவ்வளவு அழகாக ஒரு காட்சியில் கொண்டு வந்திருக்க முடியாது என்றே தோன்றுகிறது.

— நாடகங்களிலும் இவ்வளவு இருக்கிறதா? உடனே நாடகப் பிரதிகளைத் தேடிப் படிக்க வேண்டும் போலிருக்கிறது.

—பொறுங்கள் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு பிறகு எல்லாவற்றையும் சேர்த்துப் படித்துக் கொள்ளலாம்.

அது சரி, இந்த கலிலியோ நாடகக் காட்சியில் உங்களுக்கு ஒரு சந்தேகம் வரவில்லையா?

படிப்பகம்

www.padippakam.com



— என்ன சந்தேகம்?

—உள்ளடக்க விஷயமாக. அது மகத்தானதுதான். ஆனால் நடிகனுக்கு அந்தக் காட்சியில் உள்ள வாய்ப்பென்ன?

— அதா. அதற்கு விடை எனக்குத் தெரியும் என்பதால் கேட்கவில்லை. ஒரு நடிகன் 'ஒரு தனிமனிதன்' என்கிற பாத்திரத்தில் நின்று அவனுக்கு ஒருவகை ஆடைகள் அணிவிக்க அணிவிக்க, அதன் விகிதங்களுக்கு ஏற்ப, ரசிகர் முன்னிலையிலேயே புதிய பாத்திரமாக தனது உடல் மொழியால் தன்னை மாற்றி உருவாக்கிக் கொண்டு வருவது சாதாரண விஷயமில்லையே. 'போப்' ஒரு குணாம்சமும் அல்லவா? ஒரு நடிகனுக்கு பெண்ணின் ஆடை அணிகலன்களை அணிவிக்க அணிவிக்க, அவன் பெண்ணாகவே மாறிக் கொண்டு வர வேண்டும் என்ற நிபந்தனைக்கும் இதற்கும் வேறுபாடு இருக்க முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை.

—சரிதான். நிதர்சன வடிவத்தில் இன்னொரு குறிப்பிடத்தக்க நாடகம் மோகன் ராகேஷின் 'அறையும் குறையும்.'

— இது இந்திமொழி நாடகமல்லவா?

—ஆமாம். இதில் உள்ளடக்க பூர்வமாக, மேல் நடுத்தட்டு வர்க்கத்தின் கணவன் - மனைவி பூசலின் உக்கிரம், வெகு துல்லியமாகக் காட்டப்பட்டிருப்பதோடு, ஒவ்வொரு கட்டத்திலும் 'நாடகம்' அதோடு இணைந்து போகும் அழகு வியக்கத்தக்கது. வசனத்தின் பெருமை சொல்ல வேண்டுமென்றால், கதாபாத்திரங்கள் நாவாலேயே மற்ற பாத்திரங்களை வெட்டி சிரச்சேதம் செய்கின்றன என்று சொல்ல வேண்டும்.

அதோடு பாத்திரங்களின் Movement மற்றும் உணர்ச்சிக் குறிப்புகள் படிக்கும் போதே ஒரு நாடகத்தைப் பார்த்துவிடும் அனுபவத்தைத் தர வல்லவை.

ஆண் பார்வையால் கடிந்தவாறே அந்த நாற்காலியில் போய் அமருகிறான்.

சிரமத்துடன் கோபத்தை விழுங்கிக் கொண்டு தனது தகிப்பை மறைக்க இயலாமல் மகளை நோக்கி... இப்படி...

அதோடு இந்தப் பிரதியில் மிக முக்கியமான சிறப்பம்சம்— முக்கியமான மூன்று பாத்திரங்களை ஒரே நடிகனே ஏற்று நடிப்பது.

அந்தப் பாத்திரங்கள், கதாநாயகியின் கணவன்—அவளது அலுவலக மானேஜர்—அவளது பழைய காதலன். மூவரும் மிகவும் வித்தியாசமானவர்கள். அவர்களைப் பற்றிய குறிப்பை ஆசிரியர் நாடகத்திற்கு முன்பே கொடுத்துவிடுகிறார். மூவருக்கும் வயது சுமார் 50.

படிப்பகம்

www.padippakam.com



மகேந்திரன்: வாழ்க்கைப் போராட்டத்தில் போராடிக் களைத்து விட்ட முகம்.

சிங்கானியா: முகத்தில் தன்னிறைவான திருப்தி. ஆனால் சந்தேகத்தின் சாயலோடு இடையிடையே திகில்.

ஜக்மோகன்: இடைவிடாத சிகரெட். தன் செளகரியத்திற்காகவே வாழ்வது போன்ற உல்லாச பாவம்— முகத்தில், நடையுடையில்.

— இது சினிமா இல்லையே. நாடகத்தில் எப்படி ஒருவரே மூவராக வருவது சாத்தியம்?

—இல்லை. இதில் சினிமாவில் வருவது போல் டுயல் ரோல் டெக்னிக்கெல்லாம் இல்லை. இந்த மூன்று பாத்திரங்களும் ஒன்றையொன்று சந்தித்துக் கொள்வதே இல்லை. ஒரே செட்டில் (வீடு) அமைந்த இந்த மேடையில், இரண்டாவது பாத்திரத்தின் பிரவேசம் தேவைப்படுகிற நேரத்தில் முதல் பாத்திரத்தை ஆசிரியர் தந்திரமாக வெளியே அனுப்பிவிடுகிறார். ஆனால், சிறிய இடைவெயில் அதே நடிகர்தான் புதிய வேஷத்தில் முற்றிலும் புதிய பாத்திரமாக நடிக்க வேண்டும். இது அந்த நடிகருக்கு சந்தோஷமான சவால் என்பதோடு ரசிகர்களுக்கும் நல்ல விருந்தல்லவா? Off-stage இல் ஒரு நடிகன் உடை மாற்றும்போதே புதிய பாத்திரத்திற்குள் கூடு பாய்ந்துகொண்டல்லவா வருகிறான்! வந்தால்தானே வெற்றி. நாடகம் —நடிகன் —நடிப்பு என்பதன் மேல் மோகன் ராகேஷிற்கு உள்ள பிரக்ஞை வியப்புக்குரியது. இதை இந்த நாடகம் முழுதும் பார்க்க முடியும்.

— இந்த நாடகத்தில் மூன்று பாத்திரங்களை ஒரே நடிகர் ஏற்கிறார். ஆனால் நீங்கள் எனக்குப் படிக்கக் கொடுத்த உங்கள் கவிதை நாடகமான 'மெய்'யில் ஒரு கதாபாத்திரத்தை மூன்று நடிகர்களைக் கொண்டு நடிக்க வைத்திருக்கிறீர்களே? எதிர்மறையாகவல்லவா இருக்கிறது!

## எதிர்பார்ப்புடன்

**அரசுப் பணியிலிருந்து 30-6-1995ஆம் நாள்**

நண்பர் ஜெயந்தனுக்கு ஓய்வு கிடைத்துவிட்டது.

**'இதுதான் வலிமை' என்று அரசுப் பணியில் ஆடிக் களித்தவர்களுக்குப் பணி ஓய்வு என்பது ஒடுங்கும் இடத்தைச் சுட்டும் ஆணையாகலாம். ஜெயந்தனுக்கு அப்படியல்ல. 'என் வலிமை என் பேனாதான்' என்று ஏற்கனவே நிரூபித்த அவரை 'எங்கே, இன்னொரு முறை சொல்லுங்கள்' என்று இலக்கியத்தின் பன்முகப் பரிமாணங்களும் அறைகூவல் விட்டு அழைக்கின்றன. சொல்வதும் வெல்வதும் அவர் சுகப்படும் நேரம்.**

**—ஆசிரியர்.**

படிப்பகம்

www.padippakam.com

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்றபின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.

# கவிதாசரண்

மலர் நான்கு　　ஜூலை, 1995　　இதழ் ஏழு

## சுரணை

சொற்கள் யாவும் சுரணையோடுதான் பிறப்பிக்கப்பட்டிருக்கும். தொடர்ந்த புழக்கத்தில் அவை சுரணை கெட்டுப்போய் மனிதர்களைப் போலவே வெறும் அலங்காரக் குப்பையாகிவிட்டன. ஆனபின்னர், எவனாவது சுரணையை முதன்மைப் படுத்தி, மொழியை அதன் இசைவான தர்க்கத் தளத்தில் பொருத்தினால், ஞானிகளுக்கும்கூட அது குத்தலாகவும் குதர்க்கமாகவும்தான் படுகிறது. என்ன செய்ய. தர்க்கம் நட்பை நட்டப்படுத்தும், எனில், தர்க்கமின்மை தற்குறித்தனத்தின் சிம்மாசனம்தானே? இருபத்தைந்து வயதில் கம்யூனிசம் பேசுவதும் அறுபத்தைந்து வயதில் கடவுளைத் தேடுவதும் மனிதனின் வளர்ச்சி என்று பொன்மொழி பேசும் மௌடிகத் தேசத்தில், தர்க்கம் நட்புக்குப் பகை என்பதற்கும் அறிவு மனிதனுக்குப் பகை என்பதற்கும் என்ன வேறுபாடு இருக்கப் போகிறது?

எல்லாம் சுரணை கெட்ட வழிபாடுகள்தாம்.

★　★　★

சென்ற இதழில் 'நிறப்பிரிகை'யாளர்களைப் பற்றி ஒரு நம்பிக்கையை வெளியிட்டிருந்தோம். இந்த ஆண்டுக்கான 'இந்தியா டுடே' இலக்கிய மலரில் அவர்கள் பங்கேற்றதன் மூலம் அந்த நம்பிக்கையைத் தகர்த்தெறிந்து விட்டார்கள். வெகு அசட்டையாக, 'ஒன்றுமில்லையே' என்பது போலத் தகர்த்துவிட்டார்கள். தகர்ப்பின் பரிமாணம் சாதாரணமானதல்ல. 'இனி தலித்தியவாதியாய் அடையாளப்படுகிறவன் வெறும் கிளுகிளுப்பைக்காரனா, அல்லது அர்ப்பணிப்பு உணர்வுள்ள போராளிதானா? காலத்தை நிர்பந்திக்கப் பேசுகிறவனா, அல்லது காலத்தின் நிர்பந்தத்தைக் காசு பண்ணப் பேசுகிறவனா?' என்று நிதானிக்கப்பண்ணுகிற தகர்ப்பு.

படிப்பகம்

www.padippakam.com



பாறையை வெடி வைத்துத் தகர்த்தால் தெறித்து விழுமே கல், ஆயிரம் கூர்களோடு- அதுமாதிரி கூர்மையுள்ள நேர்மையாளர்களாய்த் தோற்றம் காட்டியவர்கள். இப் பங்கேற்பின் மூலம் வெறும் கூழாங்கல் மாதிரி தங்கள் முகத்தை மழுக்கிக் கொண்டார்கள்.

இரண்டாண்டுகளுக்கு முன்னே 'இந்தியா டுடே' இலக்கிய மலரின் தாள்களைக் கிழித்து மலம் துடைத்தவர்கள் இவர்கள். இந்த ஆண்டு மலரில் வெட்கப்படாமல், ஒரு விளக்கமும் தராமல் விழுந்துவிட்டார்கள். இப்போது இவர்கள் எழுதிய பக்கங்களைக் கிழித்து, மலம் துடைத்து, இவர்களுக்கு யாரும் அனுப்பியிருக்க மாட்டார்கள். "நாங்கள் தலித்துகளைவிட எப்போதும் கண்ணியவான்களாக்கும்," என்று மற்றவர்கள் வெகு அலட்சியமாய் மார் தட்டிக்கொள்ள அனுமதித்துவிட்டார்கள். பிறர் துப்புவதும் தனக்குத்தானே துப்பிக்கொள்வதும் ஒருதரப்பட்ட அவமரியாதைகளா என்ன?

'முன்னர் செய்த கலகமெல்லாம் இதைப் பெறத்தானா?' என்று கேட்கிறவனுக்கு இவர்கள் என்ன பதில் சொல்வார்கள்?

பேட்டை ரவுடி தன் முக்கியத்துவத்தை உணர்த்த, வழியில் போகிற ஒருவனை இழுத்து வைத்து அறைந்தான். "ஜாக்கிரதை. என்னைப் பாத்தா உன் மூஞ்சி கோணிக்குமா? மரியாத கெட்ட ராஸ்கல்." அடிபட்டவன் விக்கித்துப்போய் அனிச்சையாக இருகை கூப்பி வணங்கினான். அன்று முதல் வஸ்தாதுக்கு பேட்டை முழுக்க ராஜமரியாதைதான். அவனைப் போகவிட்டு அவன் முதுகைப் பார்த்து, "தொடப்பக் கட்டை. கொள்ளைல போவன்," என்று அர்ச்சனை நடக்கிறதுதான். அவனுக்கும் அது தெரியும். அதனாலென்ன. கும்பிடு கும்பிடுதானே. போதும் அவனுக்கு.

சென்ற ஆண்டில் சுந்தர ராமசாமி தமிழ்ப் படைப்புலகில் 'அராஜகம்' நடக்கிறது என்று குமுறினார். எனக்கு ஒரே ஆச்சரியம். 'இப்பொழுதான் புதுமலர்ச்சியே தோன்றியுள்ளது. இவர் அராஜகம் என்கிறாரே' என்று திகைத்து, 'சுந்தரராமசாமியின் சொந்த முகம்' என்றொரு கண்டனக் கட்டுரையை எழுதினேன். ஓராண்டுக்குப் பிறகு 'காலச்சுவடு' இதழை திரும்பக் கொண்டு வரும் அவர் மகன் கண்ணன், இதழின் முன்னுரையில் தலித் பண்பாடு பேசுவோரை 'வன்முறையாளர்கள்' என்று சுட்டுகிறார்.[1] அப்பன் பூடகமாய்ச் சொல்லி வைத்ததை பிள்ளை தெளிவாய்ப் புட்டுரைத்ததும்தான் நமக்கும் 'எது பற்றி' என விளங்கியது. 'மகன்

---

[1] "...மாறுபட்ட நிலைப்பாடுகளில் இயங்குபவர்களைத் துடைத்தெறிய விரும்பும் வன்முறையாளர்கள் 'தலித் பண்பாடு' கொடியின் கீழ் பதுங்கி வருகின்றனர். ஒடுக்கப்பட்டவர்களுக்கான கலாச்சாரப் பண்பாட்டு அம்சங்கள் என்று இடைத்தரகர்களால் நம் முன் வைக்கப்படுபவை விலை உயர்ந்த ஐரோப்பிய பதிப்புகளிலிருந்து சுருட்டி எடுக்கப்பட்டவை.

—காலச்சுவடு, ஜனவரி, 1995

படிப்பகம்

www.padippakam.com



தந்தைக்காற்றும் உதவி' என்பது இதுதான். இவர்கள் சொல்வது நியாயம்தான் என்று மெய்ப்பித்திருக்கிறார்களா 'நிறப்பிரிகை' யாளர்கள்? இல்லை என்றால் அவர்கள் கலகக் குரலை எந்தப் பாழில் கொண்டு போய்ச் சொருகினார்கள்?

—'தலித்' இலக்கியம் படைக்கிறவன் வெறும் இலக்கியவாதி மட்டுமல்ல; ஓர் இயக்கவாதியும் கூட. கருத்தியல் சமரசங்களில் தன்னைத் தொலைத்துவிடாத இயக்கவாதி. தான் தனியன் என்பதைத் தவிர்த்து, தன் தனித்துவத்திலிருந்து வெடித்துக் கிளம்புகிற போராளி. நாய்கள் பேய்கள் எல்லாம் காலடியில் போட்டு மிதித்துத் துவைத்த 'தலித் இனக்குழுவை' மனித முத்திரையோடு மீட்டெடுக்க சங்கல்பம் பூண்ட கலகவாதி. அவன் கலகக் குரல், மறுக்கப்பட்ட நியாயங்களை மீட்டெடுக்க எழுப்பும் நேர்மையின் அறைகூவல்.—

நிறப்பிரிகையை நான் இப்படித்தான் நினைத்தேன்; மதித்தேன். 1993 இல் எல்லாரையும் திரட்டி, 'இந்தியா டுடே' இலக்கிய மலரைத் தாள் தாளாய்க் கிழித்து மலம் துடைக்கும்படி அவர்கள் முழக்கமிட்டபோது, பலர் முகஞ்சுளிக்க நேர்ந்தாலும், அவர்களின் அறச் சீற்றம் என்னை ஆட்கொண்டது. அப்படிப்பட்டவர்கள் இந்த ஆண்டு மலரில் அந்த மலத்தாள்களில் முத்தம் பதித்திருக்கிறார்களே, எப்படி?

ஓவியர் வீரசந்தானம் சொன்னார்: 'வாசந்தியே இவர்களைத் தேடி வந்து, ஆறுமணி நேரம் பேசி, சமாதானம் செய்து, எழுத வைத்தாராம். மார்க்ஸ் அடுத்த மலரில் எழுதுவதாகவும் மற்றவர்கள் இந்த மலரில் எழுதுவது என்றும் ஏற்பாடாம்.'

இது என்ன வாசந்தியும் இவர்களும் அறையில் அமர்ந்து பேசி முடித்துக் கொள்கிற விஷயமாகவா விட்டு வைத்தார்கள்? இவர்கள் பேச்சைக் கேட்டு, முக்கி முக்கி மலம் கழித்தவர்கள் என்ன ஆவார்கள்? அவர்களுக்குச் சொல்ல வேண்டாமா? வாசந்தியும் நிறப்பிரிகையும் நியாயமான புரிதலோடு உடன்பாடு கண்டிருந்தால் அதை நிறப்பிரிகை மூலமோ, இந்தியா டுடே மூலமோ அறிவித்திருக்க வேண்டாமா?

வாசந்தியும் நிறப்பிரிகையும் நண்பர்களாய் இருக்கட்டும். மனித நேசத்துக்காக என்ன விலையும் கொடுக்கலாம்; என்ன சமரசமும் செய்துகொள்ளலாம். ஆனால், கருத்தியல் சமரசம் என்பது அடிமைச் சந்தையில் நடக்கக்கூடிய சில்லறை வியாபாரம். அதனை, போர்க் குணம் காக்க வேண்டிய நிறப்பிரிகை எப்படிச் செய்துகொண்டது? சந்தை வாணிகத்தின் சாதனையல்லவா இது?

வாசந்தி தன் தமிழின-தலித்தியக் கருத்தியலை நேர்படுத்திக் கொண்டார் என்பதற்கு மலரில் ஒரு குறிப்பும் இல்லை. 'இந்தியா டுடே' இதழாசிரியர் அருண்பூரியின் பெயரில் வாசந்தி வைக்கும் காரணம்: "தலித் இலக்கியம் தனது கலகக் குரலால் இன்று தமி

படிப்பகம்

www.padippakam.com



முகத்தில் பரவலான கவனத்தைப் பெறத் தொடங்கியிருக்கிறது. இது தமிழ் இலக்கியத்துக்கு ஒரு முக்கியமான பரிமாணத்தை ஏற்படுத்தி இருப்பதாகத் தோன்றுகிறது. அதன் முக்கியத்துவம் உணர்ந்து இந்த மலரில் பிரத்யேகப் பகுதியாகத் தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்களின் படைப்புகளை வழங்குகிறோம்.''

தோன்றுகிற போதே அதை வியாபாரம் பண்ணிவிடும் அவசரம் டில்லிக்காரர்களுக்கு. இரண்டாண்டுகளுக்கு முன் நிறப்பிரிகை கலக்கிய கலக்கில் அவர்கள் அரண்டுபோய் வாசந்தியை விரட்ட, வாசந்தி, 'இது என்ன பிரமாதம், நிறப்பிரிகை என் இடுப்புச் சாவியைப் போல' என்னும் தீர்மானத்தோடு இவர்களை அணுக, அதற்கென்றே காத்திருந்தவர்கள் போல இவர்கள் விழ, தலித் இலக்கியம் தகத்தகாயமாய் சந்தைக்கு வந்துவிட்டது. வாசந்தி தன் மகத்தான சாதனைக்காக சம்பள உயர்வு கேட்கலாம். மற்றபடி கருத்தியல் மாற்றம் ஏதும் அவருக்கில்லை.

மலரின் தலைப்பாக 'வார்ப்பும் எதிர்ப்பும்' என்று வகைப்படுத்தி இருப்பதே வாசந்தியை யார் என்று காட்டுகிறது. 'வார்ப்பும் புதிய வார்ப்பும்' என்று கூடச் சொல்லியிருக்கலாம். ஒடுக்கப்பட்டோர் என்னும் பெரும் பிரிவில் இலக்கியம் மலரத் தொடங்கிவிட்டது. இதுதான் வெகு ஜன இலக்கியமாக, தமிழின் இலக்கியமாக நிலைபடப் போகிறது. இன்று கலகக் குரலாய் ஒலிப்பது தமிழ் இலக்கியத்தின் சரியான வார்ப்பை வளர்த்தெடுக்கத்தான். ஆனால் வாசந்தி அந்த ஒப்பமாட்டார். அவர் வைதிக வார்ப்பின் வாரிசு. அந்த வார்ப்பின் கட்டுமானம் மிகப் பரந்தது. மிகத் தொன்மை பேசுவது. இதுவரை நேர்ந்துள்ள எல்லாப் புறத்தாக்குதல்களும் அந்தக் கட்டுமானத்தை இறுக்கத்தான் பயன்பட்டன. காரணம், இக்கட்டுமானத்தின் நங்கூரம் சுய மேன்மைக்கான சாகசத்தில் இறக்கப்பட்டது. ஊதி அணைக்கும் திரி நுனிச் சுடரல்ல அது. காற்றில் பற்றிப் பரவும் ஊழித்தீயின் நாக்கில் வளர்த்த சாகசம். அதன் முன்னே எதிர்ப்புகள் துச்சம். திராவிட- தலித்திய எதிர்ப்பிலக்கியங்கள் தாமாகட்டுமே. இந்த எதிர்ப்பலையை முற்றும் துடைக்கிற துணியினாலேயே பிழிந்து உலர்த்திவிடுகிற சாகசம்தான் இந்த மலர். 96 சதவீதம் திராவிடர்கள் வாழும் இந்த மண்ணில் 'திராவிட இலக்கியம்', 'தலித் இலக்கியம்' என வகைப்படுத்தி, அதை 'எதிர்ப்பிலக்கியம்' என்று ஓரங்கட்டி, விரல் நுனியில் அழுக்குப்படாதவன் எழுதியதுதான் வார்ப்பிலக்கியம் என்று மகுடம் சூட்ட எத்தனை கொழுப்பு வேண்டும். அல்லாமற் போனால் பாண்டியில் நடந்த தலித் கலை விழாவில் தனிக் கடை போட்டு மலரை விற்க முடிந்ததும், தலித்துகள் மகிழ்ந்து போனதும் வேறென்னவாம். கருத்தியல் ரீதியாகவும் வாசந்தியின் மகத்தான சாதனை இது.

இந்த மலரில் 'சேச்சா' என்றொரு கதை. சுஜாதா எழுதியது. சேச்சா ஒரு ஐயங்கார் பையன்; ஏழைப் பையனாம். அதை வலியுறுத்திச் சொல்கிறாராம், "சேச்சா ஃபார்வர்டு கம்யூனிடியாக இருந்

படிப்பகம்

www.padippakam.com



தாலும், இஞ்ஜினியரிங், மெடிக்கல் இரண்டு சீட்டும் கொடுத்தே ஆகவேண்டி இருந்தது,'' என்று. இட ஒதுக்கீட்டை எள்ளி நகை யாடும் தன் கருத்தில் சுஜாதா எவ்வளவு உறுதியாயிருக்கிறார் என்பதற்கு இது சான்று.

ஆனால் நிறப்பிரிகையாளர்கள் மட்டும் தங்கள் கருத்தியல் உறுதிப்பாட்டைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டனர். வாசந்தி இவர் களைத் தேடி வந்தாராம். தேடி வரும் அளவுக்கு சிங்கங்களாகத் தானே இருந்தார்கள்? அப்படியிருக்க மலரில் எழுதியதின் மூலம் 'வாசந்தி ஆத்து'க் கட்டுத்தறியின் வளர்ப்புப் பிராணிகளாய்த் தங் களைச் சுருக்கிக்கொண்டு விட்டார்கள்' என்று பிறர் நகையாட வாய்ப்பளித்தது தவிர, தலித்தியத் தளத்தில் வேறென்ன சாதித்து விட்டார்கள்? 'இந்தியா டுடே' ஓர் இலக்கியப் பத்திரிகை அல்ல. தமிழ் 'அடையாளங்களை அது கண்டுகொண்டதில்லை. கண்டு கொள்ள நேர்ந்த சமயங்களில் கொச்சைப்படுத்தாமல் விட்டதில்லை. இதெல்லாம் நிறப்பிரிகைகாரர்களுக்குத் தெரியாததல்ல.

இவர்களுடைய எழுத்துகள் வழவழப்பான நல்ல வெள்ளைத் தாளில் அதிநவீன பலவண்ண ஓவியங்களோடு கண்ணில் ஒற்றிக் கொள்கிறாற் போல் அச்சாகியுள்ளன. இவர்கள் ஒருபோதும் நினைத்துப் பார்த்திராத அதிகபட்ச அலங்காரங்கள். (அலங்கா ரங்கள் யாவும் கௌரவங்கள் ஆகிவிடுவதில்லை.) அவர்களுக்குப் பெருமையாகத்தான் இருக்கும். எதிர்பார்த்தே இராத விளம்பரம், புகழ், கனமான காசோலை யாவும் இளைஞர்களை இனி இது போன்ற வெள்ளைத் தாள் பக்கமே வெட்டி வெட்டி இழுக்கும். இனி சிறு பத்திரிகைகளில் எல்லாம் எழுதுவது அவர்கள் தகுதிக் குக் குறைவாய்த் தோன்றும்.

இந்த விதமான வேட்கைக்கான தடயங்களை இங்கே, இந்தக் கருத்தரங்கிலேயே கண்டேன்.[2] இதுதான் உடனடியாக விளைந் துள்ள பலன் என்று படுகிறது.

---

2 4–6–1995 இல் கடலூரில் இரா. நடராசனுடைய 'குரல் இலக்கிய அமைப்பு' 'இந்தியா டுடே' மலரின் விமர்சனக் கூட்டம் நடத்தியது. மார்க்ஸ் கலந்துகொண்டார். நானும்கூட. அதற்கு 'இந்தியா டுடே' பிரதிநிதி ஒருவர் வந்திருந்தார். அவரிடம் 'கோவேறு கழுதைகள்'இன் இமையம், "பொட்டு கட்டும் வழக்கம் இசை வேளாளர் மத்தியில் மட் டுமில்லை. தலித்துகளிடமும் உண்டு. என் ஊரே சாட்சி. வாசந்தி அதுபற்றி எழுதலாம். அல்லது நானே எழுதி அனுப்புகிறேன். போடட் டும்,'' என்று சொல்லிக்கொண்டிருந்தார். விழி.பா. இதயவேந்தன் தன் புதிய கதையை, "நேரடியாக வாசந்திக்கே அனுப்பட்டுமா? அல்லது உங்களிடம் தந்தால் தந்து விடுகிறீர்களா?'' என்று கேட்டுக்கொண் டிருந்தார். இதை விடப் பிரமாதம் இரா. நடராசன் எல்லாரையும் தூக்கி யடித்துவிட்டதுதான். விவரமான தலித்தியவாதி. மலருக்கு இவரிடம் கவிதை கேட்டு வாசந்தி அனுப்பிய கடிதம் இன்னொருவரிடம் சிக்க

படிப்பகம்

www.padippakam.com



நிறப்பிரிகையாளர்களும் ஏனைய தலித்தியவாதிகளும் அம்பேத்கரிடமிருந்து உத்வேகம் பெற்றவர்கள். தெரிந்தோ, தெரியாமலோ அம்பேத்கரை 'இந்திய அரசியல் சட்டச் சிற்பி' என்றழைத்து தலித் மக்கள் பெருமிதம் கொள்கின்றனர். உண்மையில் இது அந்த மேதைக்குப் பெருமை சேர்க்கிற விஷயமே அல்ல. பிறர் திணித்த கருத்துகளுக்கெல்லாம் இவர் சாட்சியாகத் தம்மை சமரசப்படுத்திக் கொள்ள வேண்டிய இக்கட்டில்தான் அவர் அரசியல் வரைவு குழுவின் தலைவராக இருந்தார்.[3] இன்னொன்று: தலித் மக்களுக்கு மதம் இல்லை என்று அடித்துச் சொன்னவர் அம்பேத்கர். அப்படி மதமற்றவர்களைக் கடைசியில் கொண்டுபோய் புத்த மதத்தில் சேர்த்து (புத்தம் என்னதான் உன்னதமாயினும்) மதத்தளை பூட்டிவிட்டார். இவ்விரண்டு காரியங்களிலும் அம்பேத்கர் செய்து கொண்டது கருத்தியல் சமரசம்தான். அவரின் போராட்ட வாழ்க்கையில் இவையிரண்டும் தவிர்த்திருக்க வேண்டிய சருக்கல்கள். ஒருவேளை அவர் செயல்களுக்கு ஆழமான வேறு காரணங்கள் இருந்திருக்கலாம். போர்க்களத்தில் பகைத்திறம் முறியடிக்க தன் திறனைக் காட்டிலும் தந்திரமே போதுமானதாயிருக்கலாம். அம்பேத்கர் அப்படியானதோர் உத்தியைக் கையாண்டிருக்கலாம்-அதுமாதிரியே நம் நிறப்பிரிகையாளர்களும் எதிராளியை வீழ்த்தும் உத்தியாக 'இந்தியா டுடே' இலக்கிய மலரில் இடம் பிடித்தார்களா?

---

அவர் (மசிழ்ச்சிக்கூத்தன்) எழுதிப் பணம் பண்ணிவிட, "நடராசனும் தான் கவிதை எழுதினார்," என்று வாசந்தியே கதை கட்டிவிட்டதாகவும், இவர் வெகுண்டவராய், "நான் அப்படிப்பட்ட ஈனத்தனத்தைச் செய்யவில்லை- செய்ய மாட்டேன்," என்று கண்டனக் கடிதம் எழுதியதாகவும்...... எஸ்.டி டி. போட்டார் எனக்கு. "நீங்கள் எழுதினால்கூட தப்பில்லை, மலம் துடைத்தவர்களே எழுதிவிட்ட பிறகு," என்று நான் ஆறுதல் கூறினேன். "அப்படியா?" என்றார். ஆச்சு... 'ரத்தத்தின் வண்ணத்தில்' அவர் எழுத்து 'இந்தியா டுடே' ஜூலை இதழில் வந்துவிட்டதே! ஈனத்தனம்? 'நிறப்பிரிகை' தெளித்த கோமியத்தில் போயே போச்சு. இரா. நடராசன் விமர்சனக் கூட்டம் நடத்தியதும், வாசந்தி கண்டுகொண்டதும், இவர் கதை எழுதியதும்... கோட்பாட்டு யுத்தங்கள் கொடுக்கல் வாங்கல் பேரத்தில் மையம் கொண்டாயிற்று. நாளேடுகளைப் புரட்டினால் ஒரே குடமுழுக்குச் செய்திகள்தாம். சிற்றிதழ் சீற்றங்களுக்கும் குடமுழுக்கு செய்வித்து சாந்தி பண்ணியாகிறது.

[3] "டாக்டர் அம்பேத்கர் அரசியல் திட்டம் வரையும் கமிட்டியின் அக்ராசனராக இருந்தார். ஆனால் மிகமிக முக்கியமான வேலைகளையெல்லாம் பி.என். ராவ் செய்தார்.... பெரும்பாலும் இந்திய அரசியல் திட்டம் அவருடைய வேலைப்பாடாகும். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும் என். கோபாலசாமி அய்யங்காரும் இப்பணியில் சிறந்த சேவை செய்தார்கள் —க. சந்தானம்—வாழ்க்கை வெள்ளம், கணையாழி, ஜூன்-95

படிப்பகம்

www.padippakam.com



(மார்க்ஸ் அவர்கள் இதற்கு பதில் சொல்லியாக வேண்டும் என கடலூர் கூட்டத்தில் நான் கேட்டேன். அவரும் பதில் சொன்னார். பதிலின் முக்கியப் பகுதிகள் தரப்படுகின்றன.)

அ. மார்க்ஸ்: கவிதாசரண் மிகப் பெரிய தாக்குதலைத் தொடுத்து எங்களை நார்நாராய்க் கிழித்திருக்கிறார். நீங்கள் எல்லாரும் நான் என்ன பதில் சொல்லப் போகிறேன் என்று கேட்பதற்காகவே காத்திருக்கிறீர்கள். தலித்துகளின் போராட்டத்தின் ஓர் அங்கமாகப் பார்ப்பனியத்தைத் தோலுரித்துக் காட்டுவதில் கவிதாசரண் அவர்கள் நமக்குப் பெரிய துணையாய் இருப்பவர். அவர் நம்முடைய ஆதரவாளர் என்ற வகையில் அவருடைய கேள்விகள் முக்கியமானவை. இந்த விஷயத்தில் கவிதாசரண் மட்டுமல்ல, நம்மை அறிந்தவர்கள், ஆதரவாளர்கள், நம்மோடிருக்கும் நண்பர்கள் என்று பலரும் நம்மைக் கேள்விக் குள்ளாக்குகிறார்கள். நம்முடைய கருத்துகளை, அறிக்கைகளை தினமணிசுடர், சுபமங்களா போன்ற இதழ்களில் வெளியிடும்போது யாரும் குறை சொன்னதில்லை. 'இந்தியா டுடே'யில் எழுதியது பற்றித்தான் இவ்வளவு பெரிய எதிர்ப்பு. குறிப்பாக கோமல் சுவாமிநாதன் நாம் அணுகிய போதெல்லாம் வெளியிட்டு உதவுகிறார். ஒரே ஒரு தடவை மட்டும் வெளியிட மறுத்தார். '93, இந்தியா டுடே' மலரைக் கிழித்து மலம் துடைப்பது என்ற தீர்மானத்தை மட்டும் வெளியிட மறுத்தார். இப்போது 'இந்தியா டுடே'யில் நாம் எழுதியதைக் கடுமையாக விமர்சித்து கோமல் கட்டுரை வெளியிட இருந்ததாகவும், அதை அறிந்த வாசந்தி அவரைத் தொடர்பு கொண்டு வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதால் அது தவிர்க்கப்பட்டது என்றும் நமக்குத் தகவல் கிடைத்தது.

நாம் எந்த இதழ்களில் எழுதுவது, எதையெதைத் தவிர்ப்பது என்று இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. இது பலரும் கலந்து ஆலோசித்து முடிவெடுக்க வேண்டிய விஷயம். இது பற்றி முடிவெடுக்கும் வரை நம் கருத்துகளை, கிடைக்கும் பத்திரிகைகளில் வெளியிடுவதைத் தவிர வேறு வழியில்லை. 'இந்தியா டுடே' இலக்கிய மலரைக் கிழித்து மலம் துடைத்து அனுப்புவது என்ற முடிவு கருத்தரங்கில் பேச்சின் ஊடே எடுக்கப்பட்டது. முன் கூட்டித் தீர்மானிக்கப்பட்டதல்ல. அந்த இதழ் தாங்கி வந்த கருத்துகள் நண்பர்களை மிகவும் கொதிப்படைய வைத்தன. உதாரணமாக, தேவதாசிகள் பற்றி மிகவும் கண்டனத்துக்குரிய கருத்துகளை வாசந்தியே எழுதியிருந்தார். கவிதாசரண் அதை கவனத்தில் கொள்ளவில்லை என்று நினைக்கிறேன்.

கவிதாசரண்: கடுமையாகக் கவனத்தில் கொண்டது. 'அமைப்பியல் அத்துமீறல்' என்னும் தலைப்பில் 'கவிதாசரண்' தன் கண்டனத்தை வெளியிட்டது.

அ. மார்க்ஸ்: வெளியிட்டிருக்கலாம். ஆனால் அதற்கு மேல் நீங்கள் ஒன்றும் செய்யவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



கவிதாசரண்: உங்களைப் போல் செய்ய முடியாதல்லவா?

அ. மார்க்ஸ்: அதுபற்றிய கண்டனக் கருத்தரங்குக்கு நீங்கள் வரவில்லை. வந்திருந்தால் அங்கு நிலவிய சூழலின் தீவிரத்தைப் புரிந்துகொண்டிருப்பீர்கள். அந்த மலரின் ஆட்சேபகரமான பகுதிகள் எழுப்பிய கொந்தளிப்பில் மலந்துடைப்பது என்ற ஆலோசனையை ஒரு நண்பர் சொன்னதும் அது உடனடியாக ஏற்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டது.

சுந்தர ராமசாமி பற்றிக் 'கவிதாசரண் சொன்னார். இனி அவர் தன் மகனை முன்னிருத்தித்தான் செயல்பட வேண்டியிருக்கும். ஆனானப்பட்ட புதுமைப் பித்தனையே கரிகாலன் போன்ற இளைஞர்கள் கேள்விக்குள்ளாக்குகிறார்கள். இதுபோல் புதியவர்களுக்கெல்லாம் பதில் சொல்வது அவர் பூட்டிக் கொண்டிருக்கிற இலக்கிய மேதாவித்தனத்திற்கு இழுக்காகிவிடும். ஆகவே பின்னால் இருந்துகொண்டு தன் சிஷ்யர்களை எழுதவிட்டு, தன்னுடைய இலக்கிய மேலாண்மை முகத்தைக் காப்பாற்றிக் கொள்வார்.

(இந்த மலரில் எழுத நேர்ந்த சூழல் பற்றி மார்க்ஸ் ஒன்றும் சொல்லாமலே முடித்துக்கொண்டார்.)

★ ★ ★

தலித்துகளை இந்த தலித்தியவாதிகள் காட்சிப் படுத்துகிற விதமும், தலித் அல்லாதோர் மேல் தலித்திய பார்வையாக இவர்கள் வைக்கும் விமர்சனங்களும் என்னுள் நிறைய கேள்விகளை எழுப்பின. இதுவரை என் கேள்விகள் இவர்களை சந்தேகிப்பதாக தோற்றம் தந்துவிடுமோ என்று அஞ்சி அவற்றைப் பின் தள்ளினேன். இப்போது — இவர்கள் 'இந்தியா டுடே'யில் பங்கேற்ற பின்னர் —என் கேள்விகளின் நியாயம் இவர்கள் உருவாக்கும் தலித்திய பரிமாணங்களைவிடவும் நேர்மையாக இருக்கும் என்றே படுகிறது.

தலித்தியவாதிகள் 'தலித்' மக்களை 'உள்ளபடியே' வைத்துக் கொண்டு, குறியற்ற அல்லது பிறரால் குறி படுத்திய 'கலகப்பரிமாணங்களைக்' கொண்டே, இதுதான் 'தலித் விடுதலை' என்று காட்ட முயல்கிறார்களோ என்று எனக்கோர் ஐயம்.

தலித்துகள் இன்றைய சிறுமைகளிலிருந்து மீண்டு, எந்த நிலையை எய்த வேண்டுமென்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்? தலித்துகளின் கலாச்சாரம் - பண்பாடு என்று இவர்கள் முன் வைப்பதெல்லாம் உண்மையில் தலித்துகளுடையவைதாமா?

என் தோளை உரசிக் கொண்டு, என் நெஞ்சை சுட்டுக் கொண்டு, என் ஒவ்வொரு உணர்வுக்கும் செயலுக்கும் சாட்சி சொல்லிக் கொண்டு, என் மூச்சுக் காற்றில் தன் மூச்சுக் காற்றைப் பரிமாறிக் கொண்டு என்னோடு வாழும் தலித் மக்களை அறிய வெள்ளைக்காரர்கள் எவ்வளவு தூரம் உதவியாய் இருப்பார்கள்

படிப்பகம்

www.padippakam.com



ஒவ்வொரு கணமும் நம்மை உரசிச் சுடுகிற ஒரு தலையாய சமூகச் சிக்கலை நம் சொந்த முடிவுகளைக் கொண்டு தீர்க்காவிடில் 'காலச்சுவடு' குறிக்கும் 'இடைத்தரகர்கள்' என்னும் சொல் தலித்தியவாதிகளைக் கொச்சைப்படுத்திவிடாதா? சிரைக்க விரும்பாதவன் அடப்பை சுமப்பது போலத்தான் இந்த விஷயத்தில் 'காலச்சுவடு' வின் அக்கறை என்பது வேறு விஷயம்.

'தலித்' என்பவன் மாடு தின்கிறவன்; மலம் அள்ளுகிறவன்; பறையடிக்கிறவன்; படிக்காதவன்; சாராயம் குடிக்கிறவன்; கூசப் பேசுகிறவன்; கானாப் பாட்டு பாடுகிறவன்; அழுக்கானவன்; கற்பு உயிரினும் மேலானது என்று கதைக்காதவன்.

சொல்கிறார்கள் இப்படியெல்லாம். இருக்கட்டும்.

ஆனால், இவையாவும் அவன் சுயேச்சையாகக் கட்டமைத்துக் கொண்ட வாழ்முறைகளா என்ன? காலங்காலமாய் அவன் மேல் சுமத்தப்பட்ட அடிமைத்தனம், அறியாமை, மிடிமை, மனித மறுப்பு ஆகியவற்றால், வலிந்து பழகிக் கொண்ட வாழ்முறைகள். இதன் மேல் கட்டமைக்கப்பட்ட பண்பாடு, கலாச்சாரம் என்பதெல்லாம் மூலத்தில் அவனுடையதாக இருப்பது எப்படி? தலித்துகளின் மீட்சி என்பது இதன் புறக்காரணிகளிலிருந்து அவர்களை மீட்பதுதான். அதைவிட்டு தலித்துகளின் இந்த அவலங்களையே உன்னதப்படுத்தி, அதற்குப் புறம்பானதையெல்லாம் அசிங்கப்படுத்திவிட்டால் அவர்கள் உயர்ந்து விடுவார்களா? தலித்தியவாதிகளின் விமர்சனங்கள் சமீப காலத்தில் இந்தப் போக்கில்தான் கிளை பரப்பிக் கொண்டிருக்கின்றன. தலித்துகள் பார்வையில் தூய்மையாய் இருப்பது, புறச்சூழல் ஓம்புவது, புலால் மறுப்பது, குடியைத் தவிர்ப்பது என்பதெல்லாம் வெறுக்கத்தக்க, நகைப்பிற்கிடமான, அருவருப்பான கழிசடைப் பழக்கங்கள் என்று கட்டமைப்பது- தலித்துகளை முற்ற முழுக்கத் தனிமைப்படுத்தி, அவர்களைச் சுற்றி தலித் அல்லாதோரைப் பகை வேலியாக நெருக்கிக் கட்டுவதைத் தவிர வேறென்னவாம்? முக்குலத்தோர், நாய்க்கமார்கள், சாணார்கள் போன்றவர்கள் —வாழ்முறையிலும் வறுமையிலும் தலித்துகளோடு வர்க்கப்படுகிறவர்கள்தான். ஆனால், மேல்சாதிக் கவசம் அவர்களுக்கு அணிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கவசத்தின் பின்னால் அரசு, அதிகாரம், காவல்துறை, நீதித்துறை, பதவி, பணபலம் யாவும் படைபலங்களாக அணிவகுத்து நிற்கின்றன. தலித்துகளின் தனிமைப்படல் இவர்களிடம் அடிபட்டுச் சாவதற்காகவா? கோவை ஞானி கேட்கிறார்: 'வர்க்கத்தைவிடவா சாதி முக்கியம்?' என்று. எனக்குத் தெரிந்த நாள் முதல் தலித்துகள் தங்கள் வர்க்கத்தைச் சேர்ந்த மேல் சாதிக்காரர்களால்தான் தொடர்ந்து கொல்லப்படுகின்றனர். வர்க்கப் பார்வையை முதன்மைப் படுத்துகிறவர்கள் சாதியைத் தகர்ப்பதற்குப் பதிலாக, தலித் மக்கள் குழுவையும் தங்கள் ஈனத்தமிழர் பட்டியலில் சேர்த்து அழித்துவிட பரிந்துரைப்பார்களோ?

படிப்பகம்

www.padippakam.com



தலித்துகளின் மேல் சுமத்தப்பட்ட சிறுமைகளைக் களைவதற்குப் பதிலாக, அச்சிறுமைகளால் வடிவம் பெற்ற வாழ்முறைகளை உன்னதப் படுத்த முயல்கிறவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய அவலத்திலிருந்து மீள ஒரு அற்பமான வாய்ப்பு கிடைத்தாலும் அதைப் பற்றிக்கொண்டு மேலேறிவிடத்தான் ஒவ்வொரு தலித்தும் - ஒடுக்கப்பட்டவனும் காத்திருக்கிறான். மீட்சிக்கான கனல் அவன் உயிர்க் குருத்தில் எப்போதும் கனன்று கொண்டே இருக்கிறது. தலித் விடுதலை என்பது இந்த தலித்தியவாதிகள்தாம் கண்டுபிடித்த சொற்கட்டல்ல. அது அவன் நம்பிக்கை. காலத்தால் பறிக்கப்பட்ட, தன் கவனப் பிசகால் கை நழுவவிட்ட தன் பழைய மாட்சியை மீட்டெடுக்கும் ஓய்வற்ற உள் இயக்கம்.

ஒடுக்கப்பட்ட ஒவ்வொருவனும் தனக்கொரு மகன் பிறக்கும் போது, அவன் நாலெழுத்து கற்கத் தொடங்கும்போது ''என் அடிமைத்தனம் என்னோடு முடியட்டும். என் பிள்ளை இதிலிருந்து விடுபடட்டும்'' என்றே ஏங்குகிறான். (ஒரு பெண் பிறந்தால் எல்லோரும் போல இவனும் மண்ணாய்த்தான் இருக்கிறான். பெண்ணை வெறும் பொருளாய்ப் பார்ப்பதில் இவனும் ஒரு ஆண்தான். உழைத்தால்தான் கும்பி நனையும் என்பதாலும், உழைத்துக் கொட்டப் பால் மாறாததாலும் இவன் வீட்டுப் பெண்கள் கொஞ்சம் கூடுதலாக சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கப் பழகியவர்கள். தலித் விடுதலையில் முதல் கட்டப் போரே, இவன் வீட்டுப் பெண்களின்மீது இவனுக்குள்ள மேலாண்மையைப் பிற சாதியான் கேள்விக்குள்ளாக்குவதை இனியும் சகிக்க முடியாது என்னும் சீற்றம்தான்.)

ஒரு மனிதனின் ஈகையும், பெருந்தன்மையும், அருளும் வரம்பு மீறிய புகழ் மோகம் கொள்ளும் போது, அவன் எளிதாக வீழ்த்தப் படுவான். தலித் என்பவன் மேல் நோக்கிய மனித குல நகர்வில், அவன் மேலேறி நின்ற பீடத்திலிருந்து அவ்வாறு கீழே தள்ளப்பட்டு அழுத்தப்பட்டவன்தான். ஆகவே அவன் விடுதலை என்பது ஓர் உச்ச இலக்கை நோக்கிய மேல் நகர்வாகத்தான் இருக்க முடியும். இப்போதைக்கு (எப்போதைக்கும்தான்) அந்த உச்ச இலக்கில் உட்கார்ந்து கொண்டிருப்பவன் பிராமணன்தான். ஆகவே பிராமணனே அவன் எட்டவேண்டிய இலக்காகிறான். வாழ்க்கைதளத்தில் என்ன உயரத்தை எட்டினாலும், தான் ஒரு தலித் என்று அடையாளப்படும் போது, பொக்கென்று சாக்கடைப் புழுவாகப் பார்க்கப்படுவதை அனுபவிக்கும் எவனும், தன்னை ஒரு மனிதனாகவே கண்டு கொள்ளாமல் இருப்பதில் கவனமாயிருக்கும் பிராமணனை எதிர் கொள்ள வேண்டும் என்று உறுதிப்படுவது புரிந்து கொள்ளக் கூடியதுதான். தன் தாழ்வுக்கு காரணமானவனின் தோளுக்கு நிகராக நிற்க விழைவதில் உள்ளூர அவனைத் தண்டித்துவிடும் நிறைவும் அவனுக்கு வாய்க்கும். ஆகவே பிராமணன்தான் தலித்தின் உச்ச இலக்கு. பிற சாதியானுக்கு மேல்சாதிக் கவசமும், அவனுக்குத் தொழும்பனாக

படிப்பகம்

www.padippakam.com



தலித்தும் இருப்பதால், பிராமண வரம்பை எட்டும் ஆசையை விடவும் 'பிராமணன் என்னைவிடக் கொம்பா?' என்னும் ஒப்பீட்டுத் திமிரோடு ஒரு இறக்கத்திலேயே உறைந்து போகிறான். தலித்துக்கு இவை இல்லை என்பது கூடுதல் நன்மை.

இந்திய சமுதாயத்தில் மனித வாழ்க்கையின் உச்சமான வாழ்வியல் என்பது பிராமணனுடையதுதான் என்று பிராமணனும் சரி, பிறரும் சரி நம்புகிறார்கள். இந்த நம்பிக்கையின் ஆணிவேர், சமூகக் கட்டுமானத்தின் கருத்தியல் பிரம்மாவாக பிராமணன் தன்னை முன்னெடுத்துச் சென்று, இன்னமும் அதைத் தக்க வைத்துக் கொண்டிருப்பதுதானே தவிர அவனுடைய புற வாழ்க்கைக் கூறுகள் அல்ல. பிராமண புறக் கூறுகள் உழைக்கும் மக்களைப் பொறுத்தவரை 'வேலையில்லாதவன் வேலை' தானே தவிர, பிரமிக்கவோ, போற்றவோ, பின்பற்றவோ ஒன்றுமில்லை.

பிராமணன் போட்டுக் கொண்டு வந்தது பூணூல் மட்டுமே. இங்கே ஏற்றுக் கொண்டு பழகியது புலால் மறுப்பு. ஏற்கனவே இந்தப் புலால் மறுப்பை மேன்மையின் சின்னமாய் மென்று கொண்டிருந்தவன் வெள்ளாளன். அந்த வெள்ளாளனைவிடவும் ஒரு படி மேலே நிற்க பிராமணன் வைத்திருக்கும் ஆயுதம்தான் சமஸ்கிருதம். தமிழைவிட உயர்ந்தது என்று சொல்வதற்கென்றே தன் பூணூலில் கட்டி வைத்திருக்கும் மொழி. ஒரு இனத்துக்குள்ளேயே தமிழை முதன்மைப் படுத்தும் தென்கலைப் பார்ப்பானை விட, சமஸ்கிருதத்தை முதன்மைப்படுத்தும் வடகலைப் பார்ப்பானே உயர்ந்தவன் என்று நம்பும் கூட்டம் அது. சமஸ்கிருதத்தை பிராமணன் 'வழிபாட்டு மொழி'யாக உயர்த்திப் பிடித்ததும் வெள்ளாளனும் சும்மா இருக்கவில்லை. பிராமணனுக்கு எதிராக 'உழுபடை' மொழியான தமிழை வழிபடு மொழியாக வளர்த்தெடுத்தான். இது தமிழின் பிற துறை வளர்ச்சியை முடக்கிப் போடவே பயன்பட்டது. இந்த 'சமய மொழி'யைத்தான் தமிழவன் 'வெள்ளாளத் தமிழ்' என்று வகைப்படுத்தினார் எனில், அதை நியாயமான மதிப்பீடாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும்தான். 'தலித் தமிழ்' இன்னும் மண் சார்ந்ததாகவும் மனித நாவில் உயிர் வளர்த்ததாகவும் வாழ்கிறது. சமஸ்கிருதத்தை விலக்கிவிட்டால், பிராமணனுக்கும் வெள்ளாளனுக்கும் மனோபாவத்தில் வேறுபாடே இல்லை என்னும் அளவுக்கு, பிராமண வர்ணாசிரமக் கூறுகள் யாவும் வெள்ளாளனில் சாதியக் கூறுகளாக மறு வார்ப்பு பெற்று, தலித்துகளின் அவலங்களுக்குப் புதிய பரிமாணங்களை வளர்த்தெடுத்தன. இதில் வெள்ளாளன் பெருமைப்பட ஒன்றுமில்லை. என்ன முயன்றும் ஒரு படி கீழேதான். அதை ஈடுகட்ட பிராமணனுக்கு 'உண்டி கொடுத்தவன் நான்தான்' என்று மார் தட்டிக் கொள்ளலாம். இப்படி ஆகும் என்பதற்காகத்தான் பிச்சைக்காரனாய் இருப்பதையே பிராமணன் தர்மமாக்கி விட்டான். பிறன் பிச்சையெடுத்தால் அது போன பிறவியின் தீவினை. பிராமண

படிப்பகம்

www.padippakam.com



னுக்கு பிச்சை மறுத்தால், மறுத்தவனுக்கு அடுத்த பிறவியில் நரகம் நிச்சயம்.

இப்படி உழைக்காமல் மேலாண்மை செலுத்த, பிச்சை ஏற்பதையும் பிராமணத் தர்மமாக்கி, குருபீடத்தில் தன்னைத் தக்கவைத்துக் கொள்வதொன்றே வாழ்க்கை லட்சியமாக்கி, இடைவிடாமல், தொய்வில்லாமல், கண் தூஞ்சாமல் அவன் உத்திகளை வகுத்துக்கொண்டே இருக்கிறான். அவன் சிறுபான்மையினன் என்பதால்' புனிதக் கவசம் பூட்டிய பிராமண தர்மங்களை வைத்து பூச்சாண்டி காட்டி அச்சுறுத்தவும், பிறரிடையே சிண்டு முடியவும் செய்கிறான். அவன் சுகவாசி என்பதால், சூழ்ச்சியையும் வஞ்சகத்தையும் தற்காப்புக் கவசங்களாகப் பூட்டிக்கொள்கிறான். நடைமுறைகள் தன் கைமீறிப் போய் காலை வாரும்போது, புதிய தளத்தின் முன்னோடியாகி, தன்னை எத்தகைய மாற்றத்திற்கும் தகுதிப் படுத்திக் கொள்கிறான். கொதி நீரில் நட்டாலும் கிளை பரப்பும் தாவரமாய் அவன் தன்னைப் பதப்படுத்திக் கொள்ளுகிறான். இது ஒரு மகத்தான மனித முயற்சி. அதனால்தான் அவன் வெல்லற்கரியவனாய், அவனைப் பகைக்கிறவனும் அவனைப் 'போலாக' வேட்கையுறும்படி நெடு நெடுவென்று நிற்கிறான்.

ஆகவே ஒரு தலித் அவனை இலக்காகக் கொள்வது தலித்துக்குள்ளிருக்கும் தொல்பெருமையை மீட்டெடுக்கும் மரபணுத் தூண்டுதலாகவே இருக்கக்கூடும். கொஞ்சம் நுணுகி ஆய்ந்தால் வாய்க்கும் வயிற்றுக்குமான பார்ப்பனத் தமிழுக்கும், வாய்க்கும் கைக்குமான தலித் தமிழுக்கும் ஆச்சரியப் படும்படியான ஒற்றுமைகள் தெரியவரும். ஒருவன் தமிழன் என்று தெரிந்தே சொல்லாதவன். இன்னொருவன் தமிழன் என்று தெரிந்தே கொள்ளாதவன். ஆனாலும்கூட தமிழை இந்த அளவிலாவது வளர்த்து வைத்திருப்பவர்கள் பிராமண அறிஞர்களும் தலித் சிந்தனையாளர்களும்தான் என்று சொன்னால் அது தவறில்லை.

இருவரையும் மாற்றிப் பயிரிட்டால் குறைந்த பட்ச சேதத்தோடு அவர்கள் தங்கள் புதுத்தளத்தில் பொருந்திப் போவார்கள். இல்லாமலா 'பார்ப்பானுக்கு மூத்த பறையன் கேட்பாரில்லாமல் கீழ்ச் சாதியானான்' என்ற வழக்கு மொழி தோன்றியிருக்கிறது. தெரியாமலா வையாபுரிப் பிள்ளை பார்ப்பானையும் பறையனையும் ஒன்று போல் தமிழன் இல்லை என ஒதுக்கத் துணிந்திருப்பார். அறியாமலா ஒலுக்கலையும் நாய்கள் பாப்பாத்தி துடையையும் பறைச்சி முலையையும் ஒன்றாகப் பார்த்துக் கிளர்ந்ததுகள்? மத ஆச்சாரமாகப் பாவித்து மாமிகள் தங்கள் சொந்தப் புருஷன்களாலேயே மடிசார் கட்டப்பட்டு துடை தெரிய நடக்கப் பணிக்கப்பட்டார்கள். ஆனால் பறைச்சிகளோ மேல்சாதிக்காரனைக் கண்ட

www.padippakam.com



தும் தம் மார்ச்சீலை விலக்கி நடக்கப் பணிக்கப்பட்டார்கள். சொல்லக் கொதிக்கவில்லையா நெஞ்சம்! இந்த அத்துமீறல்களுக் கெல்லாம் பதில் தேட வேண்டாமா?

சுத்தம் பார்த்தவனும் புலால் மறுத்தவனும் தலித்துகளை சிறு மைப்படுத்தியதில் முதன்மையானவர்கள் என்பது மறுப்பில்லாத உண்மை. அதற்காக அழுக்கை நேசிக்காதவன், மாடு தின்னா தவன், மலம் அள்ளாதவன், சாராயம் குடிக்காதவன் எவனும் தலித்தே அல்லன் என்கிற புதிய மதிப்பீட்டை தலித்திய மதிப்பீ டாகத் தூக்கிப் பிடிப்பது தலித்துகளைக் கரை சேர்க்கவா, அல்லது பயன்படுத்திக் கொள்ளவா? இந்த மதிப்பீட்டையே அதன் போக் கிலேயே நீட்டினால், 'கல்வி கற்கிறவன் தலித்தே அல்ல' என்று நியாயப்படுத்துவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?

'காட் ஒப்பந்தம்' அமலானால் தலித்துகளுக்கு வேலை வாய்ப்பு பெருகும். அவர்கள் சமூக அந்தஸ்து உயர்ந்துவிடும்' என்று ஒரு தலித்தியவாதி சொல்வானானால் அவன் தரகனா, அல்லது தலைவனா என்று யோசிக்கத்தான் வேண்டும். தரகனுக்கு வியா பாரம்தான் முக்கியம். தலித்தியம் அவனுக்கு விற்பனைச் சரக்கு. விளம்பரம், பணம், புகழ் என்பதுகூட வியாபாரத்தின் அம்சங் கள்தாம். தன்னையே விற்று முதலாக்கும் வியாபாரம்.

குடி கெடுக்கிறவன், கொலை செய்கிறவன், கூட்டிக் கொடுக் கிறவன், பொய் சொல்கிறவன், புறம் பேசுகிறவன், பிச்சையெடுக் கிறவன், வக்கிரம் படைத்தவன், வஞ்சகம் பண்ணுகிறவன், சோரம் போகிறவன், மாமா வேலை செய்கிறவன், குஷ்டம் பிடித்தவன், கும்பிட்டு வாழ்கிறவன், உருவிப் பிழைக்கிறவன், ஊரை ஏமாற்று கிறவன், புல்லுருவியாய் உறிஞ்சி வாழ்கிறவன், நக்கிப் பிழைக்கிற வன்— ஒவ்வொருத்தனும் தன்னை ஒரு தலித்தைவிட உயர்ந்தவ னாகவே எண்ணுகிறான்; தலித்தோடு தன்னை ஒப்பிட்டுப் பார்ப் பதை சகிக்க முடியாத இழிவாகவே கருதுகிறான்.

'தலித் விடுதலை' என்பது இந்த மனோபாவத்தை வேரறுக்கும் ஆயிரம் காலத்துப் போரல்லவா.

மனிதப் பாகுபாடுகளைக் கட்டமைக்கும் இந்த மனோபாவத் தின் வயதும் வலிமையும் கொஞ்சநஞ்சமல்ல. இதைப் போதிக்கும் சாஸ்திரங்ள், சடங்குகள், வேதங்கள், வியாக்யானங்கள் அனைத் தையும் தலைகீழாய்ப் புரட்டிப் போட்டு, இவையெல்லாவற்றையும் பயிர் செய்து பராமரிக்கும் பார்ப்பனியக் கருத்தியலை வேரடி மண் ணோடு களைந்து, சமூகக் கருத்தியலை உழைக்கும் தலித்தினக் கரங்கள் வகுக்கும்போது, சாதிகள் அழிந்திருக்கும்; 'தலித் விடு தலை' என்பது தலித் என்னும் பெயரிலிருந்தும் தான்.

படிப்பகம்

www.padippakam.com



## க. அம்சப்ரியா

### 1. மாரி

ஏழைகளுக்கு சலுகையில
லோன் தர்றதா
சொன்னாங்கன்னு
கவர்மென்ட்டுக்கு விண்ணப்பம் போட்டு
ஆறேழு மாசத்துக்கு பின்னால

காயிதம் வந்தது மாரிக்கு
ஆபிஸ் வரச் சொல்லி.

ஆடு வித்த ஐநூறு
லோன் ஆபிசருக்கு கொடுக்க
சேங்சனாச்சு மாட்டு லோனு
ஐயாயிரம் பேங்கில.

பணமெல்லாம் கவுண்டருக்கு.
மாரிக்கு மறுபடியும் ஒரு
கோர்ட்டர் பிராந்திதான்.

அப்புறமென்ன போடு
டண்டணக்கிற...
டண் டணக்கிற...
டண டண டணக்கிற...!

### 2. சந்தேகம்

காலங் காத்தால வாசக்கூட்டி
சாணித் தொளி போட
வடக்கால கவுண்டரு வூட்டுக்கு
அம்மா போக—

சாணி வழிச்சு
கட்டித்தரை கூட்ட
பெரியப்ப கவுண்டரு வூட்டுக்கு
நான் போக—

தூக்கம் விழிக்கு முன்னே
அண்ணனுக்கு ஆள் வரும்
பிரசிடெண்ட் காட்டுக்கு
தண்ணி பாய்க்க ஆள் இல்லைன்னு.

அம்மாவுக்கு செவத்தோரம்
கழுத்தி வச்ச ஈய டம்ளருல

படிப்பகம்

www.padippakam.com

ஆறிப்போன காப்பி—
கொறக் கூடைக்கு பக்கத்தில
ஒடுங்கி கிடக்கிற வட்டல்ல
ராத்திரி மிச்சமான பழையசோறு
பத்தியும் பத்தாம எனக்கு—
அண்ணனுக்கு இனி கெடச்சாத்தானுண்டு.
வய்சுக்கு வந்து மூணுமாசமாகாம
வெளியே வரக்கூடாதுன்னு
சொன்னாங்கன்னு
வீட்டோட இருக்கிற தங்கச்சியை
வைச்சகண் மாறாம பார்த்திட்டு
மொறைக்கராரே... சின்னத்துரை
என்னத்துக்கு இதுன்னு
மறக்காம கேக்கோனும்
ராத்திரிக்கு அம்மாகிட்ட...!

## சூப்பர் மார்க்கெட்

தெரியாதா உனக்கு.
முகாப்லா சந்தையி லிப்போது
எது வேண்டுமானாலும்
தள்ளுபடி விற்பனையில் வாங்கலாம்.
தவணை முறையில் வாங்கலாம்.
விதைத்ததும் மரம் முளைக்கும் மாங்கொட்டை
புதிய தயாரிப்பாய் வந்திருக்கிறது.
கடற்குதிரை சூப்,
காளான்கள் விளைந்த மனித மூளை,
ஓயாமல் குரைக்கு மொலி பெருக்கி நாய்கள்,
பாபரின் தாடிமயிர், இராமனின் செருப்பு,
பிள்ளைகள், சிறுநீரகங்கள்,
பறச்சி முலைக்கறி, பாப்பாத்தி தொடைக்கறி,
வீட்டில் வெடிகுண்டு செய்யும் யந்திரம்.
எது வேண்டுமானாலும்
தள்ளுபடி விற்பனையில் வாங்கலாம்.
தெரியாதா உனக்கு.
சந்தைப்பேட்டையில் சூப்பர் மார்க்கெட் வருகிறதாம்!
நிலவை உடைத்துச் செய்த மேஜை விளக்கும்
கடலில் விளைந்த கற்கண்டும்
விரைவில் விற்பனைக்கு வருகிறதாம்
விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.
பூமி சொர்க்கம்தான் போ, இனி.

லாவண்யா

படிப்பகம்

www.padippakam.com

# வேண்டும் தைரியம்

புதிய ஜீவா

நம்பிக்கைகளற்ற வாழ்க்கை.
பிரமைகளற்ற மனம்.
திரும்பும் திசைகள் எங்கும்
சலிப்பும் வெறுப்பும்.

எல்லாமே தலைகீழாக.
நேர்மாறாக.
எதைச் சரிசெய்வது?

வாழ்வு அணையின்
ஓர் ஓட்டையை அடைத்தால்
அதைவிடப் பெரிதாய்
இன்னோர் ஓட்டை.

பீறிடும் துயர்
அதன் வழியே.

ஏதேனும் ஒன்று—
பற்றுக் கோலாக—
படிக்கட்டாக—
அன்பான அணைப்பாக—

தலைதடவி நெற்றியில் முத்தமாக—
விழுந்தவனை உயரத் தூக்க
ஒரு சுண்டுவிரல் வாய்ப்பாக—
இருந்தால்...

கொஞ்சம் புன்சிரிக்கலாம்.
நம்பிக்கை கீதத்தின் முதற்சொல்லை
முணுமுணுக்கலாம்.

பற்றறுத்த மனம்—
இன்ப துன்பமெல்லாம்
சமம் எனும் மனம்—
உகந்தது பிணங்களுக்கு.

என்புதோல் வியாதி போர்த்திய
மனிதச் சுமையாக
மாய்வதைக் காட்டிலும்
மரிக்கலாம் உடனே.

எனினும் மரணத்தைத் தேடிச் செல்ல
மருள்கிறது மனம்.

தெரிந்தது—
தற்கொலைக்கும் வேண்டும்
தைரியம்.

படிப்பகம்

www.padippakam.com

# தத்தெடுக்கப்பட்ட தலித் விடுதலை

## இளைய நந்தன்

கத்திரி வெயில் கண்ணைக் கூச வைக்கும் சித்திரை மாதத்தில் விதேசித் தலை நகராகிப் போன அதர்மமிகு சென்னையில் சென்ற மே 6ஆம் நாள் தலித் கல்வி அறக்கட்டளை சார்பில் (ஐந்தோ ஆறோ) நட்சத்திர ஓட்டல் ஒன்றில் தமிழ் தலித் எழுத்தாளர் பேரவை தொடக்க விழாவும் தலித் இலக்கியக் காலாண்டிதழ் 'கோடாங்கி' வெளியீட்டு விழாவும் வெகு விமரிசையாக அரங்கேறின. 'லட்சுமி கடாட்சம்' கிடைத்த காரணத்தால் சூரியனைச் சுமந்த தலித் முதுகுகள், குளிரூட்டப்பட்ட மண்டபத்தில் வியப்பு மேலிட, மேலே பிளாஸ்டிக் வண்ணப் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட விட்டத்தை விட்டு பார்வை அகலாமல் இருத்தி வைக்கப்பட்டிருந்தனர். வட ஆற்காடு மாவட்டத்தை ஒட்டியுள்ள பல்வேறு கிராமப் புறங்களிலிருந்து வேன்களில் கொண்டு வரப்பட்டவர்கள் இந்த தலித் மக்கள்.

திரு. தமிழ் மறையான்,

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தலித்துகள் ஒன்றாதல் கண்டு
பள்ளு பறைக்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசமென்று பறையே முழங்கு

என்று கூறி பலத்த கைத்தட்டலுடன் தமது வரவேற்புரையைத் தொடங்கினார். தலித் என்ற சொல், குர்ரானில் 'தொல்லத்' என வழங்கி, தற்போது தலித் என்ற வடிவம் பெற்றிருக்கிறது என்றார். அடுத்த தலைமுறைக்கு அடையாளம் காட்டும் இயக்கம் தலித் இயக்கம் என்றார். 'மூக் நாயக்' (ஊமை நாயகன்) 'ஜனதா' என்ற பெயர்களில் அம்பேத்கர் இதழ்கள் நடத்தியதைக் குறிப்பிட்டு அந்த வழியில் 'கோடாங்கி' நடைபோடும் என்றார். தொலைக்காட்சி வழியே இந்த நிகழ்ச்சி ஓரிரு வினாடிகளுக்குக் காட்டவும் ஏற்பாடு செய்யப்பட்டதால் தஞ்சை வாணன் வாழ்த்துரை கூறும்படி நேர்ந்தது.

புதுவைப் பல்கலைக் கழக நாடகத்துறை பேராசிரியரும் 'ஊடகம்' என்ற சிற்றிதழ் ஆசிரியருமான அ. ராமசாமி தமிழகத்தில் தலித் புத்துணர்வு தோன்ற இந்திய அரசு கொண்டாடிய அம்பேத்கர் நூற்றாண்டு விழாவும், மராத்திய-கருநாடக மாநிலங்களில் நடக்கும் தலித் விடுதலை இயக்கத்தின் தாக்கமும்தான் காரணங்கள் என்றார் தலித் எழுச்சிக்கு புதுவையின் முதன்மையான பங்கை நினைவூட்டினார். 'புதுவையில் 93இல் நடந்த தலித் பண்

படிப்பகம்

www.padippakam.com



பாட்டுப் பேரவையின் தோற்றத்திற்கு உறுதுணையாயிருந்தவர்களை நினைவூட்டினார். தலித் கலை விழாக்கள், கருத்துருவங்கள் வழியே ஆதிக்க, சாதியக் கருத்தியலுக்கு எதிரான தலித் விடுதலைக் கருத்தியல், தற்போது 95 மேயில் நடந்த தலித் கலை விழா மூலம் (மதுரை) வேரூன்றி வருகிறது என்றார். தலித் எழுச்சி ஆதிக்க நிறுவனங்களுக்கு எதிரான எதிர்மறைக் கூறுகளைக் கொண்டது. 'மனுதர்மம்' என்று ஆதிக்கக் கருத்தியல் கூறுமானால் கலிகாலம் என்பதைத் தலித்தியம் முன் வைக்கும். அக்கினி நட்சத்திரத்தின் போது அடை மழை பெய்வதைப் போல 'இந்தியா டுடேயில்' தலித்துகள் எழுதுவதும், ஸ்ரீலேகா இன்டர் கான்டினென்டில் தலித்துகள் விழா கொண்டாடுவதும் கலக நடவடிக்கைகள் என்று கூறினார்.

தொடர்ந்து பேசிய 'நிறப்பிரிகை' ரவிக்குமார்: யோசிக்கிற மனுசனுக்கு நிறைய புதுக் கருத்துகளை தந்தது நிறப்பிரிகை. தலித் உணர்வு, தலித் சிந்தனை, தலித் இலக்கியம் இவற்றிற்கு தமிழக அறிவாளர் மத்தியில் ஓரிடத்தை ஏற்படுத்தி தந்தது நிறப்பிரிகை. தமிழில் கடந்த 5 ஆண்டுகளாக தலித் விடுதலை உணர்வை தலித்துகள் மத்தியில் ஏற்படுத்தியதில் கிறித்துவ தன்னார்வக் குழுக்களுக்குப் பங்குண்டு. தலித் விவாதத்திற்குரிய ஒரு பொருளாகி வருகிறது. தமிழகத்தில் நடந்த சில துப்பாக்கிச் சூடுகளுக்குப் பின் இந்த பதப் பிரயோகம் சூட்டைக் கிளப்பி வருகிறது. தலித் என்றால் கலகவாதி என்ற எண்ணம் பரவி வருகிறது. கெட்ட வார்த்தை பேசுகிறவர்கள் எழுதுவதுதான் தலித் இலக்கியம் என்று பெரிய எழுத்தாளர் மத்தியில் மதிப்பீடுகள் தோன்றுகின்றன. அம்பேத்கர் நூற்றாண்டு விழாவை ஒட்டியும் மண்டல் பரிந்துரையை நடைமுறைப் படுத்த விரும்பிய தேசிய முன்னணியின் தாக்கமும் இந்து மதவெறிச் சக்திகளின் எழுச்சியும் இங்கே தலித் இயக்கத்தைத் தீவிரப்படுத்தியுள்ளன.

கடந்த காலங்களில் பல்கலைக் கழகக் கருத்தரங்குகளில் வாசிக்கப்பட்ட கருத்தரங்குக் கட்டுரைகளில் அம்பேத்கர் கருத்துகள் எடுத்தாளப்பட்டனவா? என்று நீதிமான் ஒருவர் பல்கலைக் கழக கருத்தரங்கு ஒன்றில் கேட்டார். விளிம்பு நிலை மக்களின் நோக்கிலிருந்து ஆய்வு செய்தவர்கள்கூட அம்பேத்கரை சிந்திக்க வில்லை. சிந்தனை மற்றும் வரலாற்றுத் தளங்களில் செயல்பட்டவர்களால் அம்பேத்கரியம் கண்டு கொள்ளப்படவில்லை. அம்பேத்கரியத்தை அலட்சியம் செய்து எழுதப்படும் மானுடவியல் ஆய்வு அயோக்கியத்தனமானது. தர்கைம் போன்ற புகழ் பெற்ற சிந்தனையாளர்கள் அம்பேத்கரை மேற்கோள் காட்டியிருப்பதை நாம் நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

சாதியம் எங்கள் மீது வலிந்து திணிக்கப்பட்ட மௌனம். நூற்றாண்டுகளாக நீடித்து வரும் மௌனத்தை இன்று உடைத்து நொறுக்குகிறோம். மராட்டியத்திலும், கருநாடகத்திலும் தோன்

படிப்பகம்

www.padippakam.com



றிய அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சி, ஒரு பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கரின் பெயரை வைப்பதில் தோன்றிய போர் இன்று தமிழகத்திலும் தொடர்கிறது.

தமிழகத்தில் பெரியார் இயக்கம் மக்களின் மாபெரும் மக்கள் இயக்கமாக செயல்பட்டது. திராவிட இயக்கம் தலித் எழுச்சிக்கும் விடுதலைக்கும் சாதகமாயும் பாதகமாயும் பங்கேற்று வந்துள்ளது. திராவிடச் சிந்தனை தலித் சிந்தனையை அடக்கி வைத்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் திராவிட இயக்கத்தின் தோல்வியிலிருந்து தலித் இயக்கம் தோன்றியதாக எதிர்மறையாகப் பார்க்க வேண்டியதில்லை.

இன்று தினமணியும் இந்தியா டுடேயும் 'தலித் மலர்கள்' வெளியிடுகின்றன. இதற்கு நாம் இடைவிடாமல் நடத்திய போராட்டங்கள்தாம் காரணம். இந்த வெற்றி எடுத்துச் சொல்லப்பட வேண்டிய வெற்றி. ஆயிரம் முன் எச்சரிக்கைகளோடு ஏற்கப்பட வேண்டிய வெற்றி.

தமிழ் தொன்மையான மொழிதான். இந்த மொழியில் தலித்தின் குரல் பதிவாவது காலங்காலமாகத் தடுக்கப்பட்டுள்ளது. இருட்டடிப்புச் செய்யப்பட்ட தலித் மக்களின் குரலும் அடையாளங்களும் இப்போதுதான் தமிழில் பதிவாகத் தொடங்கியுள்ளன. இலக்கியத்தில் மனித உரிமை பற்றிய பதிவுகள் முதன்முதலாக அடையாளம் காட்டத் தொடங்கியுள்ளன. இதுவரை இலக்கியம் வேறு, மனித உரிமை வேறு என்றே பார்க்கப்பட்டிருக்கிறது. தமிழ் இலக்கியத்தில் பல்லாண்டுகளாகப் பேசப்பட்ட யதார்த்த வகையிலிருந்து மாறுபட்ட இலக்கியமாக வெளிப்படுகிறது தலித் இலக்கியம்.

வெண்மணியிலும் குறிஞ்சா குளத்திலும் செங்கல்பட்டிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக கொல்லப்பட்டவர்களின் குரல்களோடு தலித் குரல் எழுகிறது. தலித் இலக்கியத்துக்கு பெரிய இலக்கியப் பாரம்பரியப் பின்னணி இல்லை. ஆனாலும் வரலாறு எல்லாம் தலித் மக்களின் போராட்ட வரலாற்றுப் பின்னணி உண்டு. இந்த மண்ணில் மட்டுமல்ல, இந்திய மண் முழுதும்.

பெரிய அளவில் நம்மை இருட்டடிக்கும், இல்லாமலாக்கும் முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கும் சூழலில் நம்மை ஒருங்கிணைத்துக் கொள்ளவும் நமது குரல்களை முழக்கமாக்கவும் நாம் இங்கே கூடியுள்ளோம். 'இந்தியா டுடே' நம்மை அவமதித்தது. 2 ஆண்டுகளுக்கு முன் நாம் புதுவையில் கூடி, 'இந்தியா டுடே' தாள்களை மலம் துடைக்கப் பயனபடுத்துவோம் என்று அறிவித்தோம். இன்று இந்தியா டுடேயில் இடம் கிடைத்துள்ளது. இந்தக் கூட்டம் சாதாரண நிகழ்ச்சி அல்ல. வரலாற்றின் நிகழ்வு. தமிழகம் முழுதும் அறியச் செய்ய வேண்டும். இது இலக்கியப் பிரச்சனை அல்ல, உயிர் வாழ்தல் பற்றிய பிரச்சனை. நமது அடை

படிப்பகம்

www.padippakam.com



யாளங்களைத் தொடர்ந்து காப்பாற்றி வருவதன் மூலம் நமது உயிர் வாழ்க்கை உறுதிப்படும். இருத்தல் நிச்சயம் செய்யப்படும்.

உலகத்தமிழ் மாநாட்டில் முதன் முறையாக தலித் அமர்வுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. பிரான்சிலிருந்து வந்து தமிழக தலித் இலக்கியம் பற்றி ஆராயும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழ் தலித் இலக்கியம் பற்றி ஹைதராபாத்திலிருந்து கேட்கப்படுகிறது.

திராவிட இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தவர்கள்தாம் தலித் இலக்கியத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். தி. இயக்கம், சோசலிச இயக்கம் ஆகியவற்றின் பின்னடைவு, சிந்தனையாளர்களை அடுத்த கட்டத்தை நோக்கி அதாவது தலித் இயக்கத்தை நோக்கி – திசைப் படுத்தியிருக்கிறது. இது வரவேற்க வேண்டிய மாற்றம். தலித் பேந்தர் (தலித் புலிகள்) இயக்கம் மராட்டியத்தில் உள்ளது போல் இங்கு இல்லை என்றாலும், சாதியப் பேயை விரட்டும் 'கோடாங்கி' வெளிவருகிறது. வரவேற்போம். வளர்ப்போம்.

அடுத்து கோடாங்கி இதழ் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த பிரதிபா ஜெயச்சந்திரன் பேசுகையில்: மக்கள் தொகையில் 25 °/. உள்ள தலித் மக்கள் குரல் தமிழ் இலக்கியத்தில் 25 °/. எதிரொலிக்கப்பட 'கோடாங்கி' முன் வந்துள்ளது. இன்று எழுத்தாளர் மத்தியிலும் வாசகர் மத்தியிலும் ஆதிக்கம் செலுத்துகிற ஆதிக்க அடையாளம் மற்றும் ஆதிக்க உணர்வுகளின் பதிவை அகற்றி, தலித் அடையாளத்தையும் தலித் உணர்வையும் உருவாக்க கோடாங்கி முயலும்.

அடுத்து பண்டிதமணி அயோத்தி தாசரின் கொள்ளுப் பேத்தி நிர்மலா அருள் பிரகாசம் வள்ளுவரின் அறிவுடையார் எல்லாம் உடையார் —என்ற வாக்கை நினைவூட்டி தலித் மக்கள் சரியான வரலாற்று விடுதலை அறிவையும் உணர்வையும் பெற வேண்டும் என்றார்.

அடுத்து ஓவியர் சந்ரு சுருக்கமாகவும் கூர்மையாகவும் பேசினார்: வேறு வேறு இடங்களில் இருந்தவர்கள் எல்லாம் இப்போது வேறொரு இடத்தில் ஒன்று சேர்ந்திருக்கின்றனர். நேற்று அவர்களுக்கான குரல் இன்று நமக்கான குரலாக எழுகிறது. இன்று நமக்கான குரல் நேற்று அவர்களுக்கான குரலாக இருந்திருக்கிறது. திராவிட இயக்கமாயும் மார்க்சிய லெனினிய இயக்கமாயும் இயங்கியவர்கள்தாம் மீண்டும் இயங்கத் தொடங்கி இருக்கின்றனர். வரவேற்போம் இந்த இயக்கத்தை. வளர்ப்போம் இந்த உணர்வை.

வாழ்வு வேறு, கலை வேறு அல்ல. ஆனால் இங்கு இரண்டும் வேறு வேறாகவே இருந்து வருகின்றன. இரண்டையும் ஒன்றாக்கவே இந்த இயக்கம். இதுக்கு எதிரான எழுத்து எதுவுமே இன்று விடுதலைக்கு எதிரானது. எவையெல்லாம் மனித விடுதலைக்கு எதிரானவையோ அவற்றை எல்லாம் வீழ்த்தணும்; பொய் ஆக்கணும். மண்ணைப் பிசைவது போல படைப்பு மண்ணிலிருந்து

படிப்பகம்

www.padippakam.com



உருவாக்கணும். மண்ணிலிருந்து பாண்டமும் பாத்திரங்களும் படைப்பும் உண்டாகணும். சண்டை வரும். வரட்டும். தெளிவுண்டாகும். தமிழ் தொன்மையான மொழியாம். இலக்கியம் வளர்த்த மொழியாம். இந்த மொழியில் இத்தனை பேர் எழுத்தே அறியாமல் இருக்கலாமா?

தமிழ் தலித் எழுத்தாளர் பேரவை அமைப்பாளரும் பெண்ணியமும் தலித்தியமும் சிறக்க எழுதிவரும் படைப்பாளருமான சிவகாமி பாஸ்வானுக்காக வேண்டி ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினார். தலித் இலக்கியம் கடந்த சில ஆண்டுகளில் சில படிகளைத் தாண்டி வந்துள்ளதை விரிவாக எடுத்துக் கூறினார். தலித் இலக்கியம் தன் விடுதலைக்காகப் போராடி வருகிறது. இந்தப் போராட்டத்தில் தலித்தும், தலித் உணர்வுள்ளோரும் ஒருங்கிணைந்து வருவதை வரவேற்றார்.

இதன் மூலம் தலித்துகள்தாம் தலித் இலக்கியம் படைக்க முடியும் என்ற வாதத்துக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்ததாகக் கருதலாம். ராஜ் கவுதமனின் சமீபத்திய கட்டுரைகளிலும் இந்த மாதிரியான ஒரு பரந்த அணுகுமுறை பின்பற்றப் பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. கறுப்பு இலக்கியத்திற்கு வெள்ளை இனத்தைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் நாடிமர் எழுத்து எவ்வளவோ உதவியுள்ளது. ஒரு விதத்தில் கறுப்பு இலக்கியமும் தலித் இலக்கியமும் ஒன்றுதான். அது நிறத்தின் பெயரால் எழுந்த அதிகாரத்திற்கு ஒரு முடிவைக் கட்டியது. இது பிறப்பின் பெயரால் எழுந்த அதிகாரத்திற்கு ஒரு முடிவைக் கட்டுகிறது.

இறுதியாக இதழை வெளியிட்டு எழுத்தாளர் பேரவையைத் தொடங்கி வைத்த பாஸ்வான் தம் சிறப்புரையில் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசினார். நேர்படவும் வெடிப்புறவும் பேசுவதே தலித்தியம் என்பது அவர் பேச்சில் தெரிந்தது. அவர் கூறியதாவது:

இன்று சமூக நீதிக்குத் தடையாக நிற்பது 'மனுநீதி.' இந்த ஜனநாயகச் சூழலில் சமூக நீதிக்கு எதிரான மனப்போக்கு இறுகிப் போன சூழலில் நாம் வாழ நேர்ந்துள்ளது. இத்தகைய கெட்டி தட்டிப் போன சூழலில் நமது குரலைச் சிறிதும் பிசிறில்லாமல் வெளிப்படுத்துவது நல்லது.

பெரியார் பிறந்த மண் இது. சமூக நீதிக்காக இந்நாட்டில் முதன் முதலாக அரசியல் ரீதியாக இயக்கம் கண்டு நீதியை நிலைநாட்டிய மண். இந்த மண்ணில்தான் இன்று நீதி மறுக்கப்படுகிறது. பஞ்சமர் நிலத்தை யார் யாரோ பங்கு போட்டுக் கொண்டனர். இழந்து போன நிலத்தை, வாழ்க்கையை, வரலாற்றை மீட்க வந்திருக்கிறோம். காரணை - கிராமம் நமது பயணத்தின் ஒரு திருப்பு முனை. நிலத்தை மீட்போம். அம்பேத்கர் சிலையை வைப்போம். இது நடக்கும். ஒவ்வொரு சிறு போ

படிப்பகம்

www.padippakam.com



ராட்டமும் நமது உரிமையை - தன்மானத்தை - அடையாளத்தை அறிவிக்கும் போராட்டமாகும்.

தலித்துகள் மண் தலித்துகளுக்குத்தான் சொந்தம். அதை பறித்துக் கொண்டால் அவன் இறுதிவரை போராடுவான். அடி பணிந்த காலம் மலையேறி விட்டது. புனிதமான நூல்கள் என்று சொல்லப்படுகிற மகாபாரதமும் இராமாயணமும் எனக்கு எதிரானவை. எனவே எனக்கு அவை சாதாரணமானவை. ராமாயணம் புண்ணிய நூல் என்றால் என் முன்னோன் சம்புகன் ஏன் அநீதியாகக் கொல்லப்பட்டான்? மகாபாரதம் புனித நூல், கீதை வேதம் என்றால் ஏகலைவனின் கட்டை விரல் மட்டும் ஏன் 'குரு காணிக்கையாக்கப்பட வேண்டும்?

பெரியார் ஏன் கடவுளை மறுத்தார்? கோயிலுக்குள் போகிறாய் என்றால், பார்ப்பானின் புரோகிதத்தை ஏற்கிறாய் என்றால், அவன் காணிக்கைத் தட்டில் காசுகள் போடுகிறாய் என்றால், அவன் கும்பிடும் கடவுளை நீயும் கும்பிடுகிறாய் என்றால், அவன் தலைமையை, நீதி, நியமங்களை ஏற்கிறாய் என்று பொருள். அவனுக்கு அடிமை என்பதை நீ அவனிடம் அவ்வப்போது ஒப்புக் கொள்கிறாய் என்று பொருள்.

இதற்கு ஒப்புக் கொண்டதால்தான், இன்று பிற்படுத்தப்பட்டோரும் தாழ்த்தப்பட்டோரும் இந்த ஜனநாயக யுகத்திலும் சகல நிறுவனங்களிலும் பார்ப்பானின் தலைமையை சுமக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. சட்டம், நிர்வாகம், நீதி, பத்திரிகை ஆகிய அனைத்துத் தூண்களின் உச்சியிலும் அவன் கொடி பறந்து கொண்டிருக்கிறது. அனைத்தையும் சுமந்து அவனது நுகர்வோராகவும் வாடிக்கையாளராயும் மாறியுள்ளோம்.

தலித் இயக்கம் இந்தத் தூண்களை அசைக்கத் தொடங்கியுள்ளது. வி. பி. சிங் இந்தத் தூண்களின் உச்சியில் நமது கொடிகள் பறக்க வேண்டும் என்றார். மண்டல் பரிந்துரை பிற்பட்டோரது வெற்றியாயினும் அவ் வெற்றியைப் பாதுகாப்பது தலித்தின் கடமை. இந்த வரலாற்றுக் கடமையை ஆற்றவே தலித் இயக்கமும் தலித் இதழ்களும் என்று கூறி 'காரணை' கிராமத்துக்குப் புறப்பட்டார்.

★ ★ ★

ஆங்காங்கே தமிழ் தலித் கலை இலக்கிய விழாக்களும் பேரவைகளும் கடந்த சில ஆண்டுகளாக நடந்து வருவது வரவேற்கத் தக்கது. எனினும் இந்த அமைப்புகளுக்குள் இப்போதே ஓர் ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது. புதிதாகத் தோன்றும் ஓர் இலக்கியப் பண்பாட்டு இயக்கத்திற்குத் தேவைப்படும் பொதுவான இலக்கை சரிவர வரையறுத்துக் கொள்ளாமல் இருந்துவிட்டால், பயணம் தடம் மாறவும் தடுமாறவும் கூடும். ஏற்கனவே தலித்துகள் ஓட்டு வங்கிகளாக மாற்றப்பட்டிருப்பதால் தொழிற் சங்கத் தலைவர்கள் விலை போனது போல் கவ்வாய் பிரிவு, கோபர் கடே பிரிவு, பாலசுந்தரம், தமிழரசன், இளைய பெருமாள் என்று தலித் தலைமை

படிப்பகம்

www.padippakam.com



கள் பிளந்து, ஆணிவேராம் ஆளும் சாதியத்தின் பக்க வேர்களாகி பலமிழந்து கிடக்கின்றனர்.

இப்போது தலித் விடுதலை என்று கிறித்துவத் தன்னார்வுக் குழுக்கள் வேறு 'உள்ளே'இறங்கியுள்ளன. மதமாற்றம்தான் இவற்றின் குறியேயன்றி, சமூக மாற்றமோ சாதிய ஒழிப்போ இலக்கல்ல. அமெரிக்காவிலிருந்து போர்டு பவுண்டேசன் மூலம் ஏற்கனவே கூத்துப்பட்டறைக்கு இலட்சக்கணக்கில் பணம் வந்தது. கூத்துப்பட்டறை என்ன ஆயிற்று? நமது மரபோடு, மண்ணோடு, மனசோடு, மேலைய மரபை(நவீனத்துவத்தை), மதிப்பீடுகளை, உத்திகளை உள்ளே கலந்து, உள்ளதும் போச்சுடா நொள்ளைக் கண்ணா என்றாகிவிட்டது.

அந்நிய நாடுகளின் நிதியால் தாலாட்டப்படும் தன்னார்வக் குழுக்கள் தன் அடையாளம் ஏதும் இன்றி, அந்நிய சாயலுடன் குதிரை கீழே தள்ளியதும் அல்லாமல் குழியும் பறித்ததாம் என்ற கதையாக தமிழும் இல்லாமல் ஆங்கிலமும் அல்லாமல் ஒருவித மான கலப்பட அடையாளத்துடன், அடையாளச் சிக்கலுக்கும் ஆளாகி வெகு மக்களிடமிருந்து 'தனித்து'ப் போவதுதான் இங்கு நடந்து வரும் வரலாறு.

திரு. பஸ்வானின் அருமையான பொழிவை தன்னார்வக் குழுவின் தலைமை நிர்வாகியான 'சபாரி'யில் காட்சி தந்த ஹென்றி தியாகராஜன் தமது அறைகுறை அறிவால் தமிழில் தப்பும் தவறுமாக மொழி பெயர்க்க முயன்று, ஆங்கிலம் அறிந்த தலித்துகளின் கண்டனத்துக்கு ஆளானார்.

திரு. பாஸ்வான் வெளியிட்ட 'கோடாங்கி' இதழ் பல்லாயிரக் கணக்கான ரூபாய் நிதி பலத்துடன் வெளி வந்துள்ளது. தனி இதழ் ரூ. 25. படித்த பணக்கார தலித்துகள் வாங்கலாம். சிறுகக் கட்டிப் பெருக வாழ் என்று பெரியோர் சொல்லிச் சென்றனர். நவீன அறிவியல் தொழில் நுட்ப உதவியால் இதழுக்கு அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது. ஹென்றி தியாகராஜன் போன்ற 'விடுதலைத் தரகர்களின்' குறுக்கீட்டால் தலித் விடுதலைக்கு நாம் தரும் விலையும் அதிகரித்து விடலாம்.

அதிலும் தலித் விடுதலைக்கு (தமிழ் விடுதலைக்கு) அதிகார வர்க்கம் எந்த அளவுக்கு அனுகூலமாய் இருக்கும் என்பது ஒரு கேள்விக் குறியே. அதிகார வர்க்கத்தில் அமர்ந்து கொண்டு இந்த இயக்கத்துக்கு ஆசி கூறி வழி நடத்தும் முன்னாள், இந்நாள் ஐ. ஏ. எஸ்.கள் மேடையை ஆக்கிரமித்துக் கொண்டனர். இந்த விழா பற்றிய சுவரொட்டியில் இன்குலாப், குணசேகரன், ராஜ்கவுதமன், பழமலய், மார்க்ஸ் ஆகியோரின் பெயர்கள் காணப்பட்டன. விழாவில் இவர்களைக் காணோம். ஏற்பாட்டில் கவனமாய் மேற்கொள்ளப்பட்ட அலட்சியத்தின் விளைவாக இவர்கள் இடம் பெறவில்லையோ என்ற ஐயத்தை ஏற்படுத்தியது.

தலித் விடுதலைக் குரல் தமிழகத்தைப் பொறுத்தவரை வெவ்வேறு முனைகளிலிருந்தும் மூலைகளிலிருந்தும் எழுகிறது. ஒவ்

படிப்பகம்

www.padippakam.com



வொரு குரலுக்கும் பின்னணியிலிருக்கிற சுயத்தைத் தேடியாக வேண்டியுள்ளது.

ஏதோ கடந்த ஐந்தாண்டுகளாகத்தான் தலித் இலக்கியம் தேசிய முன்னனி ஆட்சியின் வீழ்ச்சிக்குப்பின் எழுந்த எழுச்சி போலச் சித்தரிக்கப்படுகிறது. உண்மையில் இவ்விலக்கியத்தின் விதை இடது சாரி இலக்கிய காலத்திலேயே ஊன்றப்பட்டது. டி. எஸ். செல்வராஜ் எழுதிய 'மலரும் சருகும்'தான் முதல் தலித் நாவல். அதே போல 'வானம்பாடி' கவிதை இயக்க காலத்தில் சிற்பி படைத்த 'சிகரங்கள் பொடியாகும்', அக்னிபுத்திரனின் 'ஒரு 'பறைச்சியின் வெள்ளி விழா குறைச்சல்' ஆகிய கவிதைகள் தலித் உணர்வோடு படைக்கப்பட்ட கவிதைகள்.

'தலித் விடுதலை' என்றால் யாரிடமிருந்து என்றொரு கேள்வி எழுகிறது. அனைத்து விடுதலைகளுக்கும் முன் நிபந்தனைக ளாக இருப்பவை பெண் விடுதலையும் தலித் விடுதலையும் என் பது உலகறிந்த உண்மை. தலித் விடுதலையாகட்டும், தமிழின விடுதலையாகட்டும் இரண்டுமே பார்ப்பனியத்தின் கருத்தியல் ஆதிக் கத்திலிருந்தே என்று அம்பேத்கரும் பெரியாரும் கூறிய பின் மீண்டும் ஒரு குழப்பத்தை விளைவிக்க பார்ப்பனியம் கணையாழி, இந்தியா டுடே வாயிலாக முயன்று கொண்டிருக்கிறது. கணை யாழி 'திராவிடப் பார்ப்பனியம்' என்று ஒரு சொல்லாட்சியை முன் வைக்கிறது. இந்தியா டுடே தமிழ் எழுத்தாளரும் தமிழில் எழு தும் பிற மொழி (இன) எழுத்தாளரும் என்றொரு பிரித்தாளும் சூழ்ச்சியில் ஈடுபட்டது. வெங்கட்சாமிநாதனை வைத்து தமிழின எழுத்தாளருக் 'தக்கார், தகவிலர்' என்று ஞானியை ஒருபுறமும் எஸ். வி. ஆரை மறுபுறமும் வைத்து ஆசை காட்டியது. அடுத்த மலரில் எழுத ஞானிக்கு வலையும் விரித்தது. 'சிறுபத்திரிகைப் பண்பாடாம்' வணிக எதிர்ப்பைக் கைவிட்டு ஒவ்வொருவராய் சோரம் போய்க் கொண்டிருக்கிறார்கள். முதலில் பிற்படுத்தப்பட் டோர். இப்போது தலித்துகள்!

# ஓவியர் ஆதிமூலத்தின் வேத மூலம்

ப. சோழநாடன்

கடந்த மாதம் கணையாழி இதழில் யூமாவாசுகியின் கேள்வி களுக்கு பதிலளிக்கும் முகமாக ஓவியர் ஆதிமூலம் சொல்லியிருப் பது அவரது தடுமாற்றத்தையே காட்டுகிறது. ஓவியர்கள் புக

www.padippakam.com



ழேந்தி, சந்ரு, வீர. சந்தானத்தின் மீது தன் காழ்ப்புணர்ச்சியைக் கொட்டித் தீர்த்திருக்கிறார். இவர்கள் மூவரும் தங்கள் ஓவியங்களைத் தொகுப்பாகக் கொண்டு வந்தவர்கள். இது ஆதிமூலத்திற்குப் பிடிக்குமா? "ஓவியர்களுக்குத் தேவையில்லை. அது எழுத்தாளர்களுக்குத்தான் தேவை," என்கிறார். ஓவியனுக்கு கண்காட்சி நடத்துவது எப்படி மக்களைச் சென்றடைய ஒரு முறையாக இருக்கிறதோ, அதுபோலத்தான் புத்தகமாகக் கொண்டு சேர்ப்பதும் என்பது. இது ஆதிமூலத்திற்குத் தெரியாததல்ல. பிறகு காழ்ப்பை ஏன் கக்கி இருக்கிறார் என்றால் இவர்கள் மூவரும் சமுதாயத்தின் அடித்தட்டிலிருந்து உருவானவர்கள். இதில் ஓவியர் புகழேந்தி நமது சமூகத்திலும் சரி, உலக அளவிலும் சரி நடக்கும் சோக மயமான சம்பவங்களின் அடிப்படையில் தனது படைப்பை உருவாக்கியவர். ஓவியர் வீர. சந்தானமோ ஈழத்தில் தமிழர்கள் படும் துயரை தனது தூரிகை மூலம் உலக முழுவதற்கும் தெரிவித்தவர். தலித் கலகக்காரரர் என்கிற முறையில் சந்ரு பலமுறை ஓவிய தேர்வுக் குழுவினரால் ஓரங்கட்டப்பட்டவர்.

இம்மூவருமே சமூக உணர்வு மிக்கவர்கள். "சமூக உணர்வு' என்ற சொல்லே 'கலை கலைக்காக' கும்பலுக்கு வேம்பாய்க் கசக்கும்! பிறகு சொல்வானேன்.

ஓவியர் புகழேந்தியின் ஓவியங்களின் சமூக நோக்கத்தைக் கண்ட கவிஞர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள் போன்றோர் இவை தொகுக்கப்பட்டு, புத்தகமாக வெளிவர வேண்டும் என்றதாலேயே நூல் வெளியீட்டுக் குழு அமைக்கப்பட்டது. 'இந்த ஓவியங்கள் வெளியிடத் தக்கவைதான்' என்ற அறிக்கையிலே முதல் கையொப்பமிட்டவர் இந்த ஆதிமூலம்தான். அப்போதே தனது கருத்தை சொல்லியிருக்கலாம். நேரில் ஆதரிப்பதும், முதுகுக்குப் பின்னால் புறம் பேசுவதும் தமிழகத்தை பிடித்த சனியன் போலும்.

வீர. சந்தானத்தின் 'ஈழ வரிசை ஓவியங்களை' நக்கலடிக்கிறார் ஆதிமூலம். "சந்தானம் ஒரு தடவை இலங்கை சென்று வந்து, அங்கு நடப்பவைகளைப் பற்றி ஓவியங்கள் வரைந்திருக்கலாம்," என்று குசும்பு செய்கிறார். ஆதிமூலத்தின் 'காந்திவரிசை' ஓவியங்கள் நினைவிருக்கிறதா? காந்தியை வரைய இவர் என்ன சபர்மதி ஆசிரமவாசியாகவா இருந்தார்? முதலாளித்துவ கருத்தான 'கலை கலைக்காகவே'யையும், நிலப் பிரபுத்துவ வடிவான சாதிய மேலாண்மைத்தனத்தையும் ஆதிமூலம் உதிர்த்திருக்கும் இம் முத்துக்களிலிருந்து தமிழர்கள் கட்டாயம் புரிந்து கொள்ள வேண்டும். ●

படிப்பகம்

www.padippakam.com



## தேடல்

அண்மையில் படித்த இரண்டு நூல்கள் என்னைச் சற்று அதிகம் பாதித்தன.

ஒன்று, பெருமாள் முருகனின் 'திருச்செங்கோடு' சிறுகதைத் தொகுதி. இதன் சில பக்கங்களை உள் வாங்கும்போதே, தன் ஒற்றை நாவல் மூலமே இலக்கிய அரங்கத்தில் தனக்கென்றோர் இருக்கை போட்டு வீற்றிருக்கத் தக்கவர்தான் இந்தப் பெருமாள் முருகன் என்று தெரிந்துவிடுகிறது. இத்தனைக்கும் அவரின் ஆரம்பகாலச் சிறுகதைகள் இவை.

நெருஞ்சி முள் குவியலில் அழுந்தக் கால் பதித்த ஒருவன், 'அம்மாடி' என்று தன் வலியை விழுங்கிக் கொண்டு, அருகே கிடந்த மொட்டைப் பாறையில் அமர்ந்து, காலை வளைத்துத் துடையில் போட்டு, பாதத்தில் அப்பியிருந்த முள்களையெல்லாம் ஒவ்வொன்றாய்ப் பிடுங்கியெறிய. குத்துவாய் முழுவதும் துளித் துளியாய் சிவப்புப் பூக்கள் பூக்கக் கண்டு, அவ் வழகில் சொக்க அவனால் முடிந்தால்... என்னால் முடிந்தது. காரணம், அது எனக்குமான அனுபவம். 'திருச்செங்கோடு' கதைகள் என்னில் மீட்டுருவாக்கிய அனுபவம்.

அடுத்த நூல் கண்மணி குணசேகரன் எழுதிய 'தலைமுறைக் கோபம்'- கவிதைத் தொகுப்பு. வாசிக்கும்போதே பல கவிதைகள், என்னில் தழும்புகளாய் இருந்தவற்றை, 'அடப் பாவி, இவை ரணங்கள்' என வலி சுரக்க வைத்தன. கவிதைக்கான சொற்செறிவு, கலை நுட்பம், செய்நேர்த்தி என்பதெல்லாம் பழைய சோற்று நீரில் கரைந்து போன உப்பு மாதிரி புறந் தெரியாமல் ஒளிந்துகொண்டு, கவிதைகளை முழுவீச்சில் அம்மணப் படுத்தின. கவிதைகளைப் படிக்கும் போதே, என் காட்சியில் இந்தக் கவிஞன் செம்மண் பூசி நீண்டு தொங்கிய கோவணத்தோடு, பிடரியில் கிடத்திய நீண்ட தடிக்கொம்பை இரண்டு கைகளையும் வளைத்துப் போட்டுப் பிடித்துக்கொண்டு, தன் குழந்தைகளைப் பார்ப்பதைப்போல் ஆடுகளைக் கண்காணித்துக் கொண்டு இடையனாய்த் தோன்றுகிறான். பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவன் ஆட்டுக்குட்டிகளில் ஒன்றாய் நானும் மாறிப் போகிறேன்.

அண்மையில் நான் படித்த கவிஞர்களில் மண்ணையே சந்தனமாய்ப் பூசிக்கொண்டு மணக்கமணக்க

படிப்பகம்

www.padippakam.com



என்னை அணைத்துக்கொண்டவன் இந்தக் கவிஞன். இவன் கவிதைகளும் குத்துவாயில் ரத்தம் பெருகுவதுபோல் இயல்பாக வந்திருக்கின்றன. படிக்கும்போதே சொற்கள் முற்றும் நழுவிப்போய் நம்மை விழுங்கிக்கொள்ளும் அனுபவங்களாய் விரிகின்றன. இவை ருசிக்குச் சாப்பிடுகிறவனின் ரசனை அனுபவங்கள் அல்ல. பசிக்குச் சாப்பிடுகிறவனின் கும்பி நனையும் அனுபங்கள்.

'மின் நகரங்கள்' போன்ற சில கவிதைகளைக் கவிஞன் செம்மொழியில் எழுதும்போது 'ஐய, வேண்டாமே,' என்றே சொல்லத் தோன்றுகிறது. என்னைப் போன்றவர்கள், 'எங்களுக்கு நாங்களே எவ்வளவு அந்நியமாகிப் போனோம்' என்று ஏங்க வைக்கிற கவிஞன் இவன்.

இத்தொகுதியில் 'சுள்ளிகள்' என்றொரு கவிதை:

"காரடு வாச்சருவோ
கண்ணுல பட்டுட்டா அவ்வளவுதான்
அதுவும் இப்பிடி
கட்ட கட்ட வெறுவா முறிக்கறத பார்த்தா ..."
"கட்ன பொண்டாட்டி மாதிரி..."
நெனைக்கவே பயமாயிருக்கு
வர்ற வழியிலேயே சுடுகாடு வேற.
காட்டுத் தேளும் பாம்பும் சருவுல
'எங்க எங்கன்னு' கெடக்குதுங்க.
பாயாட்டம் நொறுங்கிக் கெடக்குது முள்ளு
கால கீழ வைக்க முடியல.
சூரமுள்ளும் இன்ட முள்ளும்
நாரு நாரா கிழிக்குது சேலைய
பொம்பளைவுலா பாத்து
தூக்குறானுவுளாம் திருடனுவோ வேற.
என்னதான் பண்றது
இதுலாம் பாத்தா, அடுப்புப் பொவையுமா?
கைப் பெரிய, கால்ப் பெரிய
வெறுவா பாத்து முறிச்சிக் கத்தகட்டி
முட்டிப்போட்டுத் தானேத் தூக்கிகிட்டு
பயந்து பயந்து
கொல்லை வழியா வேகமா வருது குப்பு.
'கத்த வெறுவ கடையிலப் போட்டுட்டு
அரிசி உப்பு மொளா செலவ வாங்கி
வூட்ல வச்சிட்டு—
இருட்டறத்துக்குள்ள வேலிப்பக்கமாச்சும் போயி
நாலு முள்ளு சுள்ளி பொறுக்கியாறனும்
அடுப்புக்கு...'

படிப்பகம்

www.padippakam.com



ஒரு இரவு முழுதும் என் பிள்ளைப் பருவத்தில் நானறிந்த 'குப்பு'க்களையெல்லாம், மனம் கரையக் கரைய நினைத்திருந்தேன்.

'திருச்செங்கோட்'டில் 'சிதைவு' என்றொரு கதை. கதை நாயகியின் பெயர் இல்லை. 'குப்பு' என்றே வைத்துக்கொள்வோமே.

கோழியடித்துக் குழம்பு வைக்கச் சொல்லிவிட்டு அவள் கணவன் வேலைக்குப் போகிறான். இவள் கூட்டி வைத்த குழம்பு கொதிவருவதற்குள் டி. வி. யில் படம் தொடங்கிவிட்டது. பெண்கள் ஓடுகிறார்கள். குழம்பு கொதிக்காமல் இருக்க செங்கல்லை வைத்துவிட்டு இவளும் ஓடுகிறாள். இடையில் அவள் புருஷன் வந்து பார்த்த போது, கறியை உருட்டி நாய் தின்றுவிட்டதை அறிந்து, அவளை மயிரைப் பிடித்து இழுத்துப் போட்டுத் துவைத்தெடுத்து 'ஓடிப்போடி, முண்டை' என்கிறான். அவள் தன் குழந்தைகளோடு 'கோனப் புளியா மரத்தடி' நிழலில் அமர்கிறாள். சில் மூக்கு உடைந்து ரத்தம் ஒழுகுகிறது. பால் குடிக்கும் பிள்ளையின் பற்கள் மார்பில் அழுந்துகின்றன. அப்படியே உயிர் போய்விடாதா என்றிருக்கிறது.

அப்போது படம் முடிந்து அவ்வழியே வரும் பெண், ''பாதிக்கு மேல்தான் படம் நல்லாவே இருந்துச்சுக்கா,'' என்கிறாள். சொன்னவள் முகத்தில் அப்படியொரு பூரிப்பு. நம் குப்பு அவளை ஏறிட்டுப் பார்க்கிறாள்.

''கத எப்புடி சாந்தி முடிஞ்சுது?''

இந்தக் 'குப்பு' 'தலைமுறைக் கோபத்'தில் ஒரு 'பறையாச்சி'யாய் இருப்பாள். 'திருச்செங்கோட்டில்' ஒரு கவுண்டச்சியாய் இருப்பாள். இரண்டிலுமே அவள் பறைச்சியாயும் இருக்கலாம். ஒரு வேறுபாடும் இல்லை.

இதுதான் வாழ்க்கை என்னும் போது, இந்தச் சாதிகள் வந்து 'ஒன்றும் புடுங்கப் போறதில்ல.' இதை இப்போது சொல்லாமல் வேறு எப்போது சொல்வது?

★ ★ ★

கோவை ஞானியின் கடிதங்களை முழுமையாக வெளியிட்டது அவை ஆவணங்களாகும் என்பதால் மட்டுமல்ல, ஞானி மீது நமக்குள்ள மரியாதையாலும்தான். இதுஅவருக்குத் தெரிய வேண்டுமே. ஞானி, தன் பிம்பத்திற்குச் சேதம் வரக் கூடாது என்பதில் கொண்ட நீண்ட அக்கறையே அக்கடிதங்கள். அதுபோலவே பிறர் பிம்பத்தையும் காரணமின்றி சேதப்படுத்தக்கூடாது என்ற அக்கறையை அவர் ஓம்பினால், அதுதான் ஞானிக்கான அறமாயிருக்கும்.

முதலில், கவிதாசரணின் 'தர்க்கத் திறமையை ரசிக்கிறேன்' என்கிறார். அடுத்து ஒரு படி இறங்கி, 'நண்பனைக் காயப்படுத்

படிப்பகம்

www.padippakam.com



தும் குத்தல்' என்கிறார். அடுத்த இறக்கத்தில் 'நண்பர்களை அவமதிக்கிற வாய்வீச்சு' என்கிறார். கடைசிப் படியைத் தொட்டதும் 'இது ஈனத் தமிழர்களின் வேலை' என்று முடிக்கிறார். ஞானியின் ரசனைக்கு இப்படியொரு மகத்தான வீழ்ச்சி உண்டு என்பது நமக்குப் புதிய அனுபவம்தான்.

ஞானி, இந்த பிரபஞ்சத்துக் கவலைகளையெல்லாம் மார்க்ஸ் பெயரால் சுமக்கப் பிறந்தவர். அந்தச் சுமையை மறக்க, 'பார்ப்பனருள்ளும் நல்லவர் - நம்மவர் இருக்கின்றனர் 'என்று தனக்கான நண்பர்களை சேகரிப்பவர். இந்தத் தேட்டத்திற்கு மேல் கவிதாசரணுக்குள் இருக்கும் நண்பனை அவர் தேடத் தயாரில்லை. அவடைய சார்பு அதை அனுமதிக்கவில்லை.

கவிதாசரணின் சார்பு என்ன என்பது ஞானிக்குத் தெரியவில்லை. சார்பு தெரியாதவர்களை அவர் மனிதர்களாகவே மதிப்பதில்லை. மதிக்காமலா இத்தனை நீளமான கடிதம் என்று கேட்டுவிடாதீர்கள். நீளக் கடிதம் அவர் ஒளி வட்டத்தை உயர்த்திப் பிடிக்கத்தான்; மதிக்க அல்ல.

ஈனப்பட்டியலுக்குப் பின்னும் அவருக்குச் சொல்ல இருப்பது தான் சிரிப்புக்குரிய சிறப்பு. "அருள் கூர்ந்து மன்னிக்க வேண்டும். தமிழ் இன அறிவாளர் வட்டத்திலிருந்து என்னை வெளியேற்றும் முயற்சி வேண்டாம். தமிழ் அறிவாளர்கள், படைப்பாளிகள் ஒன்று கூடி ஆரோக்கியமான விவாதங்களில் ஈடுபட வேண்டும். இதற்கு கவிதாசரண் முயற்சி செய்ய வேண்டும்."

பார்ப்பனியக் கூறுகள் எல்லாரிடமும்தான் உண்டு. பலருக்கு அது புரிபடுவதில்லை. ஞானி அப்படியில்லை. தனக்கான பார்ப்பனியக் கூறுகளைத் தேர்ந்து, தொகுத்து, வளர்த்து, சேமித்துக் கொண்டிருப்பவர். சான்று: மேலே உள்ள கடிதத்தின் கடைசிப் பகுதி.

— மார்க்சியத்திற்கு சாதி பற்றிய பார்வை இல்லை. —பொருளியலைக் காட்டிலும் முதன்மை ஆற்றல் பெற்ற சக்தியா சாதி? —இந்தியாவில் எத்தகைய பொருளியல் சூழல், சாதி, மதம், பார்ப்பனியம் ஆகியவை தங்கி செயல்படுகின்றன, என்பது பற்றிச் சரியான பார்வைகளைத் தருவது மார்க்சியம்தான். —தமிழகச் சூழலில் பெரியாரியத்திற்கு எதிர்நிலை எடுப்பதை நான் தவிர்த்து வந்திருக்கிறேன். சாதி எதிர்ப்பு, மத எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பில் முடங்கிவிடும் பெரியாரியம். —இட ஒதுக்கீடு, முதலாளிய தொழில் முறை ஆகியவை சாதியுணர்வைத் தக்க வைப்பதோடு வளர்த்தும் வருகின்றன. —இட ஒதுக்கீட்டை நான் மறுக்கவில்லை. தலித்தியத்திற்கு எதிராக நான் ஒரு சொல்கூட எழுதியதில்லை. —தலித் இலக்கியத்திற்கு உலகப் பார்வை இல்லை. — சாதி, மதம், பார்ப்பனியம் எவ்வாறு தோன்றின, நிலை பெற்றன என்ற ஆய்வை நாம் சுருக்கிவிட வேண்டும்.—

படிப்பகம்

www.padippakam.com



ஞானியின் இக்கருத்துகளைப்பற்றி நிறைய விவாதிக்கத்தான் வேண்டும். நண்பர்கள் செய்யலாம். நாமும் நிதானமாகச் செய்வோம்.

அடிப்படையில் ஞானி ஞானியாய் இருக்கிறாரா, தனி மனிதனை மரியாதை செய்யத் தெரிந்தவரா என்பது பற்றி எனக்கோர் ஐயம் எழுந்துள்ளது. அதை நண்பர்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

'லயம் - ஏப்ரல், 1995' இதழில் பிரேமிள் பேட்டி வெளியாகியுள்ளது. அதில் கால. சுப்ரமணியத்தின் ஒரு கேள்வி இது.

கா. சு. : முன்றில் இப்படிச் செய்தால் கவிதாசரண் அப்பட்டமாகவே ஒப்பிக்கிறது. சு. ரா. பற்றி எழுதியவர் பெயரில்லாமல் கவிதாசரண் ஒரு கட்டுரை வெளியிட்ட போது, உங்கள் கட்டுரையா என்று ஞானி என்னை விசாரித்தார். நான் கொஞ்சம் படித்துப் பார்த்துவிட்டு இல்லை என்றேன். அப்படியானால் உங்கள் கருத்துகளை வாங்கி எழுதப்பட்டிருக்க வேண்டும் என்றார் ஞானி.

நீண்ட பேட்டியில் இதைப் பிரித்தெடுப்பதால் கொஞ்சம் விளக்கம் தேவையாகிறது. அதாவது கவிதசாரணில் வந்த 'சுந்தரராமசாமியின் சொந்த முகம்' என்னும் கட்டுரை பிரேமிள் எழுதியதா என்று ஞானி கேட்க, கால. சுப்ரமணிம் இல்லை என்க, அப்படியானால் பிரேமிள் கருத்துகளை வாங்கி எழுதப் பட்டிருக்க வேண்டும் என்று ஞானி சொன்னதாகப் பதிவு.

சு. ரா. பற்றிய கவிதாசரண் கட்டுரையைப் பிரேமிள் தன் கட்டுரையின் அப்பட்டமான காப்பி என்று சொல்லுகிறார். ஆமாம் என்று ஞானி சாட்சி சொல்லுகிறார். இவ்வளவுதான் விஷயம்.

'சு. ரா. வின் சொந்தமுகம் கட்டுரையைப் படித்ததும் கோபம் கொண்டு கடிதம் எழுதியதோடு, தொலை பேசியிலும் பின்னிப் பின்னி விவாதித்தவர் 'ஜீவராம்சுந்தர்' என்னும் நண்பர். இளங் கவிஞர். சு. ரா.வை உயர்ந்த இடத்தில் வைத்திருப்பவர். பிரேமிளுக்குத் தன்னை சிஷ்யனாய் பாவித்துக் கொண்டவர். அதன் காரணமாகவே 'ஜீவராம்சுந்தர்' என்று பெயர் வைத்துக் கொண்டதாகச் சொன்னார்.

'லயம்' பேட்டி வந்ததும் அவர் என்னைத் தொலை பேசியில் தொடர்பு கொண்டு (இன்னும் தொலைபேசி, கடிதத் தொடர்பு தான்) ''பேட்டியைப் படித்தீர்களா? உங்கள் எதிர்வினை என்ன?'' என்று கேட்டார். ''நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை நண்பரே. பிரேமிளோடு விவாதத்தைத் தவிர்க்கிறேன். என் கோபம் காரணமாகவோ, என் மீதான பிறர் கோபம் காரணமாகவோ நான் முடக்கப்படுவதை விரும்பவில்லை,'' என்றேன்.

''அப்படி இல்லை. இதற்கு நீங்கள் பதில் சொல்வது நல்லது.

படிப்பகம்

www.padippakam.com



உங்கள் கட்டுரையோடு எனக்குள்ள முரண்பாடு தீராது. ஆனால் அது உங்கள் கட்டுரை. பிரேமிள் குணம் தெரியாது. இன்னும் ஐந்து வருஷம் கழித்து, பத்து வருஷம் கழித்துக்கூட 'கவிதா சரண்' என் எழுத்தை திருடி எழுதிவிட்டான்' என்று சொல்லக் கூடியவர். அதனால் நீங்கள் பதில் சொல்வது நல்லது.''

''அப்படியா சொல்கிறீர்கள்? இதில் பெரிய அதிசயம் என்ன வென்றால், பிரேமிள் எழுத்தை 'லயம்' இதழில் 'மீறல்' பேட்டியின் தொடர்ச்சி என்று போட்டு வந்ததிலிருந்துதான் நான் படிக்கி றேன். அதற்கு முன் அவரைப் படித்ததில்லை. படிக்க கிடைத்த தில்லை என்பதால்தான். என் வட்டம் அப்படி. எனக்குத் தெரிந் திருந்தவர்கள் 'தீபம்' நா. பா. வும் அவர் இதழுந்தான். சிற்றி தழ்களோடான தொடர்பு என்பது கவிதாசரண் தொடங்கிய பின் னர்தான். சு. ரா. பற்றி பிரேமிள் எப்போது எழுதினார், என்ன எழுதினார், என்பது இன்னமும் தெரியவில்லையே, சுந்தர்?''

''அதை விடுங்கள். இப்போது பதில் சொல்வது அவசயம்,''

''சரி. இப்படிச் செய்தால் என்ன? ஞானியின் பெயர் இதில் இழுக்கப்பட்டிருக்கிறது. அவரிடம் கேட்டு உண்மையறிந்து அதைப் போடுவதோடு நிறுத்திக் கொள்கிறேனே.''

''செய்யுங்கள்.''

25 - 4 - 95ஆம் நாள் ஞானிக்கு, இதில் அவருக்குள்ள மெய் யான தொடர்பினைக் கேட்டு, பதில் போடுமாறு எழுதினேன். இன்றுவரை (19 - 7 - 95) அதற்கான பதில் வரவில்லை. இங்கு வெளியாகியுள்ள இரு கடிதங்களும் அதற்கு முன்னர் அவர் எழுதி யவை. இடையில் 16 - 7 - 95இல் 'சிற்றிதழ் அரங்கம்' என்றோர் அமைப்பின் கூட்டம் நடப்பதாக அச்சிட்ட அறிக்கை ஞானியின் பெயரால் எனக்கு அனுப்பப்பட்டது.

ஞானி பதில் போடவில்லை; விரும்பவில்லை என்பது கால. சுப் ரமணியத்திடம் என் கட்டுரை புற்றி அவர் சொன்னது உண்மை என்றாகிறது. அந்த உண்மையை ஏற்றுக் கொள்கிற நேர்மையோ பெருந்தன்மையோ அவரிடம் இல்லை என்றாகிறது. மறுக்கிறார் எனில் பிரேமிளுக்கு அவர் பதில் சொல்லியாக வேண்டுமாகிறது.

ஞானியாய் இருப்பது பெரிய சமாச்சாரமில்லை.

பாசாங்கில்லாத ஒரு மனிதனாக இவர் இருக்கிறாரா என்பதே கேள்வி.

கவிதாசரணில் என் எழுத்துகள் யாவும் பெயர் போடாமல் தான் வருகின்றன. இதழாசிரியனுக்குரியது என்று தெரியா மலா போகும் என்பதால்தான். இரண்டு இதழ்களுக்கு முன் ஞானி பற்றிய என் குறிப்பும் பெயரில்லாமல்தான் வந்தது. இன்றுவரை அப்படித்தான். இனியுந்தான்.

படிப்பகம்

www.padippakam.com



இதழ் தொடங்கிய நாளிலிருந்து ஞானிக்கு அனுப்பப்படுகிறது. அவரும் தன் இதழை அனுப்புகிறார். கவிதாசரண் பற்றி விமர்சித்து அவர் இதுவரை தனியாகக் கடிதம் எழுதியதில்லை. 'இதழ் பற்றி சிறப்பு விமர்சனத்துக்காக' கவிதாசரணும் யார் கதவையும் தட்டியதில்லை.

இதழைப்பற்றி, என் எழுத்தைப்பற்றி, என்னைப்பற்றி ஏதேனும் சொல்ல விரும்பினால், ஞானி எனக்கே எழுதியிருக்கலாம். குறிப்பாக இக்கட்டுரை பற்றி இப்படியொரு கருத்து இவருக்குத் தோன்றியதும் என்னைத் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். இப்போது பிரச்சினை என்று வந்து, நான் தொடர்பு கொண்டதும், தன் நிலைப்பாட்டை விளக்கி எனக்கு எழுதவாவது வேண்டும்.

செய்யவில்லையே.

இவரைப் போலவோ, பிரேமிளைப் போலவோ, நான் எல்லாம் தெரிந்த ஞான பண்டிதனாகத் துருத்திக்கொண்டு நின்றதில்லை; அந்த ஒரு கௌரவமான வேலையாக நினைத்ததுமில்லை.

ஆனால் என் ஓர்மையைக் கேள்விக்குள்ளாக்க எந்தக் கயவனையும் அனுமதிப்பதில்லை.

ஞானி ஒன்று செய்யலாம்: சுந்தர ராமசாமி பற்றிய என் கட்டுரையையும் பிரேமிள் எழுதியதாகச் சொல்லப்படும் விஷயத்தையும் தன் 'நிகழ்' இதழில் அருகருகே வெளியிட்டு, ஒப்பீட்டாய்வு மூலம் உண்மை கண்டறிந்து உலகுக்குப் பறை சாற்றலாம். அல்லாமற் போனால் தன் மார்க்சிய நெம்புகோலால் உலகைப் புரட்டிக் கொண்டிருப்பதோடு, பார்ப்பனிய அமுதக் கடைசலில் நச்சுமுறிவுக்கான பச்சிலை வைத்தியத்தைத் தொடர்ந்து நடத்தலாம்.

கவிஞர் இன்குலாப் வீட்டுத் திருமணத்திற்கு வந்திருந்த நண்பர் அக்கினிபுத்திரன், பாரதியார் பல்கலைக் கழகத்தில் மார்ச்சு 2ஆம் நாள் நடந்த தலித் இலக்கியக் கருத்தரங்கில் அவர் சொன்ன ஒரு கருத்தை- ஞானி தன் 'நிகழ்- 29இல்: —கருத்தரங்கில் நண்பர் அக்கினி உதிர்த்த பொன்மொழி: "இன்று தமிழன் இலக்கியம் என்பது தலித் இலக்கியம்தான்," என்று எள்ளலாகக் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டி, "இதுதான் ஞானி செய்யும் சகுனி வேலை," என்றார். எனக்கு வருத்தமாயிருந்தது. "உங்கள் குருநாதரின் மேல் உங்களுக்கு என்ன கோபம் இருந்தாலும் சகுனியைக் கேவலப் படுத்த வேண்டாமே," என்று மட்டுமே என்னால் சொல்ல முடிந்தது. வேறென்ன சொல்ல? ஞானியின் ஈனப் பட்டியலில் இது மாதிரி விஷயங்கள் இடம் பெறுவது அவருக்கு ருசிக்காது.

---

**அடுத்த இதழ் அக்டோபர் 21இல் ஐந்தாம் ஆண்டுத் தொடக்க மலராகவும் தமிழியல் இயக்கம் பற்றிய செயல் திட்டத்தோடும் வெளி வரும். ஆகஸ்ட் 15இல் ஆய்வுப் பணிக்கான கூட்டம் கவிதாசரண் இலக்கிய வட்டம் சார்பில் நடைபெறும். விவரங்களுடன் அழைப்பு வரும். ஆ-ர்.**

படிப்பகம்

www.padippakam.com

—தொடர்ச்சி

இங்கு எதிர்மறையில் இயங்குகிறது. இதைத் தொடர்ந்து "கனவுகள்" என்ற கவிதையின் இறுதி வரிகள்:

ஏழு வருஷமாச்சு அம்மா இறந்து
ஏன் வரலை இன்னுமென் கனவில்

—எல்லாவற்றையும் தாண்டித்தான் வாழ்கிறோம். இங்கும் ஒரு தத்துவச் சாயல்.

பல கவிதைகளில் இவ்வாறு ஒரு தத்துவச் சாயல்.

சில கவிதைகளில் சம கால வாழ்வில் வார்த்தைகள் ஒரு சவுக்கடிபோல் சுளீரென்று சாடும் ஒரு தீவிரப் பாய்ச்சல்.

பொதுஜனம்

இறுதிப் பகுதி;

அரசியல் நாய்க்கு
எல்லாம் பொதுஜனம்
ஆட்டு மந்தை.
இளிச்சவாய்க் கூட்டம்

பசுத்தோல்

தொகுப்பிலேயே சிறந்த கவிதை. கலாப்ரியாவும் இதைச் சுட்டிக் காட்டி இருக்கிறார். என் வழியில் இக்கவிதையின் சிறப்பென்ன? இங்கு உருவகம் எவ்வாறு செயல்படுகிறது? பிருஷ்டம் தடவுவது எதன் குறியீடு?
—பசுத்தோல் வெறும் தோலாகும் விந்தை.

இருத்தல்

முதல் இரண்டு கவிதைகளில் சப்தகோலம் நன்றாக உருவாகியிருக்கிறது.

வேலியோரப் பூக்கள்
வெகுண்டு வாடுகின்றன.
தார்குடித்த சாலைகள்
அக்னியை உமிழ்கின்றன.

—பின் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

Kavithaasaran, Ap. My. Jn. Jly. '95 Regd.No. TN/MSN/7
CREATIVE LITERARY MONTHLY IN TAMIL. R. Dis. 5479

இங்கும் ஒரு தத்துவச் சாயல். சப்தம் உள்ளடங்கியிருந்தாலும் ஒரு வீச்சு.

ஒரு அபூர்வ அழகைக் காண்பிக்கும் சில வரிகள்:

**அம்மா**

**பாசத்தை நூலாக்கி
பார்த்துப் பார்த்துப் பின்னிய
பச்சை ஸ்வெட்டரும்.**

சில கவிதைகளைக் காலம் தாழ்த்தி எழுதிப் பார்க்கலாம். மொத்தத்தில் ஒரு நல்ல தொகுதி. தொடர்ந்து எழுதுங்கள். உங்கள் கவிதைகளை எனக்குப் படிக்க வாய்ப்பு தந்ததற்கு நன்றி.

இவ்வாறு எழுதிக்கொண்டே போகலாம். எனக்கு வயது 72 ஆகிவிட்டது. முன்போல் ஊர்ஜிதமாக இயங்க முடியவில்லை. இங்கு என் கட்டுரையை முடிக்கிறேன்.

என் விமர்சனக் குறிப்புகள் குறித்து உங்கள் குறிப்புகளை எழுதுங்கள்.

அன்புடன்,
**நகுலன்.**

## கவிதாசரண் பார்வையில்...

**நிஷாவின் கவிதைகளை வாசிக்கும்போது ஒரு ராட்சசனை இனிக்க இனிக்க மென்று சுவைத்து முடிவில் நாவிலேயே தேங்கிப்போவதோர் ஏக்கம் துவர்க்கிறது. யோசிக்கையில் ராட்சசனும் துவர்ப்பும்தான் அபூர்வமாய் அழகு சேர்க்கிறார்கள்.**

Printed by Mrs. Kavithasaran at 31, T.K.S. Nagar, Madras-1
and Published at 580, T.H. Road, Madras-21 & Edited by
Kavithaasaran.

படிப்பகம்